ஏப்ரல் 19 - 25, 2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## கருணாவை வெளியேற்றி போராளிகளை மீட்கும் போர்

# மூன்றே நாட்களில் முடிவு





## அஞ்சி ஓடும் சிறிசுகள்

# புதிய அரசின் ஆரம்பமே கோணல் அதிகாரப் பகிர்வில் குத்துவெட்டு

கடந்த பல வாரங்களாக நாட்டில் இருந்த பரபரப்பு இப்போது தணிந்துவிட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

பிரதமர் தெரிவு செய்யப்பட்டுவிட்டார். அமைச்சரவை தெரிவு செய்யப்பட்டுவிட்டது. பிரதி அமைச்சர்கள் தெரிவும் இடம் பெற்றுவிட்டது.


மஹிந்த

இனி தேர்தல் பிரசாரங்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அள்ளி, அள்ளி வீசிய வாக்குறுதிகளை புதிய அரசு நிறைவேற்றும் என்ற கனவுகளுடன் மக்கள் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் புதிய அரசு நாடாளுமன்றில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டும். அப்போது தான் மக்களுக்கு வாரிவழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும்.

இந்த விடயங்கள் எல்லாம் நடைபெறுவதற்கு முன்னரேயே புதிய அரசு தனது உள்ளகப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சிக்கலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

கூட்டமைப்புக்குள் உள்ள பிரதான கட்சிகளான ஜே.வி.பிக்கும், ஸ்ரீ.ல.சு.க வுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றிவிட்டன. ''முதற் கோணல் முற்றும் கோணல்'' என்பார்கள். அது தான் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்ற வைபவத்தைக்கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில முக்கியஸ்தர்களும் ஜே.வி.பியினரும் பகிஷ்கரித்தனர்.

ஜனாதிபதி கதிர்காமரை நியமிக்கத் தீர்மானித்தார். ஜே.வி.பி யினர் அனுரா பண்டாரநாயக்காவை நியமிக்க வேண்டும் என்று கோரினர். ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ஷவே முறைப்படி பிரதமராக்கப்படல் வேண்டும் என்பது பொதுவான கருத்தாக இருந்தது.

இலங்கையின் அரசமைப்பு விதிகளின் படி பௌத்தர் ஒருவரே இந்தப் பதவியை வகிக்கும் தகைமைக்குரியவர் என்பதால் கதிர்காமர் ஓரங்கட்டப்பட்டார். கதிர்காமர் ஓரங்கட்டப்பட மேலும் பல காரணங்கள் இருந்தன. இறுதியில் ராஜபக்ஷ பிரதமர் பதவியை பொறுப்பேற்றார்.

ஆனால் ஜே.வி.பியினரோ அனுராவை பிரதமராக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் இன்றுவரை இருந்துவருகின்றனர். மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்கும் தினத்தன்றே தனது திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதத்தையும் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். அதே வேளை இலங்கை அரசமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் தமது பதவி ஒரு பியோன் பதவி போன்றது எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது பதவி நிரந்தரமற்றது என்பதையும் எந்த நேரத்திலும் அவரை விட்டுப் போய்விடும் என்பதையும் அவரது கருத்துக்கள் கோடி காட்டுகின்றன.

மறுபுறம் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க ஜே.வி.பி கிளர்ச்சியின் 33ஆவது ஞாபகார்த்த தினத்தன்று உரையாற்றும்போது, அநுரா பண்டாரநாயக்காவை இந்த நாட்டின் ஒரு சிறந்த பௌத்தர் என்று புகழாரம் சூட்டினார். அவரைப்பிரதமராக்காமல் விட்டது மாபெரும் தவறு என்றும் கூறினார்.


சந்திரிகா

ஜே.வி.பி.யின் ஆதரவு காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்களால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டது. மக்கள் ஐக்கிய சுதந்திரக்கூட்டமைப்புவெற்றிபெறுவதற்கு காரணமே ஜே.வி.பி தான். ஜே.வி.பியின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்றும் இல்லையெனில்வீதியில்இறங்கி போராட்டம் நடத்தப்படும் என்கிறது ஜே.வி.பி.

ஜேவிபியினருக்கு ஒதுக்கப்பட்ட நான்கு அமைச்சு பதவிகளும் இதனை எழுதும் வரை வெற்றிடமாகவே இருந்தன.அந்த அமைச்சுகளின் கீழ்வரும் மகாவலி அதிகாரசபை, திரைப்படக்கூட்டுத்தாபனம் போன்றவை அந்த அமைச்சுக்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளன.

ஜே.வி.பியினருக்கு வழங்கப்பட்டுள்ள நீர்ப்பாசனம், காணி, விவசாயம் போன்ற துறைகளுக்கு உட்பட்ட மகாவலி அதிகாரசபை –தேசியவளம், கலாசாரம் போன்றவற்றின்கீழ் வரும் திரைப்படக் கூட்டுத்தாபனம் – ஆகியவற்றை ஜனாதிபதி எவ்வித காரணங்களுமின்றி தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்திருப்பதும் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பாக தெரிவு செய்யப்பட்ட 66 உறுப்பினர்களில் 60 பேருக்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கியிருப்பதும் ஜே.வி.பி.யை மிகவும் ஆவேசம் அடையச்செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுவை உடனடியாக கூட்டு மாறு ஜே.வி.பி. யினர் ஜனாதிபதியை கோரியுள்ளனர்.

எவ்வளவுக்கு எவ்வளவு அமைச்சரவை மற்றும் அமைச்சுக்களைக் குறைக்க முடியுமோ அந்தளவுக்கு அவைகளை குறைக்க வேண்டும் என்ற பொதுவான முடிவுகள் இதன் மூலம் மீறப்பட்டுள்ளன என ஜே.வி.பியினர் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது ஜே.வி.பி.யினரை மேலும் சீற்றத்துக்குள்ளாக்கிவிட்டிருக்கிறது. ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர்களான விமல்வீரவன்ச, டில்வின் சில்வா, நந்தன குணதிலக போன்றோர் தமக்கு எந்தவித அமைச்சு பதவிகளும் வேண்டாம் என கூறியுள்ளனர். கம்பஹா மாவட்டத்திலும் கொழும்பிலும் களுத்துறையிலும் லட்சக் கணக்கான விருப்பு வாக்குகளை இந்த மூவரும் பெற்றுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து ஜே.வி.பி சகல விடயங்களிலும் தன்னை முதன்மைப் படுத்திக் கொள்ளும் வகையிலேயே செயற்பட்டு வந்தது. தேர்தல்பிரசாரங்களின் போதும் தனது உறுப்பினர்களுக்கு மட்டும் விருப்பு வாக்குகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டது. இதன் காரணமாக ஆரம்பம் முதலே சுதந்திரக் கூட்டமைப்புக்குள்பனிப் போர் நடந்து வருகிறது. ஆனால் இன்று அந்த முறுகல் நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அக்கட்சிக்குள் எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

ஜே.வி.பி.யினருக்கு வழங்கப்படும் நான்கு அமைச்சுக்களும் ஒரே கட்டடத்தில் அமைய வேண்டும் என ஜே.வி.பி. தரப்பில் கோரப்பட்டது. அமைச்சுக்களுக்கு விரயமாகும் பணத்தை குறைத்து அதை மக்கள் சேவைக்கு பயன்படுத்த முடியும் என்று அதற்குக் காரணம் கூறப்பட்டது.

இதே வழியை ஏனைய அமைச்சுக்களும் பின்பற்ற வேண்டும் என்பது ஜே.வி.பியின் கோரிக்கை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஜே.வி.பி. யினரின் ஆதிக்கமே அதிகமாகும். 2001 டிசெம்பர் தேர்லில் சுமார் ஐந்து லட்சம் வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி யினர் இந்த முறை 14 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளனர். சுமார் ஒன்பது லட்சம் வாக்குகளை கூடுதலாகப் பெற்றுள்ளனர். இந்த வளர்ச்சி ஜே.வி.பி.யினரை மேலும் உஷார்ப்படுத்தி இருக்கிறது.

மறுபுறம் கோட்டைப் பகுதியில் ஸ்ரீ.ல.சு. கட்சியினரின் பலம் வாய்ந்த தூணாகக் கருதப்பட்ட முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க கோட்டைப் பகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். கோட்டைப் பகுதியில் ஐ.தே.க.வின்


விமல் வீரவன்ச

பிரதான தூணாகக் கருதப்படும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்காவை விருப்பு வாக்குகளில் அத்தொகுதியில் தோல்வியடையச் செய்தவர் இவர். இவர் ஏற்கனவே எதிர்பார்த்திருந்த விளையாட்டுத்துறை அமைச்சு இவருக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக இவர் கட்சியின் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றி நாடாளுமன்றம் செல்வதற்கு முன்பே பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருகிறது.

நாடாளுமன்றம் கூடும் போது அதன் பெரும் பான்மையை நிரூபிக்க வேண்டும்.

105 ஆசனங்களுடன் நாடாளுமன்றம் செல்லும் சுதந்திரக் கூட்டமைப்பை ஜாதிக ஹெல உறுமய ஆதரிக்கும் என அக்கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார். அதாவது சுதந்திரக் கூட்டமைப்பில் சேராமல் வெளியிலிருந்து ஆதரவு வழங்குவதே அவர்களின் முடிவாகும். இந்த முடிவு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது இன்னொரு கேள்வி.

ஏதாவது ஒரு காரணத்துக்காக ஜாதிக ஹெல உறுமய, நாடாளுமன்றில் கொண்டு வரப்படும் பிரேரணையை ஆதரிக்காவிட்டால் அங்கு எதையும் நிறைவேற்ற முடியாமல் போகும் நிலை உருவாகும். சுதந்திரக் கூட்டமைப்பால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பிரதானமானவை மூன்று மாதங்களில் 30 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பு, அரச ஊழியர்களுக்கு மூவாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு, விவசாயிகளுக்கு உர நிவாரணம் ஆகியவையே.

இவற்றை குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியுமா என்பது கேள்விக் குறியாகும். எனவே இடம்பெறப்போகும் தொங்கு நாடாளுமன்றில் எவ்வேளையிலும் எதுவும் நடக்கலாம்.

- வரதன் -

# வாசகர் இதயம் பேசுகிறது

*வீ.ஆர். திரீஷா— உடையார்கட்டு.*

எட்டுத்திக்கும் சுடர் விட்டெரியும் என் அன்பான சுடரொளியே!

வாரம் தோறும் உன்னை எதிர்பார்க்கும் வாசகர்களில் நானும் ஒருவன். காலம் தோறும் நீ ஓங்கி சுடர்விட இறைவனை வேண்டுகிறேன்.

*எஸ்.இன்பராஜ்— மீசாலை.*

சுடர் ஒளியே! நீ தாங்கி வரும் கவிதைப் புனல், சிறுவர் அரங்கம், பித்தன் பதில்கள், அறிவை வளர்க்கும் சொற்சிலம்பம், நாட்டில் நடக்கும் நிலவரங்களை அலசும் அரசியல் அம்பலம், சினிமாத் துளிகள்— அனைத்து அம்சங்களும் மிக மிக சுப்பர். வாழ்க உன் புகழ்; வளர்க உன் பணி.

*நேசன்— நெல்லியடி.*

உனைக்காணாவிட்டால்
கண்தூங்காது சுடர் ஒளியே
உன்னை நேரில் கண்டால்
இமை மூடாது சுடர் ஒளியே
உன்னைப்பார்த்துக்கொண்டே
நான் வாழ வேண்டும்
நீ சுடர் ஒளியாய் வலம்வர
நான் நிழலாய் வர வேண்டும்
சுடர் ஒளியில் என் ஆக்கம்
சிக்கித்தவிக்க வேண்டும்
சுடர் ஒளியே
என் இதயத்தில்
உன் நாமம்
தான் கேட்க வேண்டும்.
அதற்காக நீ
வீறாப்புடன்
தொடர்ந்து
வருவாயா?



*நிஷாந்தி— கரவெட்டி.*

உனது ஆக்கங்கள் அனைத்தும் என்னைக் கவர்ந்தவையே. உன் பணி மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

*ஏ.ரதி— வட்டுக்கோட்டை.*

உனது நீண்ட நாள் ரசிகை நான். உனது கவிதைப்புனல் , வடபுலம், மசாலாமிக்ஸ் அனைத்தும் அற்புதம். உனது பணி தொடர உன் புகழ் உயர வாழ்த்துகிறேன்.

*வி.சீலன்— வத்தளை.*

ஒவ்வொரு ஞாயிறு தோறும் உன் வரவுக்காய்க் காத்திருக்கும் பல்லாயிரம் ரசிகர்களுள் நானும் ஒருவன். அனைவரது ஆக்கங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் உனது பரந்த மனப்பான்மையை நான் வரவேற்கிறேன். உனது பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

*மு.சிவா— வட்டக்கச்சி.*

என் இதயம் கவர்ந்த சுடரே! உனது ஆக்கங்கள் அனைத்தும் மிகச்சிறந்தவை.. அவற்றினுள் டேஸ்ட்கடை, கவிதைப்புனல், தேரடி அரட்டை என்பன என்னைக் கவர்ந்தவை. நீ நீடூழி வாழ வாழ்த்துகிறேன். சுடர் ஒளியே நீ வாழ்க!


அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH




## தப்புத்தாளம் போடும் தலைமை வாத்தி ஐயோ பாவம் ஆறுமுகசாமி

''என்னதான் இருந்தாலும் மலைச்சந்திரன் சந்திரன்தான். சொல்லவேண்டியதை சொல்ல வேண்டிய நேரத்தில் துணிச்சலுடன் சொல்லுவதில் அவருக்கு நிகர் அவர் தான்.'' என்றார் அந்தப் பள்ளிக்கூட தலைமை உபாத்தியார்.

''என்ன ஐயா! இவ்வளவு காலமும் ஆறுமுகசாமியின் அசைக்க முடியாத தீவிரபக்தராக இருந்த நீங்கள் திடீரென மலைச்சந்திர புராணம் பாட ஆரம்பித்து விட்டீர்களே'' என்றார் நண்பர்.

''அடடே வாங்க சார்! நீங்கள் இருந்ததைக் கவனிக்கவில்லை, எப்படி சுகமாக இருக்கிறீங்களா?'' என திசையை மாற்றி வாசிக்க ஆரம்பித்தார் அந்தத் தலைமை உபாத்தியார்.

''சுகத்துக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. நல்ல சுகமாகவே இருக்கோம். உங்களுக்கு ஏன் இப்படி உதறல் எடுக்கின்றது. திடீர் பித்தமா?'' என்று கிண்டினார் நண்பர்.

''அப்படி ஒன்றும் இல்லைசார். தேர்தல் நேரத்தில் ஓடி ஓடி வேலை செய்தது ஒரே அலுப்பாக இருக்குசார்.'' என்றார் அந்த உபாத்தியார்.

''என்ன ஐயா! உங்களுக்கு அலுப்பாய் இருக்கு என்கிறீர்கள். பொதுசனங்கள் எல்லாம் உங்கள் பேச்சைக் கேட்கவே அலுப்பா இருக்கின்றது என்று சலித்துக் கொள்கின்றார்களே'' எனத் திருப்பிக் கொடுத்தார் நண்பர்.

''என்ன சார் இப்படிச் சொல்லிப்பிட்டீங்க! நாங்க என்ன சொல்லக் கூடாததை சொல்லியா போட்டோம்'' என்று இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்பது போல் கேட்டார் உபாத்தியார்.

''இல்லை ஐயா, உங்களுக்கும் உங்கள் தலைவர்மார்களுக்கு மாதிரி ஞாபகமறதி வந்துவிட்டதோ. நீங்க தானே சார் தோட்டம் தோட்டமாப் போய், இந்த மலைச்சந்திரன் அடிக்கடி வன்னி, கிளிநொச்சி என்று போய் ஒன்றாய் இருந்த அமைப்பை இரண்டாக்கிப் போட்டார் என்று ஒப்பாரி வைத்தீர்கள். இப்ப என்னடா என்றால் ரொட்டியைப் புரட்டிப் போட்டு விட்டீர்களே'' என்றார் நண்பர் சற்று சூடாகவே.

''ஐயோ அதை சொல்லுறீங்களா சார். நான் எங்கே சொன்னேன்? எங்க தலைவர் ஆறுமுகசாமிதான் அப்படிச் சொன்னார். அப்படி அவர் பேசியதைத்தானே நாங்களும் சொன்னோம். நீங்க என்னடான்னா நான் சொன்ன மாதிரி இல்லை குற்றம் கண்டுபிடிக்கின்றீர்கள்.'' என்றார் குழைவுடன் அந்த உபாத்தியார்.

''அது சரி உங்களை எப்படிக் குற்றம் சொல்ல முடியும்? பாடசாலையில் மாணவர்கள் கஷ்டப்பட்டு டியூசன் போய்ப்படித்து பாஸாகிவிட்டால் ஆகா நாங்கள் கஷ்டப்பட்டு படித்துக் கொடுத்ததால் தான் சித்தி அடைந்தார்கள். அப்படியே பெயிலாகிவிட்டால் மக்குகள் இவர்களுக்கு ஏன்படிப்பு என்று நேரத்துக்கு ஏற்றமாதிரி தாளத்தை மாற்றிப் போடும் உபாத்தியார் கூட்டம் தானே நீங்கள்'' என மீண்டும் சீண்டினார் நண்பர்.

''என்னசார் இப்படி பப்ளிக்பிளேஸில் மானத்தை வாங்குகின்றீர்களே!'' என்று தன் னடக்கத்துடன் சுதியை குறைத்து வாசித்தார் அந்த உபாத்தியார்.

''அதுசரி போனது போகட்டும் இப்போதைய லேட்டஸ்ட் தெரியுமே'' என்ற பீடிகையுடன் நிறுத்தினார் நண்பர்.

''நீங்கள் சொன்னால்தானே தெரியும். கெதியா சொல்லுங்கசார்'' என்று ஆவலுடன் கேட்டார் உபாத்தியார்.

''அப்படி வாங்க வழிக்கு. முந்தி சொன்னீங்கள்தானே இந்த மலைச்சந்திரன் போனதாலதான் ஒரே இயக்கம் இரண்டாப் போச்சு என்று. இப்ப சொல்லுவீர்களா தேர்தலுக்குப் பின் மலைச்சந்திரன் வன்னிக்குப் போனதால்தான் துரோகி கருணா விரட்டி அடிக்கப்பட்டார் என்று. இப்ப அவர் போய் வந்த பின்புதானே துரோகி கருணா விரட்டி அடிக்கப்பட்டார். அந்த கதையையும் ஆறுமுகசாமியிடம் சொல்லி, தோட்டம் தோட்டமாக சொல்லச் சொல்லுங்க பார்ப்போம்'' என்று உசுப்பி விட்டார் நண்பர்.

''என்னசார் மெதுவாக சொல்லுறீங்கள். கட்டாயமா இதை தோட்டம் தோட்டமா மட்டும் இல்ல, வீடு வீடா சொல்லுவோம்'' என்றார் தப்புத்தாளம் போடும் அந்த உபாத்தியார்.

''அப்படீன்னா மாகாண சபை தேர்தலுக்கு மலைச்சந்திரனுக்கு நீங்களே ஒரு பிரசாரத் தலைப்பை கொடுத்து விட்டீர்கள் இல்லையா?'' என்று கூறி விடைபெற்றார் நண்பர்.

## எண்ணெயும் தண்ணியும் ஒன்று சேருமா உடைந்த கண்ணாடியை ஒட்ட முடியுமா?

மாகாணத்தையே ஆள்பவராக இருந்தாலும் எனக்கு லிப்டன் சுற்றுவட்டம்தான் நிரந்தரமானது என்று வெளிப்படையாகவே கூறுபவர் மௌனமான அந்த நானா.

எதற்கும் துணிந்தவரான அந்த நானா கூட ஓடி ஓடி களைத்து விட்டாராம். அப்படி என்னதான் பிரச்சினை என்பதை அறிய எமக்கும் ஆசைதானே. மெதுவாக நம்பரை சுற்றினார் நண்பர்.

என்ன ஆச்சரியம் வழமையாக உதவியாளர் தான் டெலிபோனைத் தூக்குவார். ஆனால் இன்று நானாவே எடுத்து விட்டார். ''ஹலோ வை சோ லேட் ஐ வோஸ் வெயிட்டிங் போர் யுவர் கோல்'' என்றார்.

இப்போ நண்பருக்கும் சற்று அதிர்ச்சி வேறு ஒருவருடைய டெலிபோன் அழைப்புக்காக நானா எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்ட நண்பர் வணக்கம் ஐயா, ஐயாம் சோ அன்ட் சோ என அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''அடடே நீங்களா தம்பி! வணக்கம் புத்தாண்டு வாழ்த்துகள் எப்படி புதுவருசம் எல்லாம்'' என்றார் நானா.

''ரொம்ப நன்றி ஐயா. நீங்கள் எப்படி சுகமாக இருக்கீங்களா? என்றார் நண்பர்.

''அல்லாட புண்ணியத்தால ஒரு குறையும் இல்ல நல்ல சந்தோஷமா இருக்கேன். ஆனா கட்சிக்குள் தான் இப்ப பெரிய பிரச்சினையாப் போச்சு'' என்றார் நானா.

''என்ன ஐயா கட்சிக்குள் பிரச்சினையா? என்ன அப்படி தலைபோகிற பிரச்சினை இப்பதான் வெத்தி எடுத்து அரசாங்கமும் அமைச்சாச்சே'' என்றார் நண்பர்.

''தம்பி என்ன கிண்டலா? ஒன்றும் தெரியாதமாதிரிகேட்டு வம்பு பண்ணுறீங்க. நீங்களே பாருங்க எங்கட கட்சியிலமட்டும் 66 பேர் எம்.பியாக இருக்காங்க. அதுல 60 பேர் அமைச்சராகவும், பிரதிஅமைச்சராகவும் இருக்காங்க. மீதி ஆறுபேர் மட்டும் சாதாரண எம்.பிக்களாக இருக்காங்க. இவுங்களுக்கு வயிறு எரியாதா என்ன?'' என்று கேட்டு நிறுத்தினார் நானா.

''ஏங்க ஐயா வயிறு எரியனும் சம்பாவுக்கு ஒருவர், நாட்டரிசிக்கு ஒருவர், கொச்சிக்காய்க்கு ஒருத்தர், பச்சை கொச்சிக்காய்க்கு ஒருத்தர், சின்ன வெங்காயத்துக்கு ஒருவர், பெரிய வெங்காயத்துக்கு ஒருவர் என இந்த ஆறுபேருக்கும் அமைச்சர் பதவிகளைக் கொடுத்து அவர்கள் வயித்திலும் பால்வார்க்கலாமே'' எனச் சீண்டிவிட்டார் நண்பர்.

''என்ன தம்பி நீங்களும் சமயம் பார்த்து என் தலையிலேயே சூடு போடுறீங்களே. இந்த போஸ்டர் காரனுங்க மந்திரி பதவி கூடிப் போச்சி. எங்களுக்கு வேண்டியதை குடுக்கல. நாங்க சொன்னவரை பிரதமராக்கல என்று போர்க் கொடி தூக்கிட்டு ஆடுறாங்கள். அம்மாவுக்கும் இப்பதான் இவுங்களோட வேசம் தெரியுது'' என்றார் நானா ஆதங்கத்துடன்.

''ஆமாம் போனவாரம் கூட கொலை கலாசாரத்தை ஆரம்பித்த 33 ஆவது வருட நிறைவு விழாவுல கூட அந்த போஸ்டர் கட்சித் தலைவர் கிழிகிழி என்று கிழித்து விட்டாராமே'' என மெதுவாகத் தூண்டிலைப் போட்டார் நண்பர்.

''சரியா சொன்னீங்க! இப்ப அது தான் பெரிய பிரச்சினையாப் போச்சி. எதுக்கு கூப்பிட்டாலும் ஒத்து வரமாட்டேங்கிறாங்க. ஓடி ஒழிந்து கொள்றாங்க. அமைச்சர் பதவியைக் கூட பொறுப்பேற்காது இழுத்தடிக்கிறாங்க. அவுங்களோடத்தான் இப்ப நான் மாரடித்துக் கொண்டு இருக்கேன்'' என்றார் நானா.

''என்னங்க ஐயா ஒருத்தருக்கு ஒருத்தல் முஷ்டியை முறுக்கிக் கொண்டு வரும் ஆசாமிகளை எல்லா மாகாணசபையில் பெட்டிப் பாம்பாக்கி விட்டீர்கள். இது உங்களுக்கு ஒரு பெரிய விடயமா?'' என உசுப்பிவிட்டார் நண்பர்.

''தம்பி அங்க இந்த சந்தானயும் இல்லை மந்தானையும் இல்லை. அதனால் புரப்ளம் இல்லை. ஆனா இங்கே தானே சண்டிக்கட்டும், சிண்டுபிடியும் ஆரம்பித்திருக்கு. இதப் பத்தித்தான் மூணு நாளா அலைஞ்சிக் கிட்டு இருக்கேன். அவனுவ லோட டெலிபோன் போலை தான் எதிர்பார்த்து இந்தேன். அப்ப தான் நீங்க வந்து மாட்டிக்குட்டீங்க'' என்றார் நானா.

''அப்படீன்னா நீங்க முந்தி சொன்ன மாதிரி. எண்ணெயும் தண்ணியும் ஒன்று சேராதென்று இப்பும் சொல்லுறீங்களா? என்றார் நண்பர்.

''தம்பி இப்பவே எழுது வைச்சிக்கங்க கடைசி வரையும் சரிப்போவாது. இன்ஸா அல்லா பொளைச்சி இருந்தா நாளைக்குப் பார்ப்போம்'' என்று போனை வைத்தார் அந்த மௌனமான நானா.

## ஐயா தெரியாதையா இப்படிக் கழுத்தை அறுப்பானுங்க என்று டேக் இட் ஈஸி

அதி உயர் மன்றையே ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருந்தவர் அந்த சகல் கலா வல்லவன். எந்த மொழி என்றால் என்ன, எந்த விடயம் என்றால் என்ன அத்தனையும் விரல் நுணியில் வைத்து வாதிடுவார். கேள்வி கேட்பவர்களை வாயடைக்கச் செய்வதில் பலே சூரப்புலி.

இந்த சகல கலா வல்லவன் இல்லாத மன்றம் சோபை இழந்து போகும். உப்பில்லாத சாப்பாடாகிவிடும்.

ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் ஏக காலத்தில் பாராட்டும் ஒரே மனிதர். வாழ்த்த வேண்டுமா இல்லை வீழ்த்த வேண்டுமா எதை என்றாலும் கவிதையாக்கி விடும் கவிஞன்.

அண்மையில் நடந்த அதி உயர் மன்றுக்கான தேர்தலின் போது சமாதான நாயகனுடன் 120 கூட்டங்களுக்குமேல் மேடை ஏறிச் சாதனை படைத்தவர்.

மும்மொழிகளிலும் முழக்கமிட்டு சாதனை படைத்த இந்த மனிதருக்குத் தேர்தலின் பின்னரே ஏற்பட்டதெல்லாம் வேதனையும் சோதனையும் தானாம்.

பதின்மூன்று வருடங்களின் பின்பு முதன் முறையாக நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பு தட்டிப் பறிக்கப்பட்டதாம்.

அப்படி இருந்தும் கூட இந்த விசுவாசமான மனிதர் வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்காக கட்சிப் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

''என்ன ஐயா இவ்வளவு தூரம் வேதனைப் படுத்தப்பட்டபோதும் எதுவுமே நடக்காதது போல் இப்படி சிம்பளாக இருக்கின்றீர்களே!'' என்றார் நண்பர்.

''மச்சான் இது எல்லாம் ஒரு கொடை எனது கைகளிலும் கறை இல்லை, மனதிலும் கறை இல்லை. தூய்மையாகவே இருக்கின்றேன்.

கொடுப்பவனும் இறைவன், எடுத்துக் கொள்பவனும் இறைவன்தான். கொடுக்கும் போது மகிழ்ச்சி அடைகிறோம். அதை எடுக்கும் போது மட்டும் ஏன் கவலைப்பட வேண்டும். அதையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பக்குவம் எனக்கு நிறையவே உண்டு. அதனால் தான் அன்று போல் இன்றும் சந்தோஷமாக இருக்கின்றேன். டேக் இட் ஈஸி''என்றுவிடை பெற்றார் அந்த சகலகலா வல்லவன். உண்மையாகவே அவர் உயர்ந்த மனிதர் தான்.


ஊடகமே உலகம்
DIPLOMA IN MASS MEDIA
தபால் மூலம்
Dip. in. M.M.(Sri Lanka)
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatte. Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஏப்ரல் 24 - 28 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
மே 01, 02, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஏப்ரல் 08, 09, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஏப்ரல் 16 - 20வரை
A.S.N. சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

பேரன்புமிக்க வன்னி மாவட்ட வாக்காளப் பெருமக்களே!



அ.விநாயகமூர்த்தி
அப்பாத்துரை விநாயகமூர்த்தி (முன்னாள் பா.உ.)
தலைவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

02-04-04 அன்று நடைபெற்ற நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 13586 வாக்குகளை நான்பெறுவதற்குக்காரணமாகவிருந்த உங்கள் அனைவரிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கிறேன் தொடர்ந்தும் உங்களிற்குச் சேவை ஆற்றச் சித்தமாக உள்ளேன்.

# சுடர் ஒளி

ஏப்ரல் 19 – 25, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401–6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## முடிந்து போன கருணா விவகாரம்

தமிழர் தாயகத்திலிருந்து கருணாவை வெளியேற்றி போராளிகளை மீட்பதற்காக கடந்த பெரிய வெள்ளி அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்ட அதிரடித் தாக்குதல் மூன்றே நாட்களில் முடிவுக்கு வந்து விட்டது.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் முழுவதும் மீண்டும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன.

தமிழர் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயங்களுக்குக் காரணமாகி விட்ட கருணாவும் அவரது அடியாட்கள் சிலரும் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்றே நம்பப் படுகிறது.

கருணாவின் வெளியேற்றத்தை அடுத்து மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்கள் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பி விட்டன. வவுணதீவில் படையினரினதும் புலிகளினதும் சந்திப்புக்கூட மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றிருக்கிறது. கருணாவின் அடாவடித்தனங்களின் போது வெளியேறிய கண்காணிப்புக் குழுவினர் மீண்டும் வந்து பணிகளை ஆரம்பிக்க இருக்கின்றனர்.

கருணாவை பெரிய சக்தியாகக் காட்டி இந்த விவகாரத்தை ஊதிப்பெருப்பித்து ஆதாயம் தேட முற்பட்டவர்கள் எல்லாம் மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு புலிகள் கச்சிதமாக காரியத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

இப்பிரச்சினை ஆரம்பித்த நாட்களில் இருந்தே, இது ஒரு தனி மனிதனின் பிரச்சினை என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறி வந்தார். அதனை அப்பொழுது பலரும் பெரிதாகப் பொருட்படுத்த வில்லை.

கருணாவிடம் ஆறாயிரம் போராளிகள் இருக்கின்றனர். ஆட்லறிகள், கனரக ஆயுதங்கள் எல்லாம் இருக்கின்றன. புலிகளின் தலைமை மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களை மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயன்றால் பெரும் யுத்தம் தான் மூளும். தற்பொழுது அமுலில் உள்ள போர்நிறுத்த உடன்பாடு கூட குழம்பிப் போகலாம். இப்படி எல்லாம் பலரும் பலவாறாகப் பேசி வந்தனர்.

ஆனால், தேசியத்தலைவர் இந்த விவகாரத்தை மிகவும் அவதானமாகக் கையாண்டார். மிகவும் சிறிய இழப்புக்களுடன் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்திருக்கிறார்.

பிரச்சினை ஆரம்பித்த நாளில் இருந்தே தேசியத்தலைவர் இரு விடயங்களை மனதில் கொண்டு செயற்பட்டு வந்தார்.

ஒன்று தமிழர் தாயகத்தில் இருந்து கருணாவை வெளியேற்றுவது மற்றது கருணாவின் பிடியில் இருக்கும் போராளிகளை பாதுகாப்பாக மீட்பது. இவை இரண்டுமே தற்போது நிறைவேற்றப்பட்டு விட்டன. கருணாவின் பிடியில் இருந்த போராளிகள் தற்போது மீண்டும் புலிகள் அணியில் இணைந்து வருகிறார்கள். கருணா தனி மரம் என்பது அச்சொட்டாக நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் தேசியத்தையும் புலிகள் இயக்கம் பலம் வாய்ந்ததாக இருப்பதையும் விரும்பாத சில உள்ளூர் வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலின் பேரிலேயே கருணா இந்தத் துரோகத்தில் இறங்கினார் என்று நம்பப்படுகிறது.

கருணா மூலம் புலிகளை இராணுவ ரீதியாகவும் ஆனந்த சங்கரி மூலம் புலிகளை அரசியல் ரீதியாகவும் பிளவுபடுத்த திட்டமிடப்பட்டது.

கடந்த தேர்தல் பிரசாரத்தின் போது ஜே.வி.பி. பொதுச் செயலாளர் விமல்வீரவன்ஸ கூட்டம் ஒன்றில் பேசுகையில், கிழக்கில் கருணாவும் வடக்கில் ஆனந்த சங்கரியும் வெற்றிலைக்கு வெற்றியைக் குவித்துத்தருவார்கள் என்றார். ஆனந்தசங்கரி தற்பொழுது விலாசம் இல்லாமல் போய்விட்டார். கருணாவின் நிலைமை அதைவிட மோசம். அகப்பட்டால் கதை முடிந்து விடும்.

கருணாவும் அவரது அடியாட்களும் எப்படியும் தனித்துத் தப்பி இருக்க முடியாது. அரசியல், இராணுவச் சக்திகளின் மறைமுக உதவி இல்லாமல் எப்படி இது சாத்தியப்படும்? என்றாலும் தமிழர் தாயகத்தில் இருந்து கருணா வெளியேற்றப்பட்டு விட்டார். இது நிம்மதி தருகிறது.

# சபாநாயகர் தெரிவும் சந்திரிகா படும்பாடும்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமே ஏற்பட்டிராத ஓர் அரசியல் சிக்கல் இப்பொழுது உருவாகிவருகிறது. எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றியே தீருவேன் என கோதாவில் இறங்கிய ஜனாதிபதிக்கு இப்பொழுது அச்சம் ஏற்பட்டுள்ளது.

225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆக 105 ஆசனங்களை மட்டுமே பெற்று ஆட்சி அமைத்த சிறுபான்மை அரசு, உயிர்வாழ முடியுமா என்ற நிச்சயமற்ற நிலையில் திண்டாடிக்கொண்டிருக்கின்றது.

ஏன் இந்த நிலைமை? இது தேவைதானா? பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி செய்த ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்துவிட்டு இப்படி ஒரு இக்கட்டான நிலையில் சிக்கிச் சீரழிய வேண்டுமா? ஜனாதிபதியின் செயல் அவரே தனது கழுத்துக்கு தூக்குக்கயிறை மாட்டிக் கொண்டதுபோல் அல்லவா மாறிவிட்டது? இப்படி அரசியல் அவதானிகள் விமர்சிக்கின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பிரகடனத்தின்படி எதிர்வரும் 22 ஆம் திகதி 13 ஆவது நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். இதனை மாற்றவும் முடியாது. பின்போடவும் முடியாது.

### சபாநாயகர் தெரிவுடன் ஆரம்பமாகும் போட்டி

நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் முதற்காரியமாக நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும். இலங்கையின் அரசியல் அமைப்பும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளும் இதனை வலியுறுத்திக் கூறி உள்ளன.



சந்திரிகா

நிறைவேற்று அதிகாரம் என்ற ஆயுதத்தைத் தனது கைகளில் வைத்துக் கொண்டு எத்தனையோ சித்து விளையாட்டுகளை செய்துவரும் ஜனாதிபதியால் சபாநாயகர் தெரிவு முறையை மாற்றி அமைக்கமுடியாது. இதனாலேயே ஜனாதிபதி இப்போது விழிபிதுங்கிப் போய் இருக்கின்றார்.

தேர்தலுக்கு முன்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வாய்க்கு வந்தபடி வாக்குறுதிகளை வாரிவழங்கி இருந்தார்.

அவற்றில் ஒன்று தான் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவை சபாநாயகராக்குவது. நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்படாதவர், தேசியப் பட்டியலில் இடம் பெறாதவர் எப்படி சபாநாயகராக முடியும்? இது ஒருபம்மாத்து. முன்னாள் சபாநாயகரை திருப்திப்படுத்தும் கண்துடைப்பு என்று அப்போதே சர்ச்சை எழுப்பப்பட்டது.

ஜனாதிபதி அதற்கும் ஒரு மாற்றுத்திட்டத்தைக் கைவசம் வைத்திருந்தார். அதாவது தேசியப்பட்டியலில் நான்கு பேரை டம்மிகளாகப் போட்டுள்ளேன். அவர்கள் இராஜினாமா செய்து விடுவார்கள். அந்த வெற்றிடங்களுக்கு, ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே முதன்மையாக நியமிக்கப்படுவார் என்றும் அவிழ்த்துவிட்டார்.

### தவிடுபொடியான ஜனாதிபதியின் வாக்குறுதி

ஜனாதிபதிக்கு அன்று ஏற்பட்டிருந்த அதிகாரவெறி, எல்லோரையும் சமாளித்து அனைவரது ஆதரவையும் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதையே குறிக்கோளாக இருந்தது.

ஆனால், பின்னால் ஏற்படப்போகும் சட்டச் சிக்கல்களை அப்போது ஜனாதிபதி சிந்திக்கத்தவறிவிட்டார். இப்பொழுது வம்பில் மாட்டிக் கொண்டார்.

தெரிவு செய்யப்பட்டவர்களும், தேசியப் பட்டியல் மூலம் சபைக்கு வந்தவர்களும் பதவிப்பிரமாணம் செய்ய வேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாக சபாநாயகர் ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டும்.

சபாநாயகர் தெரிவே ஜனாதிபதிக்கு தலையில் முதலாவது சம்மட்டி அடியாக விழுந்துவிட்டது.

இதனால் ஏற்பட்ட சட்டச்சிக்கல்கள் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதியையும் தவிடுபொடியாக்கி விட்டது.

### முதற்கோணல் முற்றும் கோணல்

நாடாளுமன்றத்துக்கு சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுபவர் சபையில் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவது மட்டுமல்ல சபையின் இரு பக்கத்தினரதும் நன்மதிப்பைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

இப்படியான ஒரு காலகட்டத்தில் ஆக 105 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ள ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பால் தனித்து நின்று சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியவே முடியாது. எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே சுதந்திரக்கூட்டமைப்பால் முன்மொழியப்படும் வேட்பாளர் சபாநாயகராக முடியும்.

முதற்கோணல் முற்றும் கோணல் என்பது போல் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைச் சபாநாயகராக்கும் ஜனாதிபதியின் முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப் பட்டுவிட்டது.

### டியூ குணசேகரா பொருத்தமானவரா?

இப்போது இரண்டாவது கட்டமாக கம்யூனிஸ்ட் வாதியாக டியூ குணசேகராவை சபாநாயகராக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். கம்யூனிஸ்ட் கொள்கை உடைய டியூ குணசேகரா சிறுபான்மை இனத்தவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் சாதகமான போக்கைக்கடைபிடித்து வருபவர்.

என்றாலும் கூட முன்னைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடமையாற்றியவர்.

அக்காலகட்டத்தில் எதிர்க்கட்சிகளுக்கு விரோதமான சலனச்சித்திரங்களையும், கார்ட்டூன்களையும், திரிக்கப்பட்ட செய்திகளையும் வெளியிட்டவர். ஐக்கிய தேசியக் கட்சிப்பிரமுகர்களுக்குப்புலித்தலைகளையும் இணைத்து பக்க சார்பான செய்திகளை பிரசுரித்தவர். இதனால் எதிர்க்கட்சியினதும், ஆதரவாளர்களினதும் வெறுப்பை வாங்கிக் கட்டிக்கொண்டவர்.

நிச்சயமாக டியூ குணசேகராவை எதிர்க்கட்சியினர் ஆதரிக்கமாட்டார்கள். மேலும் எதிர்க்கட்சியினரும் தமது சார்பில் முன்னாள் அமைச்சர் டபிள்யூ. கே. எம். லொக்கு பண்டாரவை சபாநாயகராக முன்நிறுத்தி உள்ளனர்.

இது ஜனாதிபதிக்கு விதித்துள்ள இரண்டாவது பேரிடி. சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் ஜனாதிபதி.

### ஹெல உறுமயவும் கையை விரிக்கிறது

தேசிய ஹெல உறுமயவின் ஆதரவைத் தேடிப்பல தூதுவர்களை அனுப்பினர். அவர்களோ அதிகாரத்துக்காகப் போட்டியிடும் எந்த ஒரு கட்சிக்கும் தமது ஆதரவு இல்லை என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டனர்.

சபாநாயகருக்கான வாக்கெடுப்புகள் இரகசிய மாகவே நடத்தப்படும். பெயர்கூறியோ அல்லது கைகளை உயர்த்தியோ வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது.

அங்கேயும் ஜனாதிபதிக்கு ஒரு தாக்கம் காத்திருக்கிறது. பிரதமர் தெரிவிலும், அமைச்சு பொறுப்புகள் ஒதுக்கீட்டிலும் ஜனாதிபதியின் கூட்டாளிகளான ஜே.வி.பியினர் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சுதந்திரக்கூட்டமைப்பின் அனைத்துத் தரப்பினரதும் நம்பிக்கையையும் பெறாத ஒருவர் பிரதமராக இருக்கும் வரை எந்த ஒரு விடயத்தையும் சிக்கல் இன்றி தீர்க்க முடியாது என ஏற்கனவே அபாயச்சங்கை ஊதிவிட்டனர். அதுவும் ஜனாதிபதிக்கு குலைநடுக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது ஜே.வி.பியினர் மாறாக வாக்களித்து விட்டால் என்ன செய்வது என்ப ஜனாதிபதியின் தடுமாற்றத்துக்கான முக்கிய காரணம்.

நாடாளுமன்றத்துக்கு ஒரு சபாநாயகரைத் தெரிவு செய்வதிலேயே பல சோதனைகளைத் தாண்ட வேண்டிய ஜனாதிபதி அரசியல் அமைப்பையே மாற்றுவேன்என சவால் விடுக்கிறார். அது சாத்தியப்படுமா என்பதே எமது கேள்வி.

### ஜனாதிபதியின் வியூகம் தேசிய அரசு

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டு இப்போது அம்மா பிடி அப்பா பிடி ன்று கூச்சல்



ரட்ணசிறி

போடுகிறார். இவருடைய அபயக்குரலுக்கு யார் யார் செவி சாய்க்கப் போகிறார்கள்? எவர் எவர் நேசக்கரம் நீட்டப்போகின்றனர்? இவை கேள்விக்குறியாகவே இருக்கின்றன.

எப்படியாவது அதிகாரத்தைக்கைப்பற்றினால் போதும் என்ற ஆதங்கத்தில் ஜே.வி.பியினருடன் கூட்டு ஏற்படுத்தக்கொண்டார்.

1971 ஆம் ஆண்டு தாயாரின் ஆட்சிக்கு ஆப்பு வைக்க முனைந்தார்கள். கணவனின் உயிருக்கே உலை வைத்தவர்கள் என முன்பு ஜனாதிபதியே வசைபாடினார்.

ஜே.வி.பியினருடன் கூட்டு வேண்டாம். அவர்கள் எமது தோளில் இருந்து கொண்டே காதைக் கடித்துவிடுவார்கள். எனப்புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அப்போதே எச்சரித்தார்.

அன்று உதாசீனப்படுத்திய ஜனாதிபதி இன்று உண்மையை உணர்ந்து கொண்டார். கையில் சுற்றிய பாம்பை எப்படி உதறித் தள்ளுவது என்று தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்.

ஜனாதிபதியின் தீவிர சிந்தனையின் உதயமாக வெளிப்பட்டிருப்பது தான் தேசிய அரசாங்கம்.

அப்பட்டமாக அவதூறுகளை அள்ளி வீசினார். அடுக்கடுக்காக குற்றச்சாட்டுக்களை அவிழ்த்துவிட்டார். இப்பொழுது தனது தலைக்கு ஆபத்து வந்துவிட்டதே என்பதனால் தேசிய அரசாங்கம் அமைக்க ஐக்கிய தேசிய முன்னணியின் உதவியைக் கோருகிறார்.

அம்மையார் எப்போதுமே ஆபத்து வரும்போது காலைப்பிடிப்பார். அதே வேகத்தில் காலை வாரிவிடுவதிலும் கெட்டிக்காரர்.

எனவே ஜே.வி.பியினருக்கு ஏற்பட்ட கதி தமக்கும் ஏன் ஏற்படாது என்ற முன் எச்சரிக்கை ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஏற்பட்டது நியாயம்தான்.

அமைச்சுப்பதவிகளுக்காகவும், கூட்டுத்தாபனத்தலைவர் பதவிகளுக்காவும் ஆசைப்பட்டு அம்மையாருடன் சேர்ந்து ஆட்சியமைக்க எவருமே தயாராக இல்லை.

ஆனாலும் இவற்றுக்கு ஆசைப்பட்டவர்கள் சிலரும் இல்லாமல் இல்லை. எப்படியாவது இவர்களைப்பிடித்தாவது தேசிய அரசு ஒன்றை அமைப்பதில் அம்மையார் தீவிரம் காட்டுகிறார்.

என்றாலும் அவருடைய அழைப்பு உள்மனதில் இருந்து வந்ததா? இல்லை சந்தர்ப்பவாத சாகசமா? புரியவில்லை.. எனவே ஜனாதிபதியின் வியூகம் பலிக்குமா இல்லை தேசிய அரசு தான் உருவாகுமா பொறுத்திருந்து பார்ப்போம்.

இரா. புத்திரசிகாமணி

# துரோகத்துக்கு கிடைத்த பரிசு



கடந்த சில வாரங்களாக ஒரு துரோகியினால் தமிழர்களின் நெஞ்சை எரித்து வந்த நிகழ்வுகள் முடிவுக்கு வந்து விட்டன.

கடந்து போன சில வாரங்கள், ஈழத்தமிழர்களின் தூக்கமற்ற இரவுகளாகவும், இனந்தெரியாத துன்ப உணர்வு உள்ள பகல்பொழுதுகளாகவும், முகட்டை வெறித்துப் பார்க்கும் ஒரு வித இருளடைந்த எதிர்



வாகரையில் இடம் பெயரும் மக்கள்

காலத்தின் அறிகுறிகள் போலவும் கடந்து சென்று விட்டன.

ஈழத்தமிழர்கள் இன்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். ஆனால், அதிலும் ஓர் ஏக்கம். கருணா என்ற தனி மனிதன் நச்சு மரம் பிடிபடாது தப்பிவிட்டான் என்பது தான்.

'தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த தமிழன்' என்ற கதை பழங் கதைதான். ஆனால், தமிழனுக்கு எதிராக தமிழனே உரிமை கேட்டு இறுதியில் கவிந்து வந்த பெரும்பான்மை தமிழினப் பலத்தை மீண்டும் கூறு போட ஒரு தமிழனே முடிவெடுத்தமை ஈழத் தமிழர் நெஞ்சங்களில் தாங்க முடியாத சோகத்தையும், வேதனையையும் உருவாக்கி இருந்தது.

## பொறுமை காத்த தலைவர்

புலிகளின் தலைமைக்கு எதிராக



கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட லெப்டினன்ட் கேணல் நீலனின் வித்துடல்

கருணா போர்க்கொடி தூக்கி சுமார் ஒரு மாதம் கழிந்த நிலையில் கருணாவுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கருணாவின் பிடியில் சிக்கி இருந்த ஆயிரக்கணக்கான போராளிகள், அப்பொழுது இருந்த முக்கிய காலகட்டம் ஆகியவற்றை மனதில்கொண்டு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இயன்ற அளவு பொறுமைகாத்தார். கருணாவுக்கு மன்னிப்பு வழங்கவும் தயாராக இருந்தார்.

தேசியத் தலைவரை நம்பியே பெற்றோர் தமது பிள்ளைகளை போராட்டத்தில் அர்ப்பணித்திருந்தனர். ஆனால், தேசியத்தலைவரின் பொறுமையை பலவீனமாகக் கருணா கருதி தப்புக் கணக்குப் போட்டுவிட்டார். நாளுக்கு நாள் அவரது அடாவடித்தனங்கள் அதிகரித்து வந்தன. சமாதானப் பேச்சுக்களில் தமது தரப்பு தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடும் அளவுக்கு நிலைமை மோசம் அடைந்தது. ஸ்ரீலங்கா இராணுவமும் தன் பக்கபலமாகச் செயற்படும் என்ற நம்பிக்கையும் அவருக்கு.

இந்த நிலையில் பெரிய வெள்ளி தினமான 9 ஆம் திகதி கருணாவைத் தனிமைப்படுத்தி அவரிடம் சிக்கி இருந்த போராளிகளை மீட்கும் போரை புலிகளின் தலைமை ஆரம்பித்தது.

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று கருணா தப்பி விட்டார். எந்தச் சக்திகள் கருணாவுக்கு பின்னணியில் இருந்து செயற்பட்டன என்று கருதப்பட்டதோ சக்திகளின் உதவியுடன் கருணா தப்பிச் இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தன்னிடம் இருந்த போராளிகளை கேடயமாகவைத்துக்கொண்டு புலிகளின் தலைமையை உலுப்பிவிட முயன்றார் கருணா. இன்று துரோகிகளின் வரலாற்றில் முதலிடம் பெற்றுவிட்டது கருணாவின் பெயர். கருணாவின் கதையும் முடிந்து விட்டது. மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் யாவும்தற்பொழுது மீண்டும் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ்வந்துவிட்டன.

## வெளியேறிய மக்கள் திரும்பினர்

கருணாவினதும் அவரது அடியாட்களினதும் அச்சுறுத்தல்கள் காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள் தற்பொழுது படிப்படியாக மீண்டும் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.

யுத்தத்துக்கு அஞ்சி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு உள்ளேயே இடம் பெயர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் பலர் சென்றிருந்தனர்.

டாக்டர்களின் வெளியேற்றத்தினால் வெறிச்சோடிப்போய் முற்றாகச் செயல் இழந்திருந்த மட்டக்களப்பு அரச வைத்தியசாலை மீண்டும் சுமுகமாக இயங்க ஆரம்பித்துள்ளது. முழுத் தமிழ் இனத்தையே அந்நியரிடம் விலைபேசிய கருணாவை தேடிப்பிடித்து ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற குரல்கள் தான் இப்பொழுது எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அந்நிய சக்திகளின் கையாளாக மாறி தமிழர்களைக் கூறுபோட நினைத்த கருணாவை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது.

## பெரிய வெள்ளி தாக்குதல்

கருணா அணி மீதான தாக்குதல் வெள்ளி அதிகாலை 1.15 மணி அளவில் ஆரம்பமானது. வெருகல் முதல் வாகரை வரையான பகுதி அன்று மாலைக்குள்ளேயே புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது. ஒரு நாள் ஓய்வின் பின்பு ஞாயிறன்று அம்பாறையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பொத்துவில் முதல் கல்முனை வரையான பகுதிகள் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இதேநேரம் மட்டக்களப்புக்கு மேற்கே மட்டக்களப்பு – கொழும்பு வீதி, தெற்கே கொக்கட்டிச்சோலை, தேனகம் மற்றும் மீனகம் ஆகிய பகுதிகளே கருணாவிடம் எஞ்சி இருந்தன.

இப்பகுதிகள் மீதும் எந்நேரமும் தாக்குதல் ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் கருணாவசம் இருந்த மூவாயிரம் போராளிகள் வெளியேறி தமது வீடுகளுக்குச் சென்றனர்.

ஞாயிறு மாலை மட்டக்களப்பு மீனகம் முகாம் போராளிகளின் பெற்றோரால் முற்றுகையிடப்பட்டது. தமது பிள்ளைகளை ஒப்படைக்கும்படி பெற்றோர் வலியுறுத்தினர். இதனால் பெரும் தாக்கம் ஏற்பட்டது.

மகளிர் படைஅணியைக் கலைக்க மறுத்த மகளிர் படை அணியின் விசேட தளபதி நிலாவினி மீது பெற்றோர் சிலரால் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் மீனகம் முகாமை விட்டு நூற்றுக்கணக்கான போராளிகள் வெளியேறினர். ஆயுதங்கள், வெடிமருந்துகள் முகாமிலும் வீதியிலும் கைவிடப்பட்டன.

வெளியேறிய போராளிகள் கிரான்பாலம், செங்கலடி கறுத்தபாலம், பட்டிருப்புப் பாலம் வழியாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றனர். இவர்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு இராணுவமும் இவர்களை உள்ளே செல்ல அனுமதித்தது.

## இறுதிக் கோட்டையும் சரிந்தது

மீனகம் முகாமை விட்டு இறுதியாக விசேட தளபதி நிலாவினி, துணைத்தளபதி தீந்தமிழ், மகளிர் அரசியல் பொறுப்பாளர் பிரேமினி ஆகியோரும் வெளியேறினர். இதனால் கருணா அணியின் கடைசிக் கோட்டையும் சரிந்தது. விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் லெப்டினன்ட் கேணல் நீலன் இந்த முகாமில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கருணா தரப்பினருக்கு எதிரான போரில் ஜெயந்தன் படை அணியும், சார்ள்ஸ் அன்ரனி படை அணியும் ஈடுபட்டன. கேணல் பானு, சொர்ணம் ஆகியோரின் வழிநடத்தல்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. வெருகல் ஆற்றுப் பிரதேசத்தில் இருந்து கதிரவெளி, கட்டுமுறிவு ஆகிய இடங்கள் ஊடாக பெட்டி வடிவில் வியூகம் அமைத்து புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

## புலிகளின் வியூகம்

தாக்குதல் ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே திருமலை – மட்டக்களப்பு மாவட்டங்களைப் பிரிக்கும் வெருகல் ஆற்றின் வடபுறக் கரையில் திருமலை மாவட்டத்தின் எல்லையில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துக்காணப்பட்டது. இவர்கள் வெருகல் ஆற்றைக்கடந்தே கருணா அணியினர் மீது தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என்று நம்ப வைக்கப்பட்டது. இதனால், ஆற்றின் தென் புறக்கரையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் கருணா அணியினர் பதுங்கு குழிகளைத் தோண்டி தயார் நிலையில் இருந்து வந்தனர்.



கருணா வசமிருந்த இளம் போராளிகள்

ஆனால், கருணா அணியினர் எதிர்பார்த்தபடி புலிகள் வெருகல் ஆற்றைக் கடந்து தமது தாக்குதலை ஆரம்பிக்கவில்லை.

கருணாவின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த கதிரவெளிக்கும் வாகரைக்கும் இடையே இருக்கும் கடலோரப் பகுதியான பால்சேனைப் பகுதியில் படகுகளில் சென்று புலிகள் தரை இறங்கினர். வடபுறத்தே வெருகலை நோக்கியும், தென்புறத்தே வாகரை நோக்கியும் பெரும் தாக்குதலை ஆரம்பித்தனர். வெருகல் ஆற்றின் தென் பகுதியில் நிலை கொண்டிருந்த கருணா அணியினரை மையமாக வைத்தே பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேநேரம் கருணா அணிக்கு தரைவழி உதவிகள் கிடைப்பதை தடுக்கும் நோக்கில் பால்சேனைப் பகுதியில் இருந்து புலிகளின் மற்றொரு அணி கண்டலடிப் பகுதியை மையமாகவைத்து தென்பகுதியை நோக்கி முன்னேறத் தொடங்கியது. இதனால் கருணா அணியினரின் திட்டங்கள் ஆரம்பத்திலேயே பிசுபிசுத்துப் போயின. கருணாவினால் எடுக்கப்பட்டதால் கிழக்கைச் சூழ்ந்த கருமேகங்கள் இப்பொழுது கலைந்து விட்டன.



காயமடைந்த பெண் போராளி ஒருவர்

# பித்தன் பதில்கள்

செ.பரணிதரன்— வெல்லாவெளி.

கேள்வி:— பித்தா! பெண்கள் எந்த நேரத்தில் நல்லவர்களாக இருக்கிறார்கள்?

பதில்:— தூங்கும்போது.



வ.வானதி— கல்கிஸ்ஸ

கேள்வி:— பித்தா! தேர்தல் முடிவுகளைக் கொண்டு — அவசர தேர்தலுக்கு ஆணை யிட்ட அம்மையாரின் ஆசை நிறை வேறிவிட்டதாக கருத இடமுண்டா?

பதில்:— சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாகிவிட்டது அம்மையாருக்கு. இந் தத் தேர்தல் முடிவின் மூலம் அம்மையாரின் கட்சி அதள பாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதை அறிந்து அதிர்ந்துபோயிருக்கிறாராம் அவர். கடந்த தேர்தலில் 16 பேரை மட்டுமே நாடாளு மன்ற உறுப்பினராகக் கொண்டிருந்த ஜே.வி.பி. இம்முறை தேசியப்பட்டியலு டன் 40 பேரைப் பெற்றிருக்கிறது. கடந்த தேர்தலில் 77 பேரை தனித்துப் போட்டி யிட்டு நாடாளுமன்றம் அனுப்பிய அம் மையாரின் கட்சி 65 பேரை மட்டுமே அனுப்பக் கூடியதாக இருந்திருக்கிறது. அதிலும் ஜே.வி.பி யினர் 39 வேட்பாளர் களை தேர்தலில் நிறுத்தி 36 பேரை வெற் றியடையச் செய்திருக்கின்றனர். கொழும் பில் விமல் வீரவன்ச— அம்மையார் கட்சிக்காரர்களை பின்னே தள்ளிவிட்டு அதிகப்படியான விருப்பு வாக்குகளை பெற்றிருக்கிறார். அம்மையாரின் குடும் பத் தொகுதியான கம்பஹாவில் அம்மை யாரின் சகோதரரைப் பின்னே தள்ளி விட்டு முன்னுக்கு வந்துவிட்டார் ஜே.வி.பி யின் விஜித ஹேரத். இவ்வாறெல்லாம் பார்க்கும்போது அம்மையாருக்கு பொல் லைக்கொடுத்து அடி வாங்கிய கதை தான். இனிமேல் தேர்தல் என்றால் ஜே.வி.பியு டன் கூட்டு இல்லவே இல்லை என்ற மன நிலைக்கு வந்து விட்டாராம் அவர்.

கு.விஜிரூபி— துன்னாலை வடக்கு.

கேள்வி:— ஆதாம்— ஏவாள் காலத்து அனைத் துமே அழிந்து போயினவாம். ஆனால் காதல் மட்டும் ஏன் அழியவில்லை பித்தா?

பதில் :— ஆதாமும் ஏவாளும் காதல் செய்த தால் — வந்த வாரிசுகள் அழியவில்லையே. அவர்களின் வழி வந்தவர்கள் தானே நாங்கள். பிறகெப்படி காதல் அழியும்?

சுபா ஜெகநாதன்— யாழ்.பல்கலைக்கழகம்.

கேள்வி:— பித்தா! கடி ஜோக்ஸ் எல்லாம் உங்க ளுக்கு சுமாராக வருகிறதே... எங்கே இந்த முறை ஒன்று கூறுங்கள் பார்ப்போம்?

பதில்:— அந்தக் கடையிலே பல்லி மிட்டாய் இனிப்பு மேல் தட்டிலே வைக்கப்பட்டி ருந்தது. கடைக்கு வந்த சிறுவன்ஒரு ரூபாவுக்கு பல்லி மிட்டாய் இனிப்பு தரும் படி கடைக்காரனிடம் கேட்டான். கடைக் காரர் ஏணியை எடுத்து வந்து அதனை தட்டிலே சாய்த்துவைத்து விட்டு பல்லிமிட் டாய்ப் போத்தலை கவனமாக கீழே கொண்டு வந்து பல்லி மிட்டாயை எடுத்து சிறுவனிடம் கொடுத்தார். பின்னர் ஏணி யில் ஏறி போத்தலை மேல் தட்டில் வைத் துவிட்டு — இறங்கி — ஏணியை எடுத்து வெளியே வைத்தார்.

சிறிது நேரத்தில் இன்னொரு சிறுவன் வந்தான். ஒரு ரூபாவுக்கு பல்லி மிட்டாய் தரும்படி கேட்டான். கடைக்காரர் முன்ன ரைப்போல் ஏணியை எடுத்து வந்து அதனை தட்டிலே சாய்த்துவைத்து விட்டு பல்லிமிட்டாய்ப் போத்தலை கவன மாக கீழே கொண்டு வந்து பல்லி மிட்டாயை எடுத்து சிறுவனிடம் கொடுத்தார். பின்னர் ஏணியில் ஏறி போத்தலை மேல் தட்டில் வைத் துவிட்டு — இறங்கி — ஏணியை எடுத்து வெளியே வைத்தார்.

மீண்டும் ஒரு சிறுவன் கடைக்கு வந் தான். ஒரு ரூபாவுக்கு பல்லி மிட்டாய் இனிப்புக் கேட்டான். கடைக்கார ருக்கோ கோபம் கோபமாக வந்தது. மீண்டும் போய் ஏணியை எடுத்து வந்து தட்டிலே ஏறி பல்லி மிட்டாய் எடுத்து அந்த சிறுவனுக்கு கொடுத் தார். மீண்டும் போத்தலை தட்டிலே வைக்கப்போனவர் தூரத்திலே சிறுவன் ஒருவன் வருவதைக்கண்டு பல்லி மிட்டாய்ப் போத்தலைத் தட்டிலே வைக் காமல் சிறுவன் வருவதை பார்த்துக் கொண்டு நின்றார். சிறுவன் கடைக்கு வந்ததும்... "என்ன உனக்கும் ஒரு ரூபா வுக்கு பல்லிமிட்டாய் இனிப்புத்தானே வேண்டும்?" என்று கேட்டார். இல்லை என்று சொன்னான் சிறுவன். அப் பாடா... என்று சொல்லியபடி பல்லிமிட் டாய் போத்தலை எடுத்து வந்து ஏணி யில் ஏறி போத்தலை மேல் தட்டில் வைத் துவிட்டு — இறங்கி — ஏணியை எடுத்து கடைக்கு வெளியே வைத்துவிட்டு வந்து சிறுவனிடம் கேட்டார். "உனக்கு இப்போ



என்ன வேண்டும்...? " சிறுவன் சொன் னான்... "எனக்கு ஐம்பது சதத்துக்கு பல்லிமிட்டாய் இனிப்பு தாருங்கள்..."

வி.காயத்திரி— 156ம் கட்டை.

கேள்வி:— அழகான பெண்களால் ஆபத்து என்று ஆண்கள் சொல்கிறார்களே! அது உண்மையா பித்தா?

பதில்:— அழகான பெண்களை சந்திப்பது ஒரு விபத்து என்று ஆண்கள் நினைத் தால் — அது ஆபத்தாகத் தான் முடியும்.

சர்மி கனகசுந்தரம் — கிளிநொச்சி.

கேள்வி:— பித்து அங்கிள்! எந்தக் காரியத்தை தொடங்கினாலும் சாஸ்திரம் பார்ப்பவர் களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்:— தன்னம்பிக்கை இல்லாதவர்கள்.

சங்கீதா மகேந்திரன் — யாழ்ப்பாணம்.

கேள்வி:— பித்து அண்ணா! நீங்கள் உங்கள் மனைவியை காதலித்து மணம் முடித்தீர் களா? அல்லது பெற்றோரின் விருப்பப் படி மணம்முடித்தீர்களா?

பதில்:— திட்டமிட்டு, சதி செய்து — எனக்கு பின்னால் பள்ளம் தோண்டி — என்னை தள்ளி விழுத்தியவர்கள் எனது பெற் றோர்களே...!

க.விந்தன் — கொக்குவில்.

கேள்வி:— "கண்களே பெண்களை நம் பாதே"? என்ற பாடல் எதனால் வந்தது பித்தா?

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர் களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்வி களுக்கு பித்தன் பதில் தரு வார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்க ளும் பதில் அளியுங் கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்ப டும். பதில்களை ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண் டும்.



பதில்:— பெண் என்பவள் கண்ணில் படும் கானல் நீர்போன்றவளாக இருப் பதனால்.

இந்தக் கேள்விக்கு பித் தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு — 14.

எம். மயூரன் — மல்லாவி.

கேள்வி:— கருணாவுடன் உங்களுக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறதே உண்மையா?

பதில்:— ஐயோ! ஏற்கனவே தொடர்பு வைத்திருந்தவர்கள் படும்பாடு தெரியும் தானே... ஏன்.. நான் நல்லாக இருப்பது உமக்கு பிடிக்கவில்லையா.



க.மதிவதனன்— மல்லாவி.

கேள்வி:— திருமணம் செய்த ஆண்கள் எல் லோருமே பொதுவாக தமது மகிழ்ச் சியைத் தொலைத்து விட்டதாகவே கூறு கிறார்கள். ஆனால் வேலைத்தலத்தில் வேலை முடியுமுன்னரே அவசரப்பட்டு வீட்டுக்குச் செல்கிறார்களே ஏன்?

பதில்:— தாமதமாகச் சென்று — வாங்கிக் கட்டி— எஞ்சியிருக்கும் மிச்ச சொச்ச மகிழ்ச்சியையும் தொலைத்து விடக் கூடாதே என்ற அச்சத்தில்தான்.

யஸ்மினா — மீசாலை.

கேள்வி:— பித்தா நீர் எனது நெருங்கிய சிநேகிதி என்று வைத்துக் கொள்ளும். உமக்குத் தெரியாமல் நான் திருமணம் செய்வது முறையான செயலா?

பதில்:— நான் காதலித்தவரை — நீர் கலி யாணம் செய்வதாக இருந்தால் தெரியா மல் செய்வது முறையே....

செ.புவீந்திரன் — மூதூர்.

கேள்வி:— பித்தா! நாய்களுக்கு நன்றி இருப் பது போல் ஏனைய மிருகங்களுக்கும் உணர்ச்சிகள் இருக்கிறனவா?

பதில்:— ஆம்... அண்மையில் துபாயில் உள்ள மிருகக்காட்சிச்சாலையில் இருந்து தப்பி ஓடிய "டயானா" என்ற கொரில்லாக் குரங்கு திரும்பி வந்துவிட்டதாம். மூன்று வருடங்களுக்கு முன்னால் கடத்தல் கும்பல் ஒன்று இந்த கொரில்லா குரங்கை கடத் திச் செல்லும்போது துபாய் விமான நிலையத்தில் வைத்து மீட்கப்பட்டதாம் இந்தக் குரங்கு. பின்னர் இந்தக்குரங்கு துபாய் மிருகக் காட்சிச் சாலையில் ஒப்படைக்கப்பட்டதாம். அங்கே முகமது அலி என்ற பாதுகாவலர் இந்த குரங்குக்கு டயானா என்று பெயரிட்டு — புட்டிப்பால் கொடுத்து ரொட்டி வளர்த்து வந்தார். குரங்கு தப்பி ஓடிவிட்டதை அறிந்து இவர் ரொம்பவும் ஆடிப்போய் விட்டாராம். ஆனால் சில நாட்களில் மிருகக்காட்சிச் சாலைக்கு திரும்பி வந்த இந்தக் குரங்கு நேரடியாக முகமது அலியிடம் சென்று அவரை கட்டித் தழுவிக் கொண்டதாம்... அன்பு..... ஐந்தறிவுக்கும் பொருந்தும் போலும்.

சி.குகானந்த் — விசுவமடு.

கேள்வி:— காதலில் ஏமாறும் பெண்களை யும் — ஏமாற்றும் ஆண்களையும் எப்படித் திருத்துவது.



பதில்:— காதலில் ஏமாறும் ஆண்களை கொண்டும் — ஏமாற்றும் பெண்களைக் கொண்டும் திருத்தலாம்.

சி.சிவாஜினி — திருநெல்வேலி.

கேள்வி:— உலகத்தில் பணம் முக்கியமா?

பதில்:— பணத்தை விட முக்கியமான சமாச் சாரங்கள் பல உலகத்தில் இருக்கின்றன. ஆனால், அந்த சமாச்சாரங்களை எல்லாம் அடைய பணம் அவசியம் தேவைப்படுகிறது.

வி.சதீஷ் — வவுனியா.

கேள்வி:— பித்தா! மன்மதராசா பாட்டு ஓய்ந்து விட்டதே... அடுத்து என்ன பாட்டு துள் ளாட்டம் போட வைக்கப்போகிறது?

பதில்: மன்மதராசாவை பார்த்து எல்லோரும் தங்கள் படங்களில் NON - STOP ஆட்டத்துடன் பாடல்களைப் புகுத்தினர். அதில் பாவம் அடிதடி படத்தில் சத்தியரா ஜும், யம்மா... யம்மா... என்று இந்த வயது போன காலத்தில் உடம்பை ஆட்டோ ஆட் டென்று ஆட்டினார்... ஆனால் எதுவும் எடுபடவில்லை... ஆனால் தற்போது வெளியாகியுள்ள ஜோர் படத்தின் அம்மா செல்லமா, அப்பா செல்லமா தான் பலரை யும் முணுமுணுக்க வைத்திருக்கிறது. திரையிலும் எடுபடுமா என பாடம் வந் தால்தான் தெரியும்.

**பித்தனின் கேள்வி**

கேள்வி:— பித்தா! பெண்கள் அடக்கமாக இருக்க வேண்டும் என்கிறார்களே ஏன்?

**வாசகர் பதில்கள்**

சி.பானு — அவிசாவளை.

பெண் என்பவள் பூப் போன்றவள். பூ ஒரு தடவை பறிக்கப்பட்டால் மீண்டும் அதனை மரத்தில் ஒட்டமுடியாது.

சுஜேன் — வவுனியா.

"தாயைத் தெருவில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்க வேண்டுமா?" என்ற பழ மொழி ஒன்றுக்கு அமைய பெண்கள் அடக் கமாக இருந்தால் தான் அவர்களை அனை வரும் மதிப்பார்கள்.

மு.ஹபீர் — வத்தளை.

ஆண்களை விட பெண்கள் அனைத்தி லும் முன்னுக்குவந்தால் ஆண்களின் மதிப்பு இறங்கிவிடும் என்பதனால்.

சி.கவிதரன் — யாழ்ப்பாணம்.

பெண்ணானவள் ஒருவருக்கு மட்டுமே உரியவள். அவளது அழகை ஒருவன் மட் டுமே ரசிக்க வேண்டும். அதனால்தான்.

சி.சிந்தாரன் — உடுப்பிட்டி.

உலகத்தை ஆளும் அனைத்து மார்க்க மும் பெண்ணினால் ஆக்கப்பட்டவையாக இருப்பதால் தான்.

நிலான் — மானிப்பாய்.

கேள்வி:— அன்பின் பித்தா! பெண்களுக்கு வால் இருந்தால் நிலை என்னாகும்?

பதில்:— கலைத்துத் திரிபவர்கள்பாடு



கொண்டாட்டமாகிவிடும். வால் பிடிப்ப தற்கென்றே ஒரு கூட்டம் பின்னால் அலை யும். புருஷன்மார் பாடு திண்டாட்டமாகி விடும். ஏனென்றால் வாலுக்கும் ஆயிரம் நகைபோட்டு அழகு பார்க்க நிற்பார்கள் பெண்கள்... இது தவிர இப்பொழுதே கவர்ச்சியான சில சமாச்சாரங்களை வைத்துக் கொண்டு தலை — கால் புரி யாமல் தடுமாறுகின்றார்கள். இதில் வாலும் இருந்து விட்டால்... யப்பா...

யோ. தர்ஷா — மல்லாவி.

கேள்வி:— காதலில் வெற்றி பெறாதவர்க ளுக்கு கொஞ்சம் அட்வைஸ் கூறுங்கள் பித்தா பிளீஸ்?

பதில்:— முயற்சி திருவினையாக்கும். ஒரு முறையுடன் துவண்டு விடக் கூடாது. தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்...

சி.சிவப்பிரியா — மட்டுவில்.

கேள்வி:— பித்தா! கருணாவின் கொட்டம் அடங்கி விட்டதாக கூறுப்படுகிறதே உண் மையா?

பதில்:— ஏன் பிரியா! நீங்கள் பத்திரிகைகள் பார்ப்பதில்லையா? அதில்தான் முழு விபரங்களும் புகைப்படங்களுடன் வரு கின்றனவே.

தி.செந்தூரன் — கொக்குவில்.

பித்தா:— பெண் என்றால் பேயும் இரங்குமாம் உண்மையா?

பதில்:— அது எனக்குத் தெரியாது? ஆனால், நிச்சயமாக நான் இரங்....கு..வேன்.

# கருணா விவகாரமும் ஊடகங்கள் கையாண்ட விதமும்

ஊடகவியல் பணி மிகப் புனிதமானது. எந்த அளவிற்குப் புனிதமானது என்றால், கற்பித்தற் பணியைப் போல அது புனிதமானது. ஊடகத்துறையினரைப் பொறுத்தவரை - குறிப்பாக, செய்தியாளர்கள், ஆய்வுரையாளர்கள், மற்றும் ஊடக சேவையாளர்களைப் பொறுத்தவரை வெறுமனே ஒரு தொழிலாக, அல்லது சுயதிருப்திக்காக, அல்லது புகழுக்காக அந்தப் பணியில் ஈடுபடுவதைவிட, தாம் சார்ந்த மக்கள் சமூகத்துக்கு சீரிய கருத்துக்களை ஊட்டி, அவர்களைப் பக்குவப்படுத்தி, அவர்களுக்குத் தெளிவான சிந்தனை முறைமையைப் புகட்டுவதை அவர்கள் முதன்மையாகக் கருத வேண்டும். அதை அவர்கள் ஒரு தார்மீகக் கடமையாகக் கொள்ள வேண்டும். ஆக மொத்தத்தில் அது ஒரு தொழில் அல்ல; அது ஒரு சேவை.

## கருணா விவகாரத்தில் தப்புக் கணக்கு

இப்போது - கருணா விவகாரத்தின் முதலாவது அத்தியாயம் முடிவுக்கு வந்துவிட்டது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் வழமைக்குத் திரும்பி விட்டன. ஆனால், இதுவரை - கருணா விவகாரத்தை - வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள் தங்கள் வியாபாரத்துக்காகப் பாவித் தன: அது அவர்களது தொழில்; அவர்களோடு கோபிப்பதில நியாயமில்லை. சிங்களத்தரப்புச் செய்தி ஊடகங்கள் தங்கள் பேரினவாத நன்மைக் காகப் பாவித தன: அவர்கள் அப்படித்தான் செய்வார்கள்; அவர்களோடு கோபிப்பதில் பயன் எதுவும் இல்லை.

ஆனால், சில தமிழ் ஊடகங்களும், சில தமிழ் செய்தியாளர்களும், சில தமிழ் ஆய்வாளர்களும் - கருணா தனது முயற்சியில் வெல்ல வேண்டும் என விரும்பியவர்கள் போலவும், வெல்லுவார் என நம்பியவர்கள் போலவும் தென்பட்டுக் கொண்டிருந்தார்கள். கருணா விவகாரத்தை, அந்த மிகச் சிலர் கையாண்டிருந்த முறை தான் மிகுந்த மனக்கவலையைத் தருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை - அதன் போராளிகளை தங்கள் சொந்தப் பிள்ளைகள் போல தமிழ் ஆய்வாளர்கள் பார்க்க வேண்டும் என்பது எனது அவா. புலிகள் தொடர்பாக எழுதும் பொழுது, பத்திரிகைகளுக்குப் பத்தி எழுதும் ஒரு தொழில் என்பதற்கு அப்பால், தங்களது ஒரு சொந்த விவகாரத்தைப் பற்றி எழுதுகின்றோம் என்ற ஒரு நெருடல் எந்தத் தமிழனுக்கும் இருக்க வேண்டும். நான்கு பக்கங்களும் வேலி கட்டி, அதற்குள்ளேயே குடும்பம் நடத்தி, உள்ளுக்குள் என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை எங்களுக்குள்ளேயே மூடிமறைத்து, வெளியில் சிரித்துக்கொண்டு இன்முகம் காட்டும் கலாசாரப் பண்பு தமிழர்களுடையது. அது சுயகௌரவத்தைப் பேணி பாதுகாக்கும் வழிமுறைகளுள் ஒன்று.

இன்னொரு வகையில் - 'எங்கள் உள்வீட்டுப் பிரச்சினை அடுத்தவர்களுக்கு எதற்கு?... எமது சிக்கல்களை நாமாகவே அவிழ்த்துக் கொள்வோம்' என்ற மனப்பாங்கு என்றும் சொல்லலாம். ஆனால், சொந்த வீட்டுக்குள் சச்சரவு வரும் போது எமக்குள் வெளிப்படும் இந்தச் சுய கௌரவ மனப்பாங்கு, சொந்த இனத்தின் விவகாரத்தில் ஏன் உருக்கொள்ளாமல் விட்டு விடுகின்றது என்பது தான் புரியவில்லை.

ஒரு விடயத்தில் எங்களுக்குத் தெளிவு வேண்டும். அதாவது - சரியும் சரியின்மையும் இருக்கலாம்; நலமும் நலமின்மையும் இருக்கலாம். Perfection-ஐ எல்லாவற்றிலும் எதிர்பார்க்க முடியாது; எதிர்பார்க்கவும் கூடாது. இப்படிப்பட்ட ஒரு பிரமாண்டமான விடுதலை இயக்கத்தைக் கொண்டு நடத்துகின்ற போது ஆங்காங்கே சின்னச் சின்ன கீறல்கள் விழத்தான் செய்யும்: அது தவிர்க்க முடியாதது. 'நிறைவு' என்பது அதைப் பார்ப்பவர்களின் சிந்தனையைப் பொறுத்தது. 'வீடு' என்று வரும் போது, அவர்களில் என்ன தான் குறைகள் இருந்தாலும், சொந்தப் பிள்ளைகளிலும், சகோதரர்களிலும் நாம் நிபந்தனையற்ற அன்பைப் பொழிகின்றோம் அல்லவா?.... நாடு என்று வரும் போது ஏன் எங்களால் அவ்வாறு உணரமுடியாமல் இருக்கின்றது?...

## இறுமாப்புடன் வாழ புலிகளே காரணம்

எல்லாவற்றுக்கும் மேலால் - விடுதலைப் புலிகள் இயக்கம் எங்களுடைய இயக்கம்: எங்களுக்கான இயக்கம்: எங்களுடைய உற்றாரும் உறவினரும் நண்பர்களுமே புலிகளின் போராளிகள். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழர்களைப் புலிகளாகப் பார்க்கும் பக்குவத்தை உலகமே அடைந்துவிட்டது. அந்தப் பக்குவம் எங்களில் சிலருக்கே இன்னும் வர வில்லையென்றால், அது துயரமல்லவா?...

தமிழர்கள் இன்று உலகில் இறுமாப்போடு வாழ்வதற்கு புலிகளே காரணம் என்பது அப்பழுக்கற்ற உண்மை. தனிப்பட்ட முறையில் - எனக்கு - தமிழனாக வாழ்வதில் ஒரு கர்வம் உண்டு. அந்தப் பெருமை புலிகளால் மட்டுமே கிடைத்தது. தமிழர்களது எதிர்காலமும், விடுதலைப்புலிகளது நல்வாழ்வும் பாலும் வெள்ளை நிறமும் போல இரண்டறக் கலந்தவை. இந்த இயக்கமும், இந்தத் தலைவனும் இருக்கின்ற காலத்தில் தமிழனுக்கு ஒரு விமோசனம் கிடைக்கவில்லையென்றால், அடுத்த இரண்டாயிரம் வருடங்களுக்கு தமிழன் இப்படியே அல்ல, இதை விடவும் கேவலமான நிலையிலேயே கிடப்பான் என்பது விஞ்ஞான பூர்வமாகவும், வரலாற்று ரீதியாகவும் நிரூபணமாகிவிட்ட உண்மை. இந்த நிலையில் விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்துவது போன்ற - அவை உண்மையானவையோ, அல்லது உருவாக்கப் பட்டவையோ - தகவல்களை தமிழர்களாகிய நாங்களே பரப்புவது, இனரீதியாக எவ்வகையான நன்மைகளையுமே எங்களுக்குக் கொண்டுவரப் போவதில்லை; மாறாக தீமையைத்தான் அது கொண்டு வரும்.

## எழுத்தாளர் கடமை

சில சமயங்களில் சில தமிழ் எழுத்தாளர்கள் தங்களை 'நடுநிலையாளர்கள்' என்பது போலக் காட்டிக் கொள்ள முனையலாம். அது ஒரு 'கனவான்தனமான' விடயம் என்றும் கருதலாம். அத்தோடு, 'நாங்களெல்லாம் புத்திஜீவிகள். நாங்கள் சாதாரண பாமர மக்கள் போல கண்மூடித்தனமாக ஒரு விடயத்தில் பற்றோ அல்லது வெறுப்போ கொள்ள மாட்டோம். அவர்களுக்கு ஒரு படி மேலே நின்று நிகழ்வுகளை நாங்கள் பகுத்தறிவுக் கண்கொண்டு தான் பார்ப்போம்' என்று காட்டவும் முனையலாம்.

அப்படி யானவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. அடக்குகின்றவர்களுக்கும் அடக்கப்படுகின்றவர்களுக்கும் இடையிலான ஒரு பெரும் அரசியற் போராட்டத்தில் 'பக்கச்சார்பின்மை' என்பது அர்த்த மற்றது. அங்கே 'பக்கச்சார்பு' இருக்க வேண்டும். அடக்கப்படுகின்றவர்களின் பக்கம் சார்பாக இருக்கவேண்டும். எழுதும் போது ஒரு சீரிய நோக்கம் இருக்க வேண்டும். அதிலும், இது போன்ற சமூக - அரசியல் விவகாரங்களை எழுத்திலிடும் போது அதன் நோக்கம், ஓர் உயரிய கருத்தைச் சொல்வதாக இருக்க வேண்டும். அந்தக் கருத்து அந்த எழுத்துத் தொடர்பு பட்ட மக்கள் சமூகத்திற்கு அல்லது அந்த எழுத்துத் தொடர்புபட்ட மக்கள் சமூகத்தைப் பற்றி ஒரு உருப்படியான செய்தியைச் சொல்வதாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு வகையில் அந்த மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும்.

ஆக மொத்தத்தில் அந்த எழுத்து சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற தெளிவு இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை உலகம் தோன்றியது முதற்கொண்டு இன்றுவரையான காலகட்டத்தில் முதற் தடவையாக ஈழத்தமிழினம், வரலாற்றின் அதி சிறந்த காலகட்டத்தில் நின்று கொண்டிருக்கின்றது. இந்தக்காலகட்டத்தில் எமக்கு ஒரு நல்லது நடக்கவில்லையென்றால் எனது கற்பனைக் கெட்டிய தூரம்வரைக்கும் இனி எப்போதுமே அது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கூட இது தொடர்பாகக் கருத்து வேற்றுமை இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

எனவே, இன்றைய காலகட்டத்தில் நாம் எல்லோருமே - சாதாரண பொது மக்களிலிருந்து பெரும் கல்வி மான்கள், அறிவுஜீவிகள் வரை - ஒன்றுபட்டிருக்க வேண்டியது இன்றியமையாதது. தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தைத் தலைவர் பிரபாகரன் இரு முனைகளில் சமாந்தரமாக முன்னெடுத்துச் செல்கின்றார். ஒன்று - ஆயுதப் போர் முனை: அதை அவரிடமே விட்டுவிடுங்கள், அவர் பார்த்துக் கொள்ளுவார். அடுத்தது - அரசியற் போர் முனை: அது நாங்கள் எல்லோருமே சேர்ந்து வென்றெடுக்க வேண்டிய பொதுக்களம்.

## விடுதலை இயக்கம் என்பதை மறக்கும் ஆய்வாளர்கள்

இங்கே இன்னொரு விடயத்தையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள் விவகாரங்களைச் செய்திகளின் மையப் பொருளாக்குகின்ற போது அது ஒரு 'விடுதலை இயக்கம்' என்ற அடிப்படை உண்மையை சில ஆய்வாளர்கள் மறந்து விடுகின்றார்கள். அவ்வாறு மறந்து, புலிகள் இயக்கத்தையும் ஒரு சாதாரண அரசியற் கட்சி போலப் பார்க்கத்தொடங்கும் போது, அவர்களது ஆய்வுக்கரு வலுவிழந்துவிடுகின்றது. அவ்வாறு அவர்கள் தவறான கண் கொண்டு பார்ப்பது மிகக் கவலைக்குரிய விடய மும் ஆகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தொழில் சார் அரசியல் கட்சி அல்ல: புலிகளின் போராளிகள் பதவிச் சலுகைகளுக்கும், மாதச் சம்பளத்துக்கும், உபரிக் கொடுப்பனவுகளுக்கும் உரியவர்களும் அல்லர். புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம்:

ஒரு அரசியல் கட்சியை விமர்சிப்பது போலப் புலிகள் இயக்கத்தை விமர்சிப்பது எவ்வகையிலுமே பொருத்தமற்றது. ஆய்வு செய்வதிலும் அதை எழுத்தி லிடுவதிலும் எமக்கிருக்கும் வித்தகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக எழுதுவதைவிட, தேசத்தின் நன்மை கருதி - எப்போதுமே - எதை எழுதலாம், எதை எழுதக்கூடாது என்று ஒரு சுய தணிக்கை வைத்திருப்பது தேவையானது. தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ந்து செல்லும் பாதையை இன்னும் சற்றுச் செப்பனிட முடியும் என்று யாராவது கருதினால், தங்களது அந்த அறிவார்ந்த ஆலோசனைகளை ஆங்கிலப் பத்திரிகைகளினூடாக வழங்குவதைவிட வேறு சிறந்த வழிகளும் உண்டு.

துரதிஷ்டவசமாகப் புலிகளின் உள் வீட்டு விவகாரம் வெளியில் வந்து. செய்திகளதும், ஆய்வுகளதும் முக்கிய கருப் பொருளாக கருணா விவகாரம் உருவெடுத்ததன் பின்பு விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான தங்களது பல்வேறு கருத்துக்களையும் சில தமிழ் ஆய்வாளர்கள் விலாவாரியாக விபரித்து வந்தார்கள். அவர்கள் தங்கள் ஆய்வுக்கட்டுரைகளில் உட்படுத்தும் தகவல்கள் உண்மையானவையா, அல்லது கற்பனையானவையா என்பது கூட அனேக வாசகர்களுக்குத் தெரிந்திருக்காது. அதன் விளைவு - எல்லாம் தெரிந்தவர்கள் போல எம்மில் சில ஆய்வாளர்கள் வெளிப்படுத்திய உண்மையற்ற தகவல்களையும் மக்கள் உண்மையானவை என்று நம்பிவிடவும், அவ்வாறு நம்பிக் குழம்பிவிடவும் சாத்தியப்பாடுகள் இருந்தன.

## தமிழோசை

தமிழ் மொழியில் உள்ள உலகத்தின் தலைசிறந்த - செல்வாக்கு மிக்க - கருத்துருவாக்க சாதனங்களுள் ஒன்று 'தமிழோசை'. பி.பி.ஸி என்ற பெரும் உலக ஊடக சேவையின் அங்கமாக இருந்தாலும் - 'பக்கசார்பின்மை'யைக் கைக் கொள்ள வேண்டும் என்ற அந்தத் தலைமை நிறுவனத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டிய விதிமுறை இருந்தாலும் - 'தமிழோசை'க்கு தமிழர்களின் ஆத்ம ஓசையாக இருக்கவேண்டிய ஒரு தார்மீகக்கடமைப் பாடும் இருக்கின்றது என்பதை அதன் இயக்குனர்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். கருணா விவகாரம் போன்ற sensitive-வான விடயங்களைக் கையாளும் போது - தமிழ் தேசிய இனத்தின் ஒட்டு மொத்தமான சுபீட்சம் கருதி - நடுநிலையாக இருந்து செய்திகளை வெளியிட வேண்டும் என்பதை விட நியாயத் தின்பால் நின்று, நன்மையின் பால் நின்று நிகழ் வுகளை ஆய்வு செய்ய வேண்டும் அல்லது செய்திகளை வெளியிட வேண்டும்.

ஒப்பீட்டளவில் 'தமிழோசை' மேன் மையுடன் செயற்பட்டது என்றாலும் - கருணாவிடம் செவ்வி கண்டது, கருணாவின் ஆட்கள் அப்படிச் சொன்னார்கள், இப்படி உரையாற்றினார்கள் என்று செய்தி வெளியிட்டது, அல்லது தமிழ் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாதகம் செய்வோரைத் தூர விலக்காமல் ஆதரித்தது எல்லாம் தேவையற்றவை. இது ஆனந்தசங்கரி ஐயா, டக்ளஸ் அண்ணர் போன்றவர்களுக்கு மட்டுமல்லாமல், 'தமிழோசை'யின் சில செய்தியாளர்களுக்கும் பொருந்தும். இவ்வாறான செயல்கள் - தமிழ் பேசும் மக்களின் அரசியல் - சமூக வாழ்வில் எவ்விதமான நற் தாக்கத்தையும் ஏற்படுத்தும் தன்மையற்றவை என்பது அல்ல; மாறாக, அவை பாதகமான விளைவுகளை மட்டுமே உண்டுபண்ணக்கூடியவை.

## பத்திரிகைகளின் போக்கு

கொழும்பின் ஆங்கிலப் பத்திரிகைகள் சிலவற்றில் ஆய்வுரைகள் வரையும் சில தமிழ் எழுத்தாளர்கள் இதுவரை நாளும் தாங்களே கேள்விகளையும் கேட்டு அவற்றுக்குத் தாங்களே விடைகளையும் பகிர்ந்து வந்திருந்தார்கள். கருணா விவகாரம் வெளிப்பட்ட உடனடி ஆரம்பத்தில் அதனை உண்மையிலேயே ஒரு வடக்கு - கிழக்கு பிரதேசவாதப் பிரச்சினை என்றும்; பின்பு, புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுக்கிடையில் சிக்கல் என்றும் வர்ணித்தார்கள். பின்பு, பிரச்சினைக்கான மூலத்தைப் பற்றி அலசுவதை விடுத்துவிட்டு, கருணாவின் அடுத்த நகர்வு எப்படி இருக்கும்?... அவரின் முன்னால் உள்ள தேர்வுகள் என்ன?... கருணா விவகாரத்தைப் புலிகள் எப்படிக் கையாளலாம்?... எப்படிக் கையாள வேண்டும்? என்பவை பற்றியெல்லாம் ஆய்வு செய்துவந்தார்கள். புலிகளுக்கு ஆலோசனைகள் கூட வழங்கினார்கள்.

ஒட்டுமொத்தமான தமிழ் தேசிய இனமே எதிர் கொண்டு நின்ற ஒரு சவாலை - ஒரு பச்சைத் துரோகத்தை - "அம்மான்களுக்கிடையிலான பிணக்கு: பொட்டு எதிர் கருணா" என்று ஒரு சிறிய வட்டத்துக்குள் சுருக்கி, இல்லாத ஒரு கதையை இருப்பதாவும், இருக்கிற ஒரு கதையை இல்லாத மாதிரியும் எழுதியிருந்தார் டி.பி.எஸ். ஜெயராஜ் (Sunday Leader: 14 – 3 – 04). 'இந்தக் கருணா பிரச்சினை பொட்டம்மானால் உருவாக்கப்பட்டுத் தூண்டப்பட்டது' என ஆரம்பித்து, அதற்கு ஒரு நீண்ட பட்டியலான கற்பனைக் காரணங்களையும் அடுக்கி, 'இந்தப் பிரச்சினைக்குப் பிரபாகரன் தன்னுடைய தளபதிகளிடையே கைக்கொள்ளும் ஒருவகைப் பிரித்தாளும் தந்திரோபாயமும் கூடக் காரணம்' என்று முற்றிலும் உருவாக்கப்பட்ட ஒரு 20 ஆண்டுகாலக் கட்டுக்கதை யையும் அவர் வளர்த்துச்சென்றிருந்தார். பின்பு - 'பிரபாகரன் மீதான கருணாவின் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள்' என்று ஈர்ப்புத்தன்மை கொண்ட ஒரு தலைப்பை இட்டு, அன்ரன் பாலசிங்கம் அவர்களின் படத்தையும் போட்டு, பாலசிங்கம் அவர்களது Tamil Guardian செவ்வியின் கவர்ச்சியான இரண்டு பந்திகளை கறுப்பு எழுத்துக்களில் பிரசுரித்து - ஜெயராஜ் எழுதியிருந்த (Sunday Leader: 21 – 3 – 04) இன்னொரு கட்டுரையின் உள்ளே இருந்த விடயங்கள், அவருக்கு உள்ளே என்ன இருக்கின்றது என்பதன் பிதிபலிப்பு.

ஆங்கிலச் சொல் வண்ணங்களால் வெளிப்பார்வைக்குத் தமிழாபிமானச் சாயம் பூசும் அவரது எழுத் தலங்காரத்தின் பூடகமான உட்கருத்துக்களும், நுட்பமான - உள்ளார்ந்த - அர்த்தம் கொண்ட வார்த்தைப் பிரயோகங்களும் எல்லோராலும் விளங்கிக் கொள்ள முடியாதவை அல்ல. "புலிகளிலிருந்து பிரிந்தவுடனே கருணாவுக்கு எக்கச்சக்க மான ஆதரவும் அவர் மேல் ஏராளமான இரக்கமும்" மற்றவர்களிடம் இருந்ததாக அவர் ஆரம்பித்திருந்தார். அதுவே சுத்தப் பொய். உடனடி ஆரம்பத்தில் மக்களுக்குத் திகைப்பு: ஆத்திரம். நோர்வே போன்ற வெளிநாடுகளுக்கு அதிர்ச்சி: கவலை. அது தான் உண்மை. அவர் தொடர்ந்து எழுதுகையில், "துரதிஷ்டவசமாகப் புலிகள் மற்றும் பிரபாகரனுக்கு ஆதரவும், கருணா மீது பலத்த கண்டனங்களும் பெருகி வருகின்றன. அவர் ஒரு துரோகி என்று வர்ணிக்கப்படுகின்றார். அவரது செயற்பாடுகள் துரோகத்தனமானவை யாகக் காட்டப்படுகின்றன. இது சமரசமாகப் போவதற்கான நல்ல சகுணமாகத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டிருந்தார்.

புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம்: புலிகள் இயக்கம் ஒரு இராணுவ அமைப்பு: கருணா செய்தது துரோகம் இல்லையெனில், அதை வேறு எவ்வாறு தான் அழைப்பது?... உலகத்தின் எந்த ஒரு நாடாவது, அல்லது எந்த ஓர் இராணுவமானது இவ்வாறான ஒரு விசுவாசமற்ற துரோகச் செயலை சமரசமாகப் பேசித் தீர்க்கத் தயாராய் இருக்குமா?...

## தமிழ்ச்செல்வனின் பதில்

பிரித்தானியாவில் இருந்து ஒரு பல்கலைக்கழக மாணவன் தொலைபேசியில் கேட்ட இதே போன்ற ஒரு 'சமரச முன்னெடுப்பு' கேள்விக்கு, தமிழ்ச்செல்வன் ஒரே வரியில் பதில் சொல்லியிருந்தார்: "எங்களுடைய தலைவர் இங்கே கொள்ளைக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கவில்லைத் தம்பி" என்பதே அந்த பதில். அதை ஜெயராஜும் விளங்கிக் கொள்ள வேண்டும். அதே கட்டுரையில் ஜெயராஜ் தொடர்ந்து எழுதியிருந்தார்: "புலிகள் கருணாவுடன் தொடர்ந்து பகைமையை வளர்த்து ஆயுத நடவடிக்கையில் இறங்கினால், அவர் சிங்களப் படைகளுடன் தன்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்".

ஏன், கருணாவுக்கு வேறு மார்க்கங்களே இருந்திருக்கவில்லையா?... தான் செய்த தவறை உணர்ந்து புலிகள் வழங்கிய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளல்?... புலிகளிடம் சரணடைதல்?.... அல்லது, தன்னைத் தானே அழித்துக்கொள்ளல்?..... தனது கட்டுரையை அவர் இவ்வாறு முடித்திருந்தார்: "இந்தப் பிரச்சினையின் முடிவு என்னவாக இருந்தாலும், புலிகள் பலவீனப்பட்டு விடுவார்கள்; கொல்லப்பட்டுவிட்டாலும், கருணா கிழக்கின் தியாகி யாகவே திகழ்வார்".

'பலவீனப் பட்டுவிடு வார்கள்' என்பதற்காக கருணா மீது நடவடிக்கை எதுவும் எடுக்காமல் அப்படியே விட்டு விடச் சொல்லியிருந்தாரா, அல்லது கருணாவை இப்படியே விட்டு வைத்தால் புலிகள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# ஹெல உறுமயவின் அரசியல் பிரவேசம் நாடாளுமன்ற நடைமுறைகளை மாற்றுமா?

ஜாதிக ஹெல உறுமயவின் ஒன்பது பௌத்த பிக்குகள் நாடாளுமன்றம் செல்கிறார்கள். தர்ம இராஜ்யத்தை இத்தீவில் நிறுவப்போவதாக சொல்லிக்கொள்ளும் இப்பிக்குகள், நாடாளுமன்ற செயலாளர்நாயகத்தின் கீழ் பணியாற்றும் பணியாள் தொகுதியினருக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தப் போகிறார்கள்.

இவர்கள் அரசமைப்பு ரீதியாகவும் கலாசாரரீதியாகவும் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பௌத்த சிங்கள சமூகத்தினர் மத்தியிலிருந்து தெரிவாகி, மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் செல்கின்றனர். இப்பௌத்த குருமார் தொடர்பாக, எவ்வாறான மதிப்புமரியாதைப் பண்பாடுகளை நாடாளுமன்ற மரபுகள், நடைமுறைகளுக்குள் புதிதாகப் புகுத்துவது என்பதே நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் முன்னுள்ள சற்றுச்சிரமமான விடயம் ஆகும்.

இங்கு நாடாளுமன்ற கட்டடத்தொகுதிக்குள் இருவகையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் மண்டபத்துக்குள் (Within the chamber) ஆசன இருக்கைகள் தொடர்பான விடங்களில் பிக்குகளுக்கு -- அவர்களது மரியாதையை பேணும்வகையில் – எவ்வாறு ஆசனங்களை ஒதுக்குவது?

சபாநாயகரை நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய இப்பிக்குகள் எவ்வாறு விழித்துப் பேசுவது? சபாநாயகரும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்பிக்குகளை எவ்வாறு விழித்துப் பேசுவது?

சபாநாயகர் சபைக்குள் நுழையும் போது இப்பிக்குகள் ஏனைய எல்லா உறுப்பினர்களையும் போன்று சபாநாயகருக்கான மரியாதைசெய்யும் மரபைப் பேணுவது பொருந்துமா? அல்லது சபாநாயகர் சபைக்குள் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளைக் கவனிக்கத் தொடங்கியபிறகு இப்பிக்குகள் சபைக்குள் நுழைவது பொருந்துமா?

இவை போன்ற சில விடயங்களில் புதிய மரபுகள், நடைமுறைகளை இனி மேல் பதவி ஏற்கப்போகின்ற புதிய சபாநாயகரின் அனுமதியுடனும் அங்கீகாரத்துடனும் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளவேண்டியவர்களாக உள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஒன்பது பேர்களும் ஜாதிக ஹெல உறுமயவின் எதிர்கால தர்மராஜ்யத்துக்கு கட்டியம் கூறப் போகின்ற அதிவணக்கத்துக்குரியவர்கள். அவர்கள் நாடாளுமன்ற மரபுகள், நடைமுறைகள் என்பனவற்றிலிருந்து இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றிலும் பல மாறுதல்களையும் புதிய புதிய அத்தியாயங்களையும் திறக்கப்போகிறவர்கள். ஆகையினால் அவர்கள் மிகமிக வித்தியாசமானவர்களாகவே நடந்துகொள்ளப் போகிறார்கள்.

## உறுமயவின் மிகப்பலமான அத்திபாரம்.

ஜாதிகஹெலஉறுமய பெற்றுள்ள வெற்றி பல்வேறு பரிமாணங்களில் அக்கட்சிக்கு மிகப்பலமான அத்திவாரமாக அமைந்திருக்கிறது. அதேவேளையில் சுயநிர்ணய அடிப்படையில் தமக்கான அதிகாரப்பகிர்வை எதிர்பார்க்கின்ற சிறுபான்மை மக்கள் சமூகங்களுக்கு உடனடியாக மிகப்பாதகமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

தூர நோக்கில் ஜாதிக ஹெல உறுமயவின் பௌத்த சிங்கள தேசியவாதம் மேலும் மேலும்கெட்டியாகும்கட்டத்தில் சிறுபான்மை சமூகத்தவரின் தமிழ்த் தேசியத்தின் சுயநிர்ணயம் எவ்வகையில் பலப்படும் என்பது, ஜாதிக ஹெல உறுமய தெற்கில் வளர்த்தெடுக்கும் அரசியலிலும் அதற்கெதிராக தமிழர் விடுதலை அரசியல் நகரும் திசையிலும் சர்வதேச, தென்னாசிய அரசியல், பொருளாதார உறவுகளின் போக்குகள் எவ்வகையில் எதிர்காலத்தில் நகரும் என்பதிலும் மிகவும் தங்கியுள்ளது.

## படித்த உயர்குழாம் சிங்களவரின் ஆதரவு

ஜாதிக ஹெல உறுமய தேசிய ரீதியில் 5,52,724 வாக்குகளைப் பெற்றுள்ளது. இது மொத்தமாக விழுந்த செல்லுபடியான வாக்குகளில் 5.97% ஆகும். மொத்தமாக விழுந்த மேற்படி வாக்குகளில் கொழும்பு மாவட்டத்தில் 1,90,618 வாக்குகளைப் பெற்றதன் மூலம் மூன்று ஆசனங்களையும் கம்பஹா மாவட்டத்தில் 1,02,516 வாக்குகளைப் பெற்றதன் மூலம் இரண்டு ஆசனங்களையும் களுத்துறை மாவட்டத்தில் 56,615 வாக்குகளைப் பெற்றதன் மூலம் ஓர் ஆசனத்தையும் ஜாதிக ஹெல உறுமய பெற்றது.

அரசியல் ரீதியாகவும் வர்த்தக பொருளாதார ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மேல் மாகாணசபையினுள் அடங்கும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் 3,49,749 வாக்குகளை இக்கட்சி பெற்றுள்ளது.

இவ்வாக்குகள், பௌத்த சிங்கள சமூகத்தவர் மத்தியில் கற்றவர்கள் என்ற கருதத்தக்க மத்திய வகுப்பையும், கூடுதலான அளவில் உயர் வகுப்பையும் சேர்ந்தவர்களது வாக்குகள் ஆகும். இவ்வாக்குகள் படிப்புக்குறைந்த ஏழைச்சிங்கள மக்களுடைய வாக்குகள் அல்ல.

அவ்வாறே மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த உயர்குழாம் பௌத்த சிங்களவர் 42,192 பேர் ஜாதிக ஹெல உறுமயவுக்கு வாக்குகளை வழங்கியதன் மூலம் மேலும் ஓர் ஆசனத்தை வழங்கியுள்ளனர். இலங்கையின் புராதன, நவீன அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் பிரதேசங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களின் மூலம் ஜாதிக ஹெல உறுமய ஏழு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டமை அக்கட்சிக்கு எதிர்கால அரசியல்தொடர்பாக மிக நல்ல சகுனமாக உள்ளது.



தேர்தலில் வெற்றி பெற்ற ஹெல உறுமய உறுப்பினர்கள்

## மரபுகளும் பாரம்பரியங்களும் உடைந்தன

அதே வேளை இவ்வெற்றி சகல சிறுபான்மைக்கட்சிகளையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி, ஐக்கிய தேசியக்கட்சி போன்ற சிங்களக் கட்சிகளையும் பெரியளவில் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

ஜாதிக ஹெல உறுமயவின் வெற்றியினால் ஐக்கிய தேசியக்கட்சியின் மரபு வழி வெற்றித்தளமாகவிருந்த கொழும்பு மாவட்டத்தில் எதிர்பாராத இழப்புகளை ஐக்கிய தேசியக்கட்சி சகித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மரபு வழியான பாரம்பரிய வெற்றி மாவட்டமான கம்பஹாவில் ஜாதிக ஹெல உறுமய ஈட்டியுள்ள வெற்றி சுதந்திரக்கட்சிக்கு பலத்த ஏமாற்றங்களைக்கொடுத்துள்ளது.

## உறுமய பெரும் அரசியல் சக்தியாகிறதா?

கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டு தசாப்தங்களுள் சிங்கள உயர்குழாம், மத்திய தர வகுப்பினர் ஆகியோர் கொழும்பு மைய நகரப்பகுதியிலிருந்து குடிபெயர்ந்து அதன் சுற்றயல் பிரதேசங்களான மொரட்டுவ, இரத்மலான, கெஸ்பெவா, மகரகம, கோட்டே, கொலன்னாவ, கடுவெல்ல, ஹோமஹம, அவிசாவளை போன்ற பிரதேசங்களுக்குச் சென்று மிக வசதியான வீடு, மனைகளை அமைத்து வாழ்கிறார்கள்.

கொழும்பு நகரின் இதயப்பகுதிகளில் தமக்கிருந்த காணிகளில் கட்டடங்களைக் கட்டி அதிகளவு வருமானத்தைச் சம்பாதிக்கிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட சுற்றயல்பிரதேசங்களுக்கு நகர்ந்த பெரும்பான்மைச் சிங்களவர் – சிங்கள உயர்குழாமான இவர்கள் – நன்கு கற்றவர்களாகவுமுள்ளனர். கொழும்பு நகரின் இதயப்பகுதிகளிலிருந்து நகரப்பகுதிகளுக்கு விலகி அதன் சுற்றயல் பிரதேசங்களில் வாழும் இவர்கள் ஜாதிக ஹெல உறுமயவுக்கு தமது குறிப்பிடத்தக்க ஆதரவை பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் கொழும்பு மாவட்டத்தில் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குளில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு 4,641 வாக்குகளும் ஐக்கிய சுதந்திரக்கூட்டமைப்புக்கு 3,482 வாக்குகளும் ஜாதிக ஹெல உறுமயவுக்கு 3260 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இதன் மூலம் கொழும்பு மாவட்டத்தில் பணியாற்றும் அரசாங்க சேவைத்துறையைச் சேர்ந்த உயர், நடுநிலை உத்தியோகத்தர்கள் குறிப்பிடத்தக்க அளவில் ஜாதிக ஹெல உறுமயவை ஆதரித்துள்ளமை தெளிவாகின்றது.

மேல் மாகாணத்தையும், மத்திய மாகாணத்தின் கண்டியையும் தவிர, காலிமாவட்டம், அனுராதபுரம் மாவட்டம், குருநாகல் மாவட்டம், இரத்தினபுரி மாவட்டம், புத்தளம் மாவட்டம், கேகாலை மாவட்டம், மாத்தறை மாவட்டம், மொனராகலை மாவட்டம், பதுளைமாவட்டம், மாத்தளை மாவட்டம், பொலநறுவை மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலும் ஜாதிக ஹெல உறுமய தாக்கமான அரசியல் செல்வாக்கைப் பெற்றுள்ளது.

இம் மாவட்டங்களில் இக்கட்சி மூன்றாவது பெரிய அரசியல்சக்தியாகப் பரிணமித்துள்ளது. இவற்றின் வாயிலாக தேசிய ரீதியில் 5,52,724 வாக்குகளைப் பெற்று தேசியப்பட்டியல் வாயிலாக மேலும் இரண்டு ஆசனங்களைப் பெற்றதன் மூலம் மாவட்ட அடிப்படையில் பெற்ற ஏழு ஆசனங்களையும் சேர்த்து மொத்தமாக ஒன்பது ஆசனங்களை இக்கட்சி வென்றுள்ளது.

இந்த ஆசனங்களுக்கு பின்னால் கல்வி கற்ற, சிந்திக்கும் ஆளுமைமிக்க பௌத்த சிங்கள வாக்குகளே உள்ளன என்பது கவனத்துக்கு உரியதாகும்.

பௌத்த சிங்கள கலாசாரத்தை மீட்டெடுத்து தர்மராஜ்யத்தை அமைக்கின்ற வேலைத்திட்டத்துடன் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வுக்கான முயற்சிகளை முற்றாக மறுக்கும் கொள்கைகளையும், நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற சமாதான முயற்சிகளை மிகத் தவறான முன்னெடுப்புகளாக காட்டும் செயற்பாடுகளையும் பொதுத் தேர்தலுக்கான பிரசார காலத்தில் ஜாதிக ஹெல உறுமய மக்களின் முன் வைத்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளை மிகக் காட்டமாகவும் அக்கட்சி விமர்சித்தது. அக்கட்சியின் கொள்கை கோட்பாடுகளுக்கு சிந்தித்து செயற்படக்கூடிய கற்ற சிங்களவர்களே வாக்களித்துள்ளனர்.

நோர்வே நாட்டின் ஈடுபாட்டுடன் நிகழும் சமாதான முயற்சிகளை ஜே.வி.பி விரும்பவில்லை. அதே நிலைப்பாட்டில் இன்னும் தீவிரமாக இருக்கிறது ஜாதிக ஹெல உறுமய. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நாடாக நோர்வே உள்ளது என இரு கட்சிகளும் கருதுகின்றன.

தமிழர் பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்வதை இரு கட்சிகளும் மிகவும் வரவேற்கின்றன. விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான (ISGA) யோசனைகளை ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பன மிகக்கடுமையாக எதிர்க்கின்றன.

நாட்டில் பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரையில் முற்றிலும் திறந்த பொருளாதாரக் கொள்கையாகவுமில்லாமல் முற்றிலும் மூடிய பொருளாதாரக் கொள்கையாகவும் இல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு பொருளாதாரக் கொள்கையை (A middle path economy) கடைப்பிடிக்கவே ஜே.வி.பி யும் ஜாதிக ஹெல உறுமயவும் விரும்புகின்றன.

## தமிழர் வரலாற்றை துயர் சூழுமா?

ஜே.வி.பி விவசாயம், மீன்பிடி சார்ந்த தொழிலாளிகளாக உள்ள சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் நாடளாவிய ரீதியில் பரவலான செல்வாக்கை பெற்று கடந்த பொதுத் தேர்தலில் 39 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஜாதிக ஹெல உறுமய நாட்டின் கேந்திர முக்கியத்துவம் மிக்க பிரதேசங்களில் வசிக்கும் படித்த சிங்களவர்கள் மத்தியிலும் நாடளாவிய ரீதியில் பரவலாகவும் தனது ஆதரவுத் தளத்தை விஸ்தரித்து 9 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஜாதிக ஹெல உறுமய தனது ஆதரவை வழங்கும் என்பது புரிகிறது. இந்நிலையில் புதிய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பில் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் பாரிய செல்வாக்கைச் செலுத்தவுள்ளன. இந்த இரு தீவிர பௌத்த சிங்களக் கட்சிகளின் ஒரே தொனியிலான போக்கும் ஒற்றுமையான செயற்பாடுகளும் சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் மிகச்சாதகமான அரசியல் பொருளாதார நன்மைகளை விளைவித்தாலும் தமிழர் தேசிய அரசியல் வரலாற்றுக்கு மிகத்துன்பகரமான சம்பவங்களைச் சேர்க்கப்போகிறது. அதிலிருந்து தமிழ்த்தேசியத்தின் சுயநிர்ணயம் எவ்வகையில் பலப்படப்போகின்றது?

## தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சி

மேலும் தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனில் தமிழீழ விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஜாதிக ஹெல உறுமய செயற்பட எத்தனித்து வருகின்றது.

இந்த வகையில் தேர்தல் காலத்தில் உள்ளூரில் மூன்று சக்திகளைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்த ஜாதிக ஹெல உறுமய எத்தனித்தது.

கருணா, ஆனந்த சங்கரி, டக்ளஸ் தேவானந்தா ஆகிய மூவர் பற்றியும் உறுமயவின் பிக்குகள் மிகவும் ஆர்வமாக இருந்தனர். ஆனந்தசங்கரியை தமிழ்வாக்காளர் நிராகரித்தமை, கருணா மட்டக்களப்பு அம்பாறையிலிருந்து அகற்றப்பட்டமை என்பன ஜாதிக ஹெல உறுமயவின் கனவை சாத்தியமற்றதாக்கின.

எனினும் ஆனந்தசங்கரிக்கு தனது தேசியப்பட்டியலில் ஓர் ஆசனத்தை வழங்க ஜாதிக ஹெல உறுமய முன்வந்தமை அதன் கபடத்தனத்தைக்காட்டுகிறது. ஆனந்தசங்கரியை நாடாளுமன்றத்துக்குள் கொண்டு வருவது மூலம் தமிழ் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த முடியும் என்று அது கருதி இருக்கலாம்

மேலும் ஆரம்பத்தில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய இரு கட்சிகளும் தத்தமக்கான வாக்கு வேட்டைக்காக ஒன்றை ஒன்று சற்று முரண்பட்டுக்கொண்டன போல இருந்திருந்தாலும் புதிதாக அரசாங்கத்தை அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு தனது ஆதரவைக்கொடுக்கும் விவகாரத்தில் ஜே.வி.பியின் கொள்கைகளையே முழுவதுமாக உறுமய ஆதரிப்பதாகத் தெரிகிறது.


ஒற்றை ஆட்சி அமைப்புக்குள் அதிகாரப் பரவலாக்கம் செய்வதே தமிழருக்கான தீர்வு என்று ஜே.வி.பி வலியுறுத்துகிறது. சமஷ்டி யாப்பு ஒன்றினூடாக தீர்வு முன்வைக்கப்படுவதை ஜே.வி.பி எதிர்க்கிறது. இந்த நிலைப்பாட்டையே ஜாதிக ஹெல உறுமயவும் கொண்டுள்ளது.

- யாழ்ஆத்தமா -


மசாலா மிக்ஸ்

# மொனாலிஸா சிரிப்பில் மெய்மறந்த ரசிகர்!

மொனாலிஸா ஓவியத்தின் சிறப்பு அதன் சிரிப்புத்தான். பற்கள் தெரியாமல் மொனாலிஸா சிரிப்பதுபோல உருவகித்து ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. ஆண்டாண்டு காலத்திற்கு முன் னர் வரையப்பட்ட மொனாலிஸா ஓவியம் மக்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது என்பதற்கு இந்தப் படம் தக்க சான்றாகும். ஜெனிவா கலைக் கூடத்தில் உருவாக்கப்பட்ட ஒரு மொனாலிஸா ஓவியத்தின் மீது அமர்ந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார் இந்த ரசிகர்.



# ''ரோபோ'' நாயுடன் இயந்திர மனிதன் உலா!



தானாகவே நடமாடும் சக்தியுள்ள ''ரோபோ'' நாய் ஒன்று ஜப்பானிலுள்ள சொனி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மிகவும் தொழில்நுட்பவலுவுள்ள இயந்திர மனிதனையும் மேற்படி நிறுவனம் தயாரித்திருக்கிறது. ''ரோபோ'' நாயுடன் இயந்திர மனிதன் உற்சாகத்துடன் உலாவரும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# வீதிக்கு வந்துவிட்ட ஒஸ்கார் சிற்பங்கள்



உலகத்திரைப்பட வல்லுநர்களின் திறமையைப் போற்றும் விதத்தில் ஒஸ்கார் பரிசு வழங்கப்படுவது வழக்கம். ஒஸ்கார் சிற்பங்களைப் பெறுவதற்காக திரைப்படக்கலைஞர்கள் கடுமையாகப் போட்டியிடுவார்கள். அண்மையில் ஒஸ்கார் பரிசளிப்பு விழா நடந்து முடிவடைந்த பின்பு மண்டபத்தை அலங்கரித்த இராட்சத ஒஸ்கார் சிற்பங்கள் வீதியில் இறக்கி வைக்கப்பட்டிருந்த காட்சி இது.

# தூங்கும் அழகிக்கு ஏற்பட்ட மதிப்பு



''சிலீப்பிங் பியூட்டி'' என அழைக்கப்படும் தூங்கும் அழகி நாட்டிய நாடகம் ஆங்கில ரசிகர்களை மிகவும் கவர்ந்திருக்கிறது. இந்த நாட்டிய நாடகம் லண்டனிலுள்ள றோயல் கலா மண்டபத்தில் நவீன உத்திகளுடன் அண்மையில் மேடையேற்றப்பட்டபோது பெரும் மதிப்பைப் பெற்றது. தூங்கும் அழகியாக நடித்த லொறீன் குத்பேர்ட்சனின் இனிய இசை ரசிகர்களைக் கவர்ந்த காட்சி.

# பூகம்பம் ஏற்படுத்திய கலக்கம் தீரவில்லை!



பூகம்பம் ஒன்று நிகழ்ந்தால் அதன் தாக்கத்தை அவ்வளவு சுலபமாக விவரிக்க முடியாது. மொரோக்கோ நாட்டில் அண்மையில் நிகழ்ந்த பூகம்பத்தில் பெரும் அழிவுகள் நிகழ்ந்தன. 600 பேர் பலியாகினர். தரைமட்டமாகிவிட்ட தங்கள் வீட்டின் இடிபாடுகள் மீது ஒரு தாயும் மகளும் கலக்கம் நீங்காத நிலையில் அமர்ந்திருக்கும் பரிதாபக் காட்சி.



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஏப்ரல் 11, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் விஜயினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

*1. க.கயல்விழி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 2. ச.சுசீலா, ஜம்பட்டா வீதி, கொச்சிக்கடை. 3. சி.ரூபவதனி, வெள்ளவத்தை. 4. க.சுரேந்திரன், உடுவில் வீதி, மானிப்பாய். 5. சி. அருட்செல்வி, டச்சு வீதி, கோப்பாய்.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

தமிழ்த் திரையுலகில் வில்லன் பாத்திரங்களில் தனக்கென ஒரு தனியான இடத்தை பிடித்திருக்கும் நடிகர் இவர்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



# பேரழிவுக்கான பேரிடி!

மீண்டும் தலை எடுத்துள்ளது பௌத்த மதவாதம். அது எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளதை தேர்தல் நிரூபித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையின்றி ஆட்சியை அமைத்துக்கொண்டுள்ளது.

முன்னைய கருத்துக்கணிப்புகளின்படி, தொங்கு நாடாளுமன்றம் ஒன்றே அமையும் என்ற நோக்கின்படி அத்தகைய ஒரு ஆட்சியே ஏற்பட்டுள்ளது.

ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வந்துள்ளது.

இந்த நிலையில் தாம் தனித்துவமாக இருந்து கொண்டு அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் முடிவு எடுத்துள்ளன.

இந்த நிலையில் சிறுபான்மை இனங்களின் கட்சிகளில் தங்கியிருக்கத் தேவையில்லை என ஹெல உறுமய புதிய ஆட்சியாளர்களுக்கு தனது ஆதரவை வழங்க முன்வந்திருக்கிறது.

இந்த நிலைப்பாடு எதிர்காலத்தில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு பேரிடியாக மாறும் என்பதில் ஐயமில்லை.

பௌத்த மதக் கோட்பாடுகளோடு பௌத்த தர்மத்தின் மேம்பாட்டை வளர்ப்பது என்ற நோக்கோடு தேர்தலில் களத்தில் குதித்து வெற்றி பெற்றது ஹெல உறுமய.

வெற்றி பெற்ற கையுடன் அதன் தயவு அவசியம் என்ற நிலை ஏற்பட்டுள்ளதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஆட்சி அதிகாரத்தில் தனது முன்னெடுப்புகளை முன்கொணர திட்டமிட்டு வருகின்றது.

விடுதலைப்புலிகளையும், தமிழர்களின் தாயகக் கோட்பாட்டினையும், முற்றுமுழுதாக புறக்கணிக்கும் ஹெல உறுமய தற்போது எழுந்துள்ள முக்கியத்துவத்துக்குள், தனது திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு உரிய வியூகங்களையும் விடுக்க தொடங்கிவிட்டது.

தொங்கு நிலையில் ஆட்சியமைப்பதில் தடுமாறுகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தனது ஆதரவை தருவதாக நேசக்கரம் நீட்டியுள்ளது.

இதற்கான காரணத்தை அது முன்வைத்துள்ளது. சிங்கள அரசுகள் சிறுபான்மை கட்சிகளின் தயவில் தங்கிநிற்க கூடாது என்பதே அந்தக் காரணமாகும்.

இதன் மூலம், ஹெல உறுமய எந்த நோக்கத்திற்காக அரசியலில் குதித்ததோ அதை தெளிவாக வெளிக்காட்டியுள்ளது.

இத்தகைய பேரினவாத வெறியோடு இன்றைய ஆட்சிப்பீடம் கூட்டணி ஆட்சி நடத்தப் போகின்றது என்பதே யதார்த்தமானது. இத்தோடு மட்டும் நின்று விடவில்லை.

இதன் முதல் கட்டமே, வடக்கில் தோல்வி அடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரிக்காக தனது தேசிய நாடாளுமன்ற ஆசனத்தை கொடுக்க முன்வந்த நிலைப்பாடாகும்.

திட்டமிட்டபடி தமிழ் மக்களின் நீண்டகால போராட்டத்துக்கு ஆப்பு வைக்கும் நோக்கோடு இவர்களினால் மேற்கொள்ளப்படும் இன்றைய நடைமுறைகள் நாளை சிறுபான்மை சமுகத்துக்கு பேரிடியாக இறங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நிலையில் தமிழ்ச் சமுகம் எத்தகைய நிலைக்கு தள்ளப்படும் என்பதை காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

நாச்சியூரான்

# கவிதைப் பூங்கா

உனக்குப்புரிகிறதா?
என் கண்களிலிருந்து
வழிந்திடும் கண்ணீர்த்
துளிகள் என்
சோகங்களை
கழுவிச் சென்றாலும்
என்னை
கை கழுவி விடாதே
என்று
உன்னிடம் கெஞ்சுவது
உனக்குப்புரிகிறதா?

ம.நிஷா
மீசாலை

### ஏன்

இதயத்துடிப்பின்
எதிரொலியே
இதழ் பிரியா
புன்னகையால்
என்னை
பித்துப்பிடிக்க
வைத்தவனே
என் கவி வரிகளுக்கு
களம் அமைத்து
கொடுத்தவனே
என்னை
தவிக்க வைத்த
காதலனே
கண்ணீர் மழையதனை
கவிமலராய்
தொடுக்கின்றேன்.

நித்தியசுலா
சுண்ணாகம்.

### காதலியே

இன்ரர்நெட்டும்
ஈமெயிலும்
காதலுக்கு
பதில் சொல்ல
நான் மட்டும்
எச்சில் தடவி
முத்திரை ஒட்டி
பதிலுக்குக் காத்திருக்கும்
காதல் உலகின்
பழங்குடி காதலன்
நானடி.

இ.ராம்குமார்
கொடிகாமம்.

### பிறந்த நாள்

ஆயுளில் ஒரு வருடம்
குறைவது தெரியாமல்
குதூகலிக்கும்தினம்

### நட்சத்திரங்கள்

ஒரே சூலில்
பிரசவிக்கப்பட்ட
ஓராயிரம் குழந்தைகள்

### கவிதை

பல கிறுக்கல்கள்
நடுவே
தெரியாமல்
வரைந்திட்ட ஓர்
அழகான ஓவியம்

### பௌர்ணமி

கூரையே இல்லாத
ஏழைவீட்டின்
விளக்கு

### கல்வி

மானிடப்பிறப்பின்
இரண்டு கண்கள்

கே. தாட்சாயணி
கலட்டி.

### அன்பு

உயிர் உள்ள ஜீவன்களின் இடையில்
உள்ள பிணைப்பு

### ஏமாற்றம்

எதிர்பார்ப்புக்குகிடைத்த
மரண தண்டனை

### இறப்பு

பூமியிலிருந்து
புறப்படுவதற்கான படவுச்சீட்டு.

### விட்டில் பூச்சி

காதலனின் சின்னமாய்
கடவுள் படைத்த தாஜ்மஹால்.

### வெற்றி

தோல்வி என்ற கற்களால்
கட்டப்பட்ட சிகரம்

கி.திரிவேணி
யாழ்.பல்கலைக்கழகம்.

### வந்தது ஏன்?

வானுக்கும் மண்ணுக்கும்
கடலுக்கும் கரைக்கும்
காதல் வந்த போது,
பெண்ணிடம் ஆணுக்கு மட்டும்
காமம வநதது ஏன்?

பு.ரசிகா.

### வாழவா வெண்ணிலா

தென்றலிலே ஒரு
தூதனுப்பினேன்-என்
தேவதையுனை
தினமழைக்கிறேன்
வந்து நீயொரு
வார்த்தையை பேசடி
வசந்தங்கள் வந்தென்தன்
வாசலில் கொட்டும்.
எத்தனை முறையுனை
நான் காண்கிறேனோ
அத்தனை தடவையும்
ஆருயிர் வேகிறேன்
பித்தனைப் போலவே நான்
பிதற்றவும் செய்கிறேன்
கற்றவன் போலவே
கவிதையும் புனைகிறேன்
சற்று நீ
வந்து நான்
சாவதைப் பார்த்திடு நீ
வந்துவிட்டாயெனில்
வாழ்வேன் நான் உயிரோடு

வேணாவிலூர்
மு.ரவி

### தேடுகிறேன் முகவரியை

அன்னையின்
அரவணைப்பிலிருந்து
பிரித்தவனே
தந்தையின்
அன்பிலிருந்து
அறுத்தவனே
சகோதரத்தின்
பாசத்திலிருந்து
அசைத்தவனே
காதல் என்ற
மூன்றெழுத்தைத்
திணித்து விட்டு
என் இதயத்தையே
இரையாக்கிய
என் காதலியே
இப்போ எங்கிருக்கிறாய்!

றாஜ்மோகன்
திருமலை.

### உறவு

ஒரு அச்சில்
இரு சக்கரங்கள்
சுழல்வதால்
வந்து விடும் கூட்டு

### காதலி

இதயத்தின் உணர்வலையை
தூண்டி விடுபவள்

### பூக்கள்

காலைக்கும் மாலைக்கும்
இடையில் பூத்து
மடியும்
சூரியன்கள்

### நிலவு

நீலவானின்
நினைவுச்சின்னம்

### புயல்

ஏழைக்குடிசையின்
சோகங்களை
சோதித்துப்பார்ப்பவை.

சா.ரமேஸ்குமார்
நல்லூர்.

### விதி

காதலின் தீபமதை
ஏற்றி வைத்தான்
என் மனதில்
கலக்கமின்றி
கைகொடுத்தேன்
பேரொளியாய் பொங்கியது
என் வாழ்வில் வெள்ளொளி.
பூக்களாய் பூத்திருந்தேன்
வண்டுகள் மகரந்தம் தர
நல்ல காய்கனி
கொடுப்பேனென
காலமது மெல்ல வர
கண்ணிமைக்கும்
நேரமதில்
எதிரி ஏவிவிட்ட
செல்லதனால்
காதலனை பறிகொடுத்தேன்
கன்னியென காலமெல்லாம்
வாழ் வதுவோ என் விதி?

சி.விதுரன்
பூநகரி.

### முகவரி

உன்னைக் கண்கள்
பார்த்தது முதல்
என் கண்கள்
உறங்கவில்லை.
அப்படியிருக்க-நீ
ஏன் என் முதல்
எழுத்தையும்
முகவரியையும்
தேடுகிறாய்?
என் முகவரி
உன் இதயம்
என்பதை - நீ
அறியவில்லையோ?

என்.ரவிக்குமாரி
யாழ்.பல்கலைக்கழகம்.

### சங்கீதத்தில் நீ

இராகங்களில் நீ
நீலாம்பரியா?
எனை கண்ணீரால்
கரைத்துவிட.
தாளங்களில் நீ
திரிபுடையா
எனை ஏழு நாளும்
இசைத்திட
வாத்தியங்களில் நீ
வீணையா?
உன் விரல்களால்
எனை மீட்டிட
ஆனால் - நீ
பல்லவியாக மாறி
என் வாழ்வில்
திரும்பத்திரும்ப வா
நான் கீர்த்தனையல்ல!

எம்.சங்கீதா
யாழ்ப்பாணம்.

### "காதல்"

கட்டடங்களாய்
உடைந்து விழுவதில்லை காதல்
காவியமாய்
கல்வெட்டில்
பதிந்திருப்பது காதல்.

கடல் நீராய்
வற்றி விடுவதில்லை காதல்
கடல் அலையாய்
ஓய்வதில்லை காதல்

மண்ணுக்குள்
மடிவதில்லை காதல்
மனதினுள்
நிறைந்திருப்பது காதல்.

காதலர்களைப் போல்
அழிவதில்லை காதல்
காற்றைப் போல்
உயிர் வாழ்வது காதல்.

எஸ்.பி.லக்குமணா
வட்டக்கச்சியூர்.

### மாறாத மனம்

அம்மனாய் மழுங்க
அழகாய்
ஆடை ஆபரணங்கள்
அணிந்த உடல்
அகவை ஆறு தொடங்கி
அறுபதும் கடக்கும்
அகம் மட்டும்
பதினாறைக் கடந்து
பல்லிளிக்கும்
இப்போதும் அம்மணமாய்.

கு.தவசீலன்
விசுவமடு.

### வெண்ணிலா

வெட்டவெளியாய்
பல நட்சத்திரங்களுடன்
காலம் தொட்டு
புகுந்து விளையாடும்
குட்டிப்பெண்

ம.தீபனா
வடடக்கச்சி

# ஒளிந்திருக்கும் ஓவியம்




*இந்தப்படத்தில்ஒருதாத்தா தன்னைப் போன்ற இன்னொரு தாத்தாவை ஓவியமாக வரைகின்றார். ஆனால்,இந்த தாத்தாக்களின் முகங்களில் இன்னொரு தாத்தா குதிரையில்சவாரிசெய்கிறாரே! தெரிகிறதா?*

## ஜோக்

ஒரு பஸ் நிலையத்தில் ஏராளமான ஆண்கள் பஸ்ஸுக்கு காத்துக் கொண்டிருந்தார்கள். அங்கே, ஒரு வயது முதிர்ந்த பெண்ணும் அவளது வயது முதிர்ந்த கணவனும்கூட பஸ்ஸுக்கு காத்திருந்தார்கள்.. அப்போது அந்த பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் ஒன்று வந்து நின்றது.

அந்த பஸ்ஸில் இருந்து ஒரு நடுத்தர வயதுப் பெண் இறங்கிச் சென்றாள். அந்த பெண் மிகவும் இறுக்கமான சட்டை அணிந்து அங்கங்களில் பாதி வெளியே தெரியும்படி காணப்பட்டாள். இந்தக் கோலத்தை அங்கே பஸ்ஸுக்கு காத்திருந்த அனைத்து ஆண்களும் பார்த்து ரசித்தனர்.

அந்த பெண் பஸ்ஸை விட்டு இறங்கும் போதும் நடந்து போகும் போதும் அவளது அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். இதனை பார்த்துக் கொண்டிருந்த அந்த வயது முதிர்ந்த பெண்ணுக்கு கோபம் கோபமாக வந்தது. அருகே நின்ற தனது வயது முதிர்ந்தவரான கணவரிடம் சொன்னாள்... "அதோ பாருங்க, அந்த பெண்ணை இங்கே நின்று கொண்டிருக்கின்ற ஆண்கள் எல்லாம் வெறித்தனமாக பார்த்து ரசிக்கிறார்கள். ஒரு பெண் சுதந்திரமாக ஆடை அணிந்து வெளியே நடமாட முடியாத அளவுக்கு இந்த நாடு கெட்டுப் போய் விட்டது. இந்த ஆண்




களை எல்லாம் நடுத்தெருவில் நிற்கவைத்து நாயைச் சுடுவது போல் சுட்டுத்தள்ள வேண்டும். இவர்களெல்லாம் அக்கா – தங்கையுடன் பிறக்கவே இல்லை போலும்" என்று திட்டித் தீர்த்தாள்.

இவ்வளவு திட்டலுக்கும் தனது கணவனிடம் இருந்து எதுவித பதிலும் கிடைக்காததை அடுத்து கணவர் பக்கம் திரும்பி.. "டார்லிங் தற்போது வந்த பஸ்ஸிலிருந்து இறங்கிப் போகும் பெண்ணை இங்கே நிற்கும் ஆண்கள் எல்லாம் வரிசைக்கிரமமாக பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்களே! இதனை பற்றி என்ற நினைக்கிறீர்கள்" என்றாள்... திடுக்கிட்டு திரும்பிய கணவன் கேட்டான்.. பஸ்ஸா.... எங்கே?....

# நெட் ஓவியம்



*மேலே உள்ள படத்தைப் பார்த்ததும் இத்தனை அழகான வீடா? இது எங்கே உள்ளது? என்று கேட்டுவிடாதீர்கள். இது ஒரு கற்பனையாளரால் வரையப்பட்ட ஓவியம்.*

# நெட் குறும்பு




*அருகே உள்ள படத்தைப் பார்த்தால் சில வாழைப்பழங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். அவற்றை அத்தோடு விட்டுவிடாது மீண்டும் உற்றுப் பாருங்கள். அவற்றில் சில மனிதர்களது முகங்கள் காணப்படுகின்றது.*

*அவற்றில் எத்தனை மனிதர்கள் இருக்கும் என்பதை நீங்களே கணக்கிட்டுப் பாருங்கள்.*

# நெட் குழப்பம்


**இந்த உருவத்தைப்பாருங்கள். குழப்பமாக இருக்கிறது. ஒரு பக்கத்தால் பார்த்தால் நடுவே உள்ள சட்டம் ஒன்றில் அடுக்கடுக்காக சில சட்டங்கள் கொழுவப்பட்டுள்ளனபோல் தெரிகிறது. கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் கிடையான சட்டம் ஒன்றை ஊடறுத்து இன்னொருசட்டம்செல்வதுபோல் இருக்கிறது. இதில் எது சரி? அவசரப்படாமல் பார்த்து நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.**



# கண்ணாமூச்சி

அருகில் உள்ள படத்தைப் பாருங்கள். வட்டம் பம்பரம் போல் சுழன்று சுழன்று செல்வது போல் தெரிகிறது.

ஆனால், இது உண்மையில் தொடர்ச்சியாக சுழன்று செல்லவில்லை. தனித்தனி வட்டங்களாகவே உள்ளது. இதனை நீங்கள் நம்பவில்லை என்றால் கையால் ஒவ்வொரு வட்டத்தையும் கீறிப் பாருங்கள். அவை நீங்கள் தொடங்கிய இடத்திலேயே மீண்டும் வந்து முடிவடைவதைக் காணலாம்.





# கமல் ஒரு அவதாரம்

ஒரு மனிதன் புகழ் பெறுவதற்கு முன்னால் அவன் சந்திக்கும் போராட்டங்கள்தான் எத்தனை? அந்தவகையில் சினிமா பக்கம் நாம் சற்றுத் திரும்பிப் பார்த்தால் உலகையே வியக்க வைக்கும் ஒரு நட்சத்திரம் கமலஹாசன். அவர் கடந்து வந்த பாதையைக் கணக்கிட்டால் கமலஹாசனை சினிமா உலகம் கௌரவிக்கவில்லையே என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அரிதாரம் பூசிய சினிமா உலகுக்குள் கமல் ஒரு புது அவதாரம்தான் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் அவருடைய 6 வயதிலேயே சினிமா அழைத்து தனக்குள் புகுத்தியிருக்கிறது. இல்லையேல் இவ்வளவு பெரிய ஏ.வி.எம். நிறுவனம் அந்தச் சிறுவனுக்கு அப்போதே அறிமுகமாக சாத்தியமில்லை.

குழந்தை நட்சத்திரமாக 'களத்தூர் கண்ணம்மா'வில் நடித்த கமல் 'கண்ணும் கரளும்' என்ற மலையாளப் படத்திலும் நடித்திருக்கிறார். 44 ஆண்டுகளுக்கு முன்பு சினிமாவுக்குள் நுழைந்த கமல்ஹாசன் இன்றும் அதே சினிமாவில் தொடர்கிறார். அவரது வரவும் , செலவும், இலாபமும், நஷ்டமும் எல்லாமே சினிமாவில்தான்!

இதுவரை கமல் நடித்த 205 படங்களில் 125 படங்கள் 100 நாட்களைத் தாண்டி ஓடியிருக்கின்றன.

இவர் தமிழக அரசின் சிறந்த நடிகருக்கான விருதை 6 முறையும், தேசிய விருதை 3 முறையும் வாங்கியிருக்கிறார். இதுமட்டுமல்ல 13 முறை சினிமாஎக்ஸ்பிரஸ் விருதையும், 18 முறை பிலிம்பேர் விருதையும் , 30 முறை பிலிம்பேன்ஸ் அசோசியேசன் விருதையும் வாங்கியிருக்கிறார். ஆந்திர அரசின் விருதை 3 முறை பெற்ற ஒரே தமிழ் நடிகரும் கூட இவர் தான்! பத்மஸ்ரீ, கலைமாணி விருதும் பெற்றவர். கமலஹாசன் சிறந்த நடிகர் என்பதையும் தாண்டி பல்வேறு முகங்கள் கொண்டவர். வேறு நடிகர்களுக்கு இல்லாத சமூக அக்கறையும் கூட இவருக்கு நிறையவே உண்டு.

பட்டாம் பூச்சி என்ற படத்தில் முதன்முதலாக கதாநாயகன் ஆன கமல், தனது 100 ஆவது படமான 'ராஜபார்வையை' முதன் முதலாக தானே தயாரித்து படத்தயாரிப்பாளராகவும் ஆனார். கமல் ஒட்டுமொத்தமாக கதை, திரைக்கதை, வசனம் எழுதிய முதல் படமும் இதுதான். பிறகு இதே போல தேவர் மகனின் கதை, திரைக்கதை, வசனத்தையும் அமைத்தார்.

இவர் நல்ல பாடகர் என்பது எல்லோருக்கும் தெரியும். 32 பாடல்களை பாடியிருக்கும் கமல் முதல்முதலாக பாடல் எழுதியது என்றால் அது 'ஹேராம்' படத்துக்காகத்தான்.

தனது ரசிகர் மன்றங்களை கலைத்து அதனை நற்பணி மன்றமாக மாற்றியது மட்டுமல்ல, தானே அதற்கு தலைவராக இருந்து வழி நடத்திச் செல்லும் ஒரே நடிகர் கமலஹாசன்தான்.

சினிமா ரசிகர்களுக்கு சமூக விழிப்புணர்வு ஊட்டும் வகையில் கமலஹாசன் பிரத்தியேக குணம் கொண்டவர்.

இவரது மன்றங்களில் உள்ள நிர்வாகிகளில் அதிகம் பேர் படித்த பட்டதாரிகள். இவர்களை நியமித்தது கமல் தான். ரசிகர்களை ரத்ததானம், கண்தானம், உடல்தானம் செய்யவும் வைத்திருக்கிறார்.

தாய் தந்தை பெயரில் விருதுகள், தனது பிறந்த நாளில் இலக்கிய விருதும், கல்லூரி பேச்சுப் போட்டிகளும் நடத்தி ஆண்டு தோறும் பரிசுப் பொருட்களும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

ரசிகர் மன்றங்கள் மூலம் சமுதாய மாற்றம் விரும்பும் கமலஹாசன் அரசியல் வலைக்குள் விழாதது ஆச்சரியம்தான். எத்தனையோ நடிகர்கள் வந்தாலும், சென்றாலும் தமிழ் ரசிகர்களின் இதயத்தில் கமலுக்கு தனி இடம் உண்டு.

'அரங்கேற்றம்', '16 வயதினிலே', 'சிகப்பு ரோஜாக்கள்', 'வறுமையின் நிறம் சிவப்பு', நினைத்தாலே இனிக்கும்', 'மூன்றாம் பிறை', 'நாயகன்', 'சலங்கை ஒலி', ஏக் துஜே கேலியே', 'விக்ரம்', 'சதி லீலாவதி', 'இந்தியன்', 'அவ்வை சண்முகி' போன்ற படங்கள் காலத்தால் அழிக்க முடியாதவை.

இரட்டை வேடத்தில் 'சட்டம் என் கையில்' 3 வேடங்களில் ' அபூர்வ சகோதரர்கள்' 4 வேடங்களில் 'மைக்கேல் மதன காமராஜன்' 8 வேடத்தில் 'எல்லாம் இன்பமயம்' என எத்தனை? எத்தனை? வேடங்கள் இதில் பேசவே பேசாத பேசும் படம் வேறு...

எட்டியே பார்க்க முடியாத ஆஸ்கார் விருது கதவுகளை கமலின் 7 படங்கள் தட்டிவிட்டு வந்திருக்கின்றன.

1977 இல் தமிழ் சினிமாவில் ஒரு அதிசயம் நடந்தது-அந்த ஆண்டில் கமல் நடித்த 17 படங்கள் வெளிவந்திருந்தன. இது மட்டுமல்ல கமலின் 65 தமிழ் படங்கள் டப் செய்யப்பட்டிருக்கின்றன. 10 படங்கள் இந்தியில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

சிவாஜி, எம்.ஜி.ஆர், ரஜனி, விஜயகாந்த், சத்யராஜ், அர்ஜுன், ஷாருக்கான், அமிதாப் பச்சான் போன்ற பெரிய ஹீரோக்களுடனும் நடித்திருக்கிறார் இந்தக் கதாநாயகன்.

காமராஜர், அண்ணா, கருணாநிதி போன்ற அரசியல் கட்சித் தலைவர்களின் பாராட்டுக்களும் கூட கமலுக்கு பரிச்சயம்.

'14 படங்கள் தான் சொந்தமாக தயாரித்திருக்கும் கமலஹாசன் 'குணா' படத்தின் மூலம் ஸ்ரெடி கமராவையும், 'மகாநதி' படத்தின் மூலம் ஆவிட் எடிற்றிங்கையும், 'ஹேராம்' படம் மூலம் லைவ் சவுண்டையும் தமிழ் சினிமாவுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறார்.

இப்படி சாதனை புரிந்து கொண்டிருக்கும் கமலின் தனிப்பட்ட வாழ்கையில் எத்தனையோ வேதனைகளுக்கும் இடம் உண்டு.

அவற்றை மறந்து வீரணித்து கொண்டு சினிமாவிலும், சமுதாயத்திலும் இன்னும் புதிய விஷயங்களைத்

# தமிழ் நடிகைகளுக்கு என்ன இல்லை

வந்தார
ஆண்டுகளுக
தமிழ் திரை
சிம்ரன்வ
கோடிகளை
இன்னை
சோனியா
பட்டியலில்
விஷயத்
விஜயாந்
மும்பை
தெலுங்கு
'கள்ளா
ஜோடியான
ஆகின் பேரா
மாநிலம்தான்
இது போ
அறிமுகப்படுத்

→





# ஜூனியர் சிவாஜியின் 'மச்சி'

'மச்சி' ஜூனியர் சிவாஜி துஷ்யந்துக்கு சக்சஸ் ஆகும் என்கின்றார்கள்.

'கிங்', 'திருடா திருடி'. 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்', 'மன்மதன்' படத்தை அடுத்து இந்தியன் தியேட்டர் புரொடக்ஷன்ஸ் சார்பில் எஸ். கிருஷ்ணகாந்த் தயாரிக்கும் படம் 'மச்சி'

மும்பாயில் பிரபல ஹீரோக்களுக்கு சிகையலங் செய்யும் ராஜா என்பவர் இந்தப் படத்துக்காக துஷ் மாறுபட்ட முகமாக மாற்றி இருக்கிறார்.

அக்ஷன் படம் என்பதால் துஷ்யந்த், ஸ்டன்ட் சுப்பராயனிடம் சிறப்பு பயிற்சி பெற்று டூப்பே இ அடித்து வெளுத்து வாங்குகிறார்.

ஷங்கர், ஏ. வெங்கடேஷ், மகாராஜன், சுரேஷ் போ தங்கள் முதல் படத்தையே அக்ஷன் படமாக எடுத்தா வரிசையில் கே.எஸ் வசந்தகுமாரும் அதிரடியாக க இருக்கிறார்.

துஷ்யந்துக்கு ஜோடியாக நடிப்பவர் சுபா புன் ளூரைச் சேர்ந்த புதுமுகம். மிஸ் சென்னை. டாப் மா பட்டம் வென்றவர். நடிப்பு, நடனத்திற்காக ெங்களு பயிற்சி பெற்றவர்.

'மச்சி ' படத்தின் மிகப் பெரிய விசேஷ பிரபல டர்கள் யாஷ்சோப்ரா, மகேஷ் பட் போன்றவர்கள் முன்பே அதில் நடிக்கும் நடிகர், நடிகையர் அனை பயிற்சியை அளித்து விடுவார்கள். 'மச்சி' படத் அனைத்து நடிகர், நடிகைகளும் 45 நாட்கள் நடிப்ப னரே படப்பிடிப்பு ஆரம்பித்திருக்கிறார்கள்.

'மச்சி' படத்தில் மேலும் ஒரு விஷேசம் இருக்கிறது. இசைப்புயல் ஏ.ஆர் ரகுமா ரெஹானா இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார். அத்தோடு பல புதிய பாடகர்களை அறி

புது வில்லன் பசுபதி இந்தப் படத்தில் நாராயணன் என்ற கதாபாத்திரத்தில் மிரட்ட

'மச்சி' படத்தின் ஒவ்வொரு கட்டங்களையும் திட்டமிட்டு எடுத்துக் கொண்டு வெற்றியடைந்தால் தனுஷ் –சிம்புவுக்கு போட்டியாக துஷ்யந்த் முளைப்பாராக!

ரை வாழ வைக்கும் தமிழ்நாடு என்பதில் தான் தமிழ் நாட்டுக்கு எவ்வளவு பெருமை. கடந்த பல
ாகவே கோடம்பாக்கத்தில் மும்பை, பெங்களூர், ஐதராபாத் நடிகைகள் தான் கோலோச்சி வருகிறார்கள்.
ரயுலகின் கோடிக்கணக்கான பணம் இவர்களிடம்தான் புரள்கிறது.

ா வந்தார் ரூ.35 கோடி வென்றார் என்பது தவிர முன்னதாக மும்பாயில் இருந்து வந்த நக்மாவும் பல
ள சம்பாதித்துவிட்டு பறந்து விட்டார். ராஜஸ்தானில் இருந்து வந்த கிரணும் அப்படித்தான்.

றய திகதியில் தமிழ் சினிமாவில் பிரதானமாக எண்ணும் நடிகைகள் மும்பை வாசிகளான ஜோதிகா,
அகர்வால், ஜெயம் சதா ஆகியோர். பெங்களூரைச் சேர்ந்த சாயசிங், பூஜா, லைலா ஆகியோர் அடுத்த
இருக்கிறார்கள்.

இத்தோடு இல்லை. புதிதாக வரப்போகிற படங்களின் பட்டியலைப் பாருங்கள்.

காந்த் நடிக்கும் 'கஜேந்திரா' படத்தின் நாயகி லயா தெலுங்கைச் சேர்ந்தவர். 2 வது நாயகி புளோரா
யைச் சேர்ந்தவர். முன்னதாக 'ரமணா' படத்தில் அஷீமா, 'எங்கள் அண்ணா' படத்தில் நமீதா ஆகிய
த நடிகைகள்தான் விஜயகாந்த்துக்கு ஜோடி.

ானில்' தனுஷ்டன் ஜோடி சிந்து துலானி. இவர் மும்பாயைச் சேர்ந்தவர். குத்து படத்தில் சிம்புவின்
ன திவ்யாஸ் பந்தனாஸ் தெலுங்கைச் சேர்ந்தவர். எம். குமரன் சன் ஆப் மகாலட்சுமி படக் கதாநாயகி
ராளாவைச் சேர்ந்தவர். பிரகாஷ்ராஜின் 'அழகிய தீயே' படக்கதாநாயகி நவ்யா நாயகிக்கும் கேரள
தான்!

போதாது என்று 'மன்மதன்' படத்தில் ஒன்றுசேர 12 மும்பை மாடல் அழகிகளை
படுத்துகின்றார்கள்.

ம் மலையாள பட உலகில் இருந்து மீரா ஜாஸ்மின், அபிராமி, கோபிகா வர்மா,
ஆகியோரும் ஐதராபாத்தில் இருந்து தேஜாஸ்ரீ, ரக்ஷிதா, பெங்களூரில்
ிரியாமணி, உமா, ரதி, ஷெரீன் ஆகியோரும் தமிழ் நாட்டில் தான்
உள்ளனர்.

சினிமா சமீபகாலமாக தமிழ் நாட்டை விடுத்து அண்டை மாநில
ளை அள்ளிக் கொண்டு வந்து அறிமுகப்படுத்துவதில் மிகத்
இருக்கிறது.

, சிந்தூரி, காவ்யாமாதவன், அன்சுமாலிகா, கஜாலா, இஷிதா,
ம்தா, ருத்ராசிங் என அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.
இவர்களின் ஒரு படம் ஹிட் ஆனால் போதும் தமது சம்பளத்தை மறுநாளே ஏற்றி விடுகிறார்கள்.

குஷ்பு, ரோஜா, தேவயானி போன்ற ஒரு சிலர் பக்கத்து மாநிலத்தவர்களாக இருந்தாலும் தமிழ் நாட்டிலேயே திருமணம் செய்து கொண்டு செற்றிலாகி விட்டனர். ஆனால் வரக்கூடிய பெரும்பாலான நடிகைகள் அப்படி இல்லை. ஹொட்டலில் ரூம் போட்டு தங்கியிருக்கும் இவர்கள் பணம் சம்பாதித்ததும் ஓட்டம் பிடித்து விடுகிறார்கள்.

இப்படி மும்பை, பெங்களூர், கேரள வரவுகளால் தமிழ் நடிகைகளுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. என்பதும் புதுத் தமிழ் முகங்கள் உருவாகவில்லை என்பதும் வேதனைக்குரிய செய்தியே!



ஜோதிகா

# சினி டிப்ஸ்



* அஜித் நடிக்கும் மிரட்டல் சேலத்தில் நடந்த உண்மைக் கதையாம்.

* தெலுங்கில் வெற்றி பெற்ற வர்ஷம் படத்தின் தமிழ்பதிப்பில் ஜெயம் ரவியை நடிக்க வைக்க ஏற்பாடு நடக்கிறது.

* மீராஜாஸ்மின் நடித்து செம ஓட்டம் ஓடிய கஸ்தூரிமான் மலையாள படம் தமிழிலில் வருகிறது. சினேகா நடிக்கிறார்.

* அந்நியன் படத்தில் எதிர்க்கும் வில்லன்களாக பிரகாஷ்ராஜ் கொச்சின் அனிபா, கலாபவன் மணி, அதுல்குல் கர்னி ஆகிய 4 பேர் நடிக்கிறார்கள்.

* சிவாஜி பிலிம்ஸ் ராம்குமாரின் இரண்டாவது மகன் தர்ஷன் 'ஒயின் ரெயின்பா' என்ற ஆங்கில படத்தில் நடிக்கிறார்.

* பின்னணிப் பாடகர் சிதராவின் பெண் குழந்தைக்கு நந்தனா என்று பாடகர் ஜேசுதாஸ் பெயர் சூட்டியுள்ளார்.

* மந்தரா வடபழனி வீட்டை காலி செய்து விட்டு ஐதராபாத்தில் செட்டில் ஆகியுள்ளார்.

* ஆந்திராவில் வெற்றி பெற்ற படம் தமிழிலில் 'காதல் காவியம்' என்ற பெயரில் தயாராக உள்ளது.

# 'குத்து' கும்மாங் குத்து



த்து
ஸ்.கே.

அலங்காரம்
துஷ்யந்தை

ன்ட் சூப்பர்
இல்லாமல்

போன்றவர்கள்
த்தார்கள். இந்த
க களம் இறங்கி

புன்ஜா. பெங்க
மாடல் 2003 இல்
ளூரில் சிறப்புப்

பல ஹிந்தி டைரக்
படம் எடுப்பதற்கு
ாவருக்கும் ஓர்க் என்ற
படத்திலும் இதே போல்
டிப்பு பயிற்சி பெற்ற பின்

தமானின் தங்கை ஏ.ஆர்.
அறிமுகப்படுத்துகிறாராம்!
ட்ட வருகிறார்.
ாடு இருக்கிறார்கள். படம்

- ஏ.வெங்கடேஷ் இயக்கத்தில் குத்து படத்தில் சிம்புவுடன் ஜோடி சேர்ந்திருக்கும் புதுமுகம் ரம்யா. அவரின் நிஜப் பெயர் திவ்யாஸ் பந்தனாஸ். சொந்த ஊர் பெங்களூர். குத்து படத்தில் பச்சைக்கிளி, பச்சைக்கிளி வந்தாச்சு, வந்தாச்சு என்ற பாடல் காட்சியை பாருங்கள். அந்தப் பாடல் காட்சியின் திரைமறைவில் நடந்த சம்பவம் தான் இது. பாடலின் நடுவில் சிம்புவின் இடுப்பில் ரம்யா ஏறி உட்கார்ந்து கொள்ள வேண்டும். 'திருடா திருடியில்' தனுஷ் இடுப்பில் சாயாசிங் உட்கார்ந்திருந்தாரே. அதேமாதிரி. காட்சி ரியேசல் நடந்த போது ரம்யாவை தனது இடுப்பில் கப் என்று பிடித்துக் கொண்ட சிம்பு படப்பிடிப்பின் போது ரம்யாவை தொப் என்று கீழே போட்டிருக்கிறார். இதில் ரம்யாவுக்கு மகாகோபம். 'என்ன நீ பொறுப்பே இல்லாம நடந்துக்கிற. பின்னாடி பாண் இருந்தது தெரியுமில்ல. அதுமேல நான் விழுந்திருந்தா என்ன ஆகி இருக்கும்?' என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் வாங்கு வாங்கு என்று வாங்கி இருக்கிறார். பதிலுக்கு சிம்புவுக்கும் கோபம் மூக்கைப் பொத்திக் கொண்டு வந்திருக்கிறது. என்ன நீ அதிகமா பேசறே. சும்மா விளையாட்டுக்குத்தானே செஞ்சேன். நடக்கிறதே வேறு என்று சிம்பு பேச... ரொம்பத்தான் திமிர் என்று ரம்யா பதிலுக்கு குடுக்க...... உனக்குத்தான் மப்பு ஜாஸ்தி என்று சிம்பு திரும்பி போட்டு வாங்க... குத்து படப்பிடிப்பு கும்மாங் குத்து போடாத ரேஞ்சில் போய் முடிந்திருக்கிறது.

# நல்ல நேரம்

''இஞ்சே சாத்திரியார், உண்ணானை இவளுக்கொரு நல்ல நேரம் குறிச்சுக் குடுங்கோ. உங்களுக்கு புண்ணியமாய்ப் போகும்'' குலச்சாத்திரியாரிடம் சரணடைந் தார் சதாசிவம். சாத்திரியார் பயந்து போனார். ஏனெண்டால் சதாசிவத்தாற்றை மனிசி ஈஸ்வரி வலு மோசமான ஆள். எதிலையெண்டு தெரியுமே, மற்றவை யைச் சண்டைக்கு இழுக்கிறதிலை. இவ விட்டை வாய் குடுத்தா தப்பேலாது. முட்டை யிலை மயிர் புடுங்கிற மாதிரி, மனிசி நடந் தாலும் குற்றம் சொல்லும். நிண்டாலும் குற் றம் சொல்லும். திருப்தி எண்டதே வராது.


உப்படித்தான் ஈஸ்வரி அக்கா ஒருக்கால், சைக்கிளிலை வொட்றிச் சீட்டுவிக்கிற ஆளிட்டை 16சீட்டுகள் வாங்கினா. அதுவும் ஒரேயடியாய் பத்தையும் கிழிச்சு எடுக்கமாட்டா. மேலை ஒண்டு, கீழை ஒண்டு, நடுவை ஒண்டு. எப்படி எடுத் தென்ன, பத்திலை ஒண்டுக்கும் ஒரு சதமும் விழேல்லை. சீட்டு வித்தவரோடை சண்டை. நல்ல சிட்டு தரேல்லையெண்டு. அவர் என்ன செய்யிறது. இந்த வகைச் சீட்டுக்கு அநேகமாக காசு விழுகி றேல்லை அக்கா என்று ஆறுதல் சொன்னார். அக்காவுக்கு வந்துதே கோபம். இதை ஏன் முதலிலயே சொல்லேல்லை. என்னை ஏமாத் திப்போட்டாய்எண்டு கத்தினா.

பிறகும் ஒருநாள் இவ சீட்டு வாங்கப் போக, அவர் வேறை வகைச் சீட்டைக் குடுத்தார். இவ வோடை சீட்டு வாங்கிய பக்கத்து வீட்டுக்காரி இவ முதல் வாங்க இருந்த சீட்டை வாங்க அதுக்கு 500/= விழுந்திட்டுது. ஈஸ்வரி அக்காவுக்கு ஒண்டும் விழேல்லை. ஈஸ்வரி அக்காவுக்கு வயிறெரியத் தொடங்கிவிட்டது. ராசியில்லாத ஆள் எண்டுசீட்டு விக்கிறவரைக் கண்டபடி ஏசிப்போட்டா. அதுக் குப் பிறகு அந்த ஆள் அந்தப் பக் கமே வாறேலை.

இப்படி அக்காவைப் பற்றிக் கனக்கச் சொல்லலாம். இந்த நல்ல (?) பண்பு கொண்ட அக்கா வுக்கு இரண்டு பிள்ளைகள். மூத் தது அருணன். அறிவிலை ஆத வன் மாதிரி இருக்கவேணும் எண்டு பேரன்பேயரை வைக்க, இவன் அறிவில்லாதவனாய் வளர்ந்து ஊரார் வீட்டு பிரச்சினைக்கெல்லாம், மூக்கை நுளைத்துத் தீர்ப்புசொல்லப்போய் அடிவாங்கியதால் 18வயதில் பரதேசம் அனுப்பினார்கள் பெற்றோர்.

மற்றவள் அருணா அவளுக்குப் படிப் பைத் தவிரமற்றதெல்லாம் பிடித்துப்போக, பத்தாம்வகுப்புடன் பள்ளியை முடித்து விட்டு பக்குவமாய் சமைக்கப் பழகினாள். பரதேசம் போன அருணன் புத்தி வந்து பாடுபட்டு உழைச்சுப் பார்சலில் பணம் அனுப்ப, சிக்கனமாய் இருந்ததாலே இவ ளின் பெயரில் பல லட்சங்கள் பதிவா கின. இப்பதான் லட்சங்களை குடுத்து மாப் பிள்ளைகளை வாங்கலாந்தானே. எல்லா இடத்திலேயும்திரிஞ்சு எக்கவுண்டன் மாப்பிள்ளையை வாங்கிப்போட்டினை. கல்யாணம்நடத்த நல்லநாள்வேணுமெல்லே அதுதான் ஓடித்திரியினை.

முதல்ல ரெண்டு சாத்திரிமாரிட்டைப் போய்க் கேட்டவை. அவைசொன்ன நாள் ஒண்டும் ஈஸ்வரி அக்காவுக்கு பிடிக் கேல்லை. இவவின் ஆக்கினை தாங்கேலா மல் இந்த வரிசத்திலை நல்ல நாளே




இல்லையெண்டு சொல்லி நழுவி விட் டனர். கடைசியாய் குலச்சாத்திரியாரிட்டை வந்திருக்கினை.

சாத்திரியாரின் கண் நிறைய மண் விழத்தக்கதாய், திண்ணையைச் சடார் சடார் என்று தட்டிவிட்டுக் குந்தினா அக்கா. சதாசிவத்தாரும் ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டார். சாத்திரியார்கண்ணைக் கசக்கி, தொண்டையை செருமி

இப்ப உங்களுக்கு எத்தினையாந் திகதிக்குள்ளை எப்படிப்பட்ட நாள் வேணும்? என்றார்.

''வாற மாசத்துக்குள்ளை, உகந்த சனி, ராகு கிரகங்கள் இல்லாமல் எல்லாக் கிரகங்களும் நல்ல நிலையிலை நிக்கிற மாதிரி ஒரு நாள் வேணும்.''

''அதுக்கென்ன அம்மா. பிள்ளை என்ன நட்சத்திரம்?''

''உங்களுக்கென்னத்துக்கு அவ ளின்ரை நட்சத்திரம்? அவளின்ரை சாதகத் தையே சொல்லுறன் கேளுங்க. அவளுக்கு ஏழிலை செவ்வாய் நிக்கிறார். அட்டமத் திலை வியாழன் இருக்கிறார். உச்சத்திலை சனி பார்க்கிறார்......'' தொடர்ந்த ஈஸ்வ ரியை.

''காணும் காணுமம்மா.....'' இடை மறித்தார் சாத்திரியார். மனதுக்குள் மொத் தத்தில எல்லா கிரகங்களும் அங்கே தான் நிக்குதுபோலை என்று நினைத்து கொண்டே பஞ்சாங்கத்தை படுவேகமாகப் புரட்டினார்.

''வாற 13 ஆம் திகதி நல்லதம்மா''

''என்ன பதின்மூண்டோ, ஹோட்டல்லை கூட அந்த நம்பர் அறையே இல்லையாம். அவ்வ ளவு கூடாத நம்பரிலை நீர் கல்யாணத்தை வைக்கச்சொல்லுறீர்''

''அம்மா 11ஆம் திகதி பரவாயில்லை''

''ஐயோ!அது வேண்டாம். அந்தத்திகதி யிலை தானே பின்லேடன் அமெரிக்காவை இடிச்ச வன்.''

''ஏதோ உரலுக்கை அரிசியைப் போட்டு இடிச்சமாதிரிச்சொல்லுறீர். அமெரிக்காவிலை ஒரு கட்டடத்தை தான் இடிச்சவன்'' குறுக்கிட்டார் சதாசிவம்.

''என்னத்தையோ இடிச்சவன். அது வேண் டாம்''

''அப்ப 19ஆம் திகதியம்மா........''இழுத்தார் சாத்திரியார்.

''இதென்ன இந்த ஆள் எல்லாம் அநியாய மான நாளாய்ச் சொல்லுது. அந்த திகதியிலை தான் என்ரை ஒண்டுவிட்ட தாத்தாவின்ரை மரு மோளின்ரை மச்சாள் கிணத்துக்கை விழுந்து செத்தவ. இப்பவும் ஆவியாய் அலைகிறாவாம்.''

''அப்ப 22ஆம் திகதி...'' ''வேண்டாம் அண் டைக்குத்தான் மாப்பிள்ளை மூண்டாவது தசாப் தத்துக்குள்ளை கால் வைக்கிறாராம். அந்த நாளிலை இன்னொண்டுக்கை கைவைக்கி றது சரியில்லை''

சாத்திரியாருக்குக் கோபம் வந்தாலும் பொறுமையாக,''என்னம்மா நீங்கள். இனி 25ஆம் திகதி ஒண்டு தான் இருக்கு. அதை விட்டா ஜூலை தான்'' என்றார்.

''என்ன ஜூலையோ?,கறுப்பு ஜூலையிலை கல்யாணமோ? 2 5ஐக் கூட்டினால் 7. அந்த நம் பர் சோகம் எண்டு சொலலுவினம் . என்ன செய்ய? அதையே பாருங்கோ'' கவலையோடு கூறினாள் அக்கா.

''ஆ....காலமை 6.30க்கு நல்லநேரம்''

''ஆறரையோ? என்ரை மோள் நித்திரை யாலை எழும்பிறதே எட்டு மணிக்குத்தான். முந்தி எழும்பினாத் தடிமன் வரும். அவள் எழும்பி வெளிக்கிட எப்படியும் 2 மணியாகும். அதுக்குப்பிறகு பாருங்கோ''

''இரவு 11.59க்கு ஒரு நேரம் இருக்கு. பாக் கட்டே'' கிண்டலாய் சாத்திரியார்.

''விளையாடாதேங்கோ சாத்திரியார். வடி வாய் பாருங்கோ''

11.30 க்குமட்டும் ஒரு நேரம் இருக்கு, எப் படியெண்டாலும் அதுக்குள்ளை தாலி கட் டிப்போடவேணும். ஒருவாறு முடிவுக்கு வந்து புறப்பட்டனர் தம்பதியர்.

கல்யாண ஏற்பாடுகள் தட புடலாய் நடந் தது. ஒரு பொம் பிளைப்பிள்ளை எண்டு காசை அள்ளிஎறிஞ்சா அக்கா. சாறி எடுக்கப்போக, தாலி சொய்யப்போக எண்டு எல்லாத்தையும் பஞ்சாங்கம் பாத் துப் பாத்துத் தான் செய்தா. கடவுள் செய்யா ததை நல்ல நேரம் செய்யும் எண்டு சொல் லிக் கொண்டா. வெளிநாட்டுக்கு தகவல் பறந்தது. தங்கையின் கல்யாணத்தை பார்க்க அருணுக்கு ஆசை வந்திட்டுது. நாளைக் கொஞ்சம்பிந்தி வைச்சால் தான் வருவ தாய்ச் சொன்னான். சதாசிவத்தாரும் சிபாரிசு செய்தார்.

ஆனால், நல்ல நாள் கிடைக்காதெண்டு அக்கா மறுத்திட்டா. வடிவாய்ப் படம் எடுத்து அனுப்புவாள் தானே பார்க்கலாம் எண்டு சமாதானஞ் செல்லிப்போட்டா. தமையன் வாறதுக்காக நல்ல நேரத்தை விட ஏலுமே.

ஒருமாதிரி கல்யாணத்தண்டு அருணாவை அடிச்சு எழுப்பி தோய வாத்து வெளிக்கிடுத்திற அறேக்கை விட்டாச்சு. அதுக்கை வரிசையாய் ஏழெட்டுப் பொம்பு ளையள் போச்சினை. முதல் போனது குரு. மற்றவை சிஷ்ய ராம். பழகப்போகினையாம். கதவை பூட்டிக் கன நேரமாச்சு. பத்தேகால் அளவிலை கதவு லேசாக த் திறக்க ஒரு தலை எட்டிபார்த் தது. தொடர்ந்து கொஞ்சப் பொடி யன்கள் உள்ளுக்குள்ளை போச சினை. வயறுகள் பொல்லுக ளோடை. (வீடியோ பிடிக்கவாம்)

மணவறையிலை மாப்பிள் ளையும் வந்தாச்சு. பொம்பிளை வாற சிலமன் இல்லை. இன்னும் ஒரு நிமிசத்துக்குள்ள தாலி கட்ட வேணும். கதவைத் தட்டப் போன சதாசிவத்தைத் தடுத்த ஈஸ்வரி அக்காஒருதன்மையாகச்சொன்னா ''அதுகளைக் குழப்பாதேங்கோ. எவ்வளவு காசு குடுத்து படிச்ச னாங்கள் வடிவாய் எடுத்தாத் தானே எல்லோருக்கும் போட்டுக் காட்டேக்கை பெருமையாயிருக் கும். வெளிநாட்டுக்கு மெல்லே அனுப்பவேணும். பிறகுவெளி நாட்டாக்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பினை. ஆறுத லாய் எடுக்கட்டும்.'' அக்கா சொல் லிக்கொண்டிருக்கும் போது கதவு திறக்க அருணா வெளிப்பட்டாள்.

அருமை மனைவி சொன்னதை கேட்டோ அல்லது ஒரு மைலுக்கு, பின்னாலை நாய் துரத்த ஓடினதைப் போலை வேர்த்து வழிய நின்ற மகளைப் பார்த்தோ என்னவோ அதிர்ந்து நின்றார் சதாசிவத்தார்.



*வைத்தியர்: உடம்பு சரி இல்லாமல் ஒரு வாரம் வைத்திய சாலையில இருந்திட்டு இப்ப இரத்த தானம் செய்தேன் என்று சேட்டி விக்கட் கேட்கிறீங்களே இது உங்களுக்கே நியாயமாக இருக்கா?*

*நோயாளி: பின்னே! இங்கே கட்டிலில உள்ள மூட்டைப் பூச்சிகள் என் இரத்தத்தை எல்லாம் உறிஞ்சிவிட்டனவே!*



*''கழுத்து எலும்பு தேயிறதுக்கும் கல்யா ணம் ஆனதுக்கும் என்ன சம்பந்தம் டாக் டர்?''*

*''மனைவி சொல்லுறதுக்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டு இருந்தா கழுத்து எலும்பு தேயாமல் என்ன செய்யும்?''*

# உங்களை உங்களுக்குப் பிடிக்குமா?

பறவைகள் பலவிதம். அதில் ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பார்கள். அதைப்போன்று தான் மனிதர்களும்! எம் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொருவிதமான குண இயல்புகள் இயல்பாகவே ஒட்டிக்கொண்டிருக்கும். அந்த செயற்பாடுகள் எல்லோருக்கும் பிடிக்குமா என்று கேட்டால் நிச்சயமாக அது கேள்விக்குறியே! எனவே பொதுவான மனிதர்களிடையே நாம் சிறப்பாக விளங்க வேண்டுமென்றால் முதலில் எம்மை எமக்குப் பிடிக்க வேண்டும். அப்படியெனின் அதற்கு என்ன வழி சிறந்தது என்று யோசிக்கின்றீர்களா? இதோ உங்களுக்காய் அதற்கான சில ஆலோசனைகள்.

நாம் ஒரு பெரிய விருந்துக்கோ, கூட்டத்துக்கோ செல்வதற்கு முன் ஒரு வினாடி நின்று அருகே இருக்கும் ஒவ்வொருவரும் நமக்கு ஏற்கனவே பழக்கமானவர் என்ற பாவனையுடன் நுழைய வேண்டும். நட்பும் ஊக்கமும் கலந்த அணுகுமுறையுடன் நாம் செல்ல வேண்டும்.

உங்களுடைய பார்வையில் படவேண்டும் என்று மற்றவர்கள் ஆவல் கொள்ளும் அளவுக்கு உங்களிடத்தில் ஊக்க ஒளி மிளிரும் வெற்றியாளனைப்போல் காட்சி கொடுங்கள், பேசுங்கள், நடந்துகொள்ளுங்கள், சிந்தியுங்கள். நீங்கள் ஒரு வெற்றியாளன் என்று நம்புங்கள். கண்டிப்பாக வெற்றி அடைவீர்கள். வாழ்க்கை உங்களுக்கு கடன்பட்டிருக்கவில்லை. நல்லதொரு வாய்ப்பைத்தர வேண்டும் என்று புறப்பட்டு வாய்ப்பை உண்டுபண்ணிக்கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை உங்களை நீங்களே கவர வேண்டும். உங்களை உங்களால் கவர முடிந்தாலொழிய பிறரைக்கவர் முடியாது. எனவே முதலில் அதற்குரிய முயற்சியில் ஈடுபடுங்கள். வெற்றியாளர்கள் பலர் தன்னம்பிக்கையை அதிகப்படுத்திக்கொள்ளக் கடைப்பிடிக்கும் உத்திகளில் இதுவும் ஒன்று.

எப்பவும் தெம்புடன் நடந்துகொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை கண்ணோட்டத்தையே இது மாற்றிவிடும். நடையிலும், பேச்சிலும், செயலிலும் பெரிய சாதனையாளரைப்போல் நடந்து கொள்ளுங்கள். உங்களிடத்தில் ஏற்பட்டுள்ள இந்தக் குறிப்பிடத்தக்க மாறுதலை உங்களுக்குத் தெரிந்தவர்கள் கவனிப்பார்கள். மிகமிக முக்கியமாக இந்த வெற்றிக் கண்ணோட்டத்தை அடையவும் வெளிப்படுத்தவும் இது தான் மிக வேகமான நிச்சயமான வழி!

மிகமிகத் திறமையானவர்கள் கூட தங்கள் திறமைகளை வெளிக்காட்ட முடியாத, தெரியாத மென்மையான மனம் படைத்த கோழைகளாக இருக்கிறார்கள். அதனால் தான் அவர்கள் தாங்களாகவே தோல்விகளை வரவழைத்துக்கொள்கிறார்கள். வெற்றிக்கான முயற்சிகளை மேற்கொள்ளப் பயந்தவர்களாய், தோல்விகளைத் தவிர்க்க எண்ணி வெற்றிக்கு நேரடியாக அழைத்துச் செல்லும் எல்லையற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிடுகிறார்கள்.

மேலும் இனிய சுபாவமுள்ள மனிதர் என்று பெயர் எடுக்க ஒரே வழி அனுசரித்துப்போவது தான். சொந்த ஆக்க சக்தியைப் பெருக்கிக்கொள்வதற்கு இனிமையாக நடந்து கொள்வது மிக முக்கியமான வழிகளில் ஒன்றாகும். நல்லவர் என்று பெயர் எடுப்பதற்காக யார் என்ன சொன்னாலும் தலையாட்ட வேண்டும் என்று கட்டாயமில்லை. உங்கள் கருத்துக்களை நீங்கள் தெரிவிக்கலாம். ஆனால் அது மற்றவர் மனம் பாதிக்கப்படாதவாறு சாமர்த்தியமாக இருக்க வேண்டும்.

மனிதர்களில், இரண்டு வகையானவர்கள் உள்ளனர். காந்த சக்தியுள்ள மனிதர்கள் நம்பிக்கையும் மன உறுதியும் படைத்தவர்கள். இவர்கள் வாழ்க்கையில் ஜெயித்து நினைத்ததை அடைவதற்காகவே பிறந்தவர்கள் என்று எல்லோருக்குமே புரியும்.

காந்த சக்தி இல்லாத மனிதர்கள் பயம், சந்தேகம், அவநம்பிக்கை உள்ளவர்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போது கூட நம்மால் முடியுமா —நாம் இதைச் செய்தால் தோல்வியாகிவிடுமோ என்ற நிலையில் உள்ளவர்கள்.

இந்த நிலையை மாற்றுவதற்கு உள் மனதின் ஆற்றல்களைப் பயன்படுத்தினால் வாழ்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அடைந்து சௌகரியமான வாழ்க்கை வாழலாம். இத்தகைய அபரிமிதமான சக்தியெல்லாம் மனிதர்களிடம் நிறைந்திருக்கிறது. அந்த சக்தியைப் புரிந்து கொண்டால் வாழ்க்கையில் வெற்றியடையலாம்.

மனதில் நல்ல எண்ணங்களை நினைத்து,நல்ல செயல்களைச் செய்து, எல்லோரிடமும் அன்பு— தயவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றெண்ணி, நல்லதையே நினையுங்கள். எப்போதும் — எந்தக்காலத்திலும் மனதில் கெடுதலையோ கெட்ட எண்ணங்களையோ நினைக்காதீர்கள். ஏனெனில் அவை உங்களையே பாதிக்கும். எப்போதும் நல்லவற்றையே எண்ணி நல்லதே நடக்க விரும்பியும், நல்லவற்றையே



எதிர்பார்த்தும் இருந்தால் இந்த நல்ல எண்ணங்களின் சக்தி உங்களை எல்லோருக்கும் பிடிக்கும்படி செய்துவிடும். பிறகென்ன? நடித்தால் மட்டும் தான் ஹீரோவா? வாழ்க்கையில் ஜெயித்தால் கூட நீங்கள் ஹீரோ, ஹீரோயின்கள் தான்!

## மீன் கட்லெட்



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| உயர்ந்த வகை மீன் | 1/2 கிலோ |
| உருளைக்கிழங்கு | 200கிராம் |
| வெங்காயம் | 50கிராம் |
| முட்டை | 2 |
| பச்சை மிளகாய் | 6 |
| இஞ்சி | 1 துண்டு |
| தேங்காய்ப் பூ | 1 தேக்கரண்டி |
| மிளகுப்பொடி | 1தேக்கரண்டி |
| ரொட்டித் தூள் | 2மேசைக்கரண்டி |
| உப்பு | தேவையான அளவு |

### செய்முறை

முதலில் மீனைச்சுத்தப்படுத்தி கழுவி ஆவியில் வேக வைத்து எடுத்து, முள் நீக்கி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். உருளைக்கிழங்கை வேக வைத்துத் தோலை உரித்துக் கிழங்கோடு, வேகவைத்த மீனையும் சேர்த்துப்பிசைந்து கொள்ள வேண்டும். அதனுடன் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு, மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், இஞ்சி, கறிவேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து ஊற்றி, நுரைத்த வெள்ளைக்கருவை அடித்துக் கொண்டு, அதில் உருண்டைகளை நனைத்து ரொட்டித்தூளில் புரட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அடுப்பில் சட்டியை வைத்து எண்ணையை ஊற்றி கொதித்த எண்ணெயில் உருண்டைகளில் இரண்டு அல்லது மூன்று வீதம் போட்டுநன்றாகச் சிவக்க வெந்ததும் எடுத்து விட வேண்டும். இதே போல் எல்லா உருண்டைகளையும் சுட்டு எடுக்க வேண்டும்.

# நீங்களும் புத்திசாலிப் பெண்தானா?



நீங்கள் புத்திசாலிப் பெண்கள் தானா என்று எப்போதேனும் சிந்தித்துப்பார்த்ததுண்டா? இல்லையென்றால் இதோ இப்பொழுது ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு. கீழ் கண்ட குணாதிசயங்கள் எல்லாம் இருந்தால் நீங்கள் புத்திசாலிப் பெண் தான். சந்தேகமில்லை.

எந்த ஒரு பொருளை நீங்கள் வாங்க விரும்பினாலும், அது எந்த அளவுக்கு உங்களுக்குப் பயன்படும் என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்து வாங்க வேண்டும்.

பக்கத்து வீட்டில்தையல்மெஷின் இருக்கிறது கம்பியூட்டர் இருக்கிறது என்பதற்காக நீங்களும் அதைவாங்கி விட வேண்டும் என்பதில்லை. அப்படி உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களை நீங்கள் வாங்க முயலும்போது பணச் செலவோடு தேவையில்லாமல் வாங்கிய அந்தப் பொருட்கள் தூசி படிந்து பயனற்றும் போய் விடும். அதனால் எந்தப் பொருளாக இருந்தாலும் அதன் தேவை அறிந்து வாங்குங்கள்.

விதம் விதமாக புதிதாக அறிமுகமாகும் ஆடைகளை நீங்கள் வாங்க விரும்பலாம். அதற்கு முன்னால் உங்கள் அலுமாரியைத் திறந்து பாருங்கள். வெகு நாட்களாக நீங்கள் அணியாமல் வைத்திருக்கும் உடைகளை எடுங்கள். அவைகளை எல்லாம் அணிந்து மகிழும் வழியை முதலில் பாருங்கள்.

புதிய ஆடைகள் தேவைப்பட்டால் மட்டும் உங்கள் பொருளாதார நிலை அறிந்து வாங்குங்கள்.

சமையல் அறையில் நின்று சமைக்கும்போது நீங்கள் சமைப்பது யாருக்காக என்று நினைத்துப்பாருங்கள். அவர்களுக்கு அந்த உணவு தேவையான சத்துக்களைத் தருமா, எத்தனை பேருக்குத் தேவையான உணவைத் தயாரிக்கிறீர்கள் என்பதை எல்லாம் கவனத்தில் கொள்ளுங்கள். தேவைக்கு அதிகமாகச் சமைத்து வெளியே கொட்டும் பழக்கத்தை கைவிடுங்கள்.

நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உங்கள் தகுதியை வெளிப்படுத்துகின்றவை. அதனால் என்ன பேசுகிறோம் என்பதை உணர்ந்து பேசுங்கள். தேவையில்லாதவைகளை, பிரச்சினைகளுக்குரியவைகளைப் பேசி உங்களுக்கு இருக்கும் மரியாதையைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது.

நீங்கள் இப்போது எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்தி வருகிறீர்கள்? ஆடம்பரச்செலவு, விரும்பத்தகாத பழக்கவழக்கங்கள் உங்களிடம் இருந்தால் அதனை உடனடியாக மாற்றுங்கள். உங்களிடம் இருக்கும் குறைகளை ஏற்றுக்கொண்டு நிறையாக வாழ முயற்சி செய்யுங்கள்.

உங்களது மனதில் இருப்பதை அப்படியே வெளிப்படுத்திவிடாதீர்கள். இடம், பொருள், சூழல் ஆகியவற்றைப் புரிந்து சமாளித்துப் பேசத் தெரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் எவ்வளவு வசதி படைத்தவராக இருந்தாலும், விலை குறைத்துப் பேச வேண்டிய இடங்களில் மௌனமாக இருக்காதீர்கள்.

உங்களுக்குள் ஓரளவாவது பொதுநலம் இருக்கட்டும். எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் உங்கள் சுய நலத்தை வெளிப்படுத்த வேண்டாம். சுயநலம் கொண்டவர்கள் எவ்வளவு புத்திசாலிகளாக இருந்தாலும் அவர்களால் அவர்களுக்குப் பெருமையே கிடைக்காது.

என்ன பெண்மணிகளே, இவற்றையெல்லாம் நீங்கள் கொஞ்சமேனும் பின்பற்றினால் நீங்களும் புத்திசாலிப் பெண் தான்!

## பெண்



சசி

# வேலைக்குப் போகும் பெண்ணே....!

பெண்களுக்கு தன்னம்பிக்கை தருவதில் அழகுக்கும் பங்கு உண்டு. வேலைக்குச்செல்லும் பெண்கள் முக அழகை மட்டுமல்ல உடல் அழகையும் கவனிப்பது அவசியம். பெண்களுக்கு அழகு இருந்தால் தன்னம்பிக்கையும் தானாக வந்து ஒட்டிக் கொள்ளும் என்கிறார் பிரபல அழகுக் கலை நிபுணர்.

எனவே வேலைக்குப் போகும் பெண்கள் அழகுடன் மிளிர்வதற்கான சில அழகு இரகசியங்களை இங்கு பார்ப்போம்.

10 ரோஜா இதழ்களை சூடான வெந்நீரில் போட்டு அதன் எசன்ஸ் இறங்கியதும் கண்களுக்குக் கீழே தடவி முகத்தை கழுவ வேண்டும். முகம் பொலிவு பெற்று கருவளையமும் நீங்கும்.

முகத்திற்கு லேசான ஐ லைனர், கண் மை, லிப்ஸ்டிக் போன்றவையும் பயன்படுத்தலாம்.

கண் எரிச்சல் இருந்தால் வெள்ளரிக்காயை நறுக்கி கண்ணில் வைத்துக்கொள்ளலாம்.

பாலை மெதுவாகக் காய்ச்சினால் பாத்திரத்தின் மேலே பாலாடை மிதந்துவரும். அதை எடுத்து நெல்லிக்காய் சாறு 5 சொட்டு கலந்து தினமும் உதடுகளில் பூசி வந்தால் உதட்டின் கருமை நிறம் மறைந்து சிவந்த நிறம் கிடைக்கும்.

தேன் அல்லது கிளிசரின் ஒரு தேக்கரண்டி எடுத்து ஒரு கிண்ணத்தில் வைத்து அதில் நகங்கள் படுமாறு கைகளை நனைக்கலாம். இதனால் நகத்தைச் சுற்றி இருக்கும் தேவையற்ற சதைகள் நீங்கும்.

அதிக சொர சொரப்பான பித்த வெடிப்பு கால் உள்ளவர்கள் வசலின் அல்லது பெட்ரோலியம் ஜெல்லை இரவில் தூங்குவதற்கு முன் பாதங்களில் தடவலாம். இல்லையெனின் மஞ்சளை அரைத்து காலில் தடவினால் இரண்டொரு நாளில் பலன் கிடைக்கும்.

வெள்ளரிக்காய் சாற்றை உள்ளங்கைகளில் பூசி வந்தால் கை பளபளப்பாகும்.

உருளைக்கிழங்கை இரண்டாக வெட்டி கரும்புள்ளிகள் மீது தடவி வர அவை மறைந்துவிடும். கொண்டைக் கடலை மாவுடன் சிறிது பால் மற்றும் எலுமிச்சைசாற்றை விட்டு முகத்தில் பூசிக் குளிக்க முகம் சிவப்பழகு பெறும்.






# பொது அறிவு விடயங்கள்

1) மனிதர்கள் உயிருடன் இருக்கும் வரை வளரும் உறுப்புகள் எவை?
தலைமயிர், நகம்.
2) எல்லாச் சூழலிலும் வாழும் உயிரினம் எது? நாய்.
3) பாலைவனக் கப்பலின் வாழ்க்கைக் காலம் யாது? 40 வருடங்கள்.
4) இலங்கைக்குரியதும், இந்து ஆலயங்களின் கொடி மரத்துக்குரியதுமான மரம் யாது?
நாக மரம்.
5) வாழைப்பழத்தை எமக்கு அறிமுகம் செய்தவர்கள் யார்?
பனாமா நாட்டவர்கள்.
6) ஒலிம்பிக் தீபம் ஏற்றிய ஆண்டு எது? 1928.
7) இலங்கையில் நெல் உற்பத்தி கூடிய மாவட்டம் யாது? அம்பாறை
8) மரவள்ளியை அறிமுகம் செய்தவர்கள் யார்?
ஆபிரிக்க நாட்டவர்கள்.
9) ஜப்பானின் புதிய பெயர் யாது? நிப்பொன்.
10) நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது? நோர்வே.
11) சாரணர் இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்? பேடன் பவல்.

த.வசந்தீபனா
தரம் 8

# இயேசுவின் பொன்மொழிகள்

1) உன்னில் நீ அன்பு கூறுவது போல் பிறரிலும் அன்பு கூறுவாயாக.
2) தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொள்ளுங்கள்.
3) கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதீர்கள்.
4) உங்களால் ஆனமட்டும் எல்லா மனிதரோடும் சமாதானமாய் இருங்கள்.
5) ஒருவருக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.
6) நம்பிக்கையிலேயே சந்தோசமாயிருங்கள்.
7) உபத்திரவத்தில் பொறுமையாய் இருங்கள்.
8) உங்களை துன்பப்படுத்துபவர்களை ஆசீர்வதியுங்கள்.
9) சகோதர சினேகிதத்தில் ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள்.
10) தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையாலே வெல்லுங்கள்.

தரம் 13,
கலைப்பிரிவு (மு)/

# தெரிந்து கொள்ளுங்கள்

★ ஐவகை மகளிர் கூந்தல்
முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை.
★ ஐம்பெருங்குழு
அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதர், சாரணர்.
★ ஐம்படை
சங்கு, சக்கரம், காதை, வாள், வில்.
★ ஐந்தொகை
வரவு, செலவு, இருப்பு, முதல், ஆதாயம்.
★ ஐவகை யாகம்
கரும் யாகம், தவ யாகம், சுப யாகம், தியான யாகம், ஞான யாகம்.
★ ஐவகைத் தாய்
ஈன்றதாய், ஊட்டுத்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய்.

செ. நிருத்திகன்
தரம் –10

# வெங்காயத்தின் கண்ணீர்

முன்னொரு காலத்தில் காய்கறிகளுக்குள் நீ பெரியவனா நான் பெரியவனா என்ற தகராறு ஏற்பட்டது. இறுதியில் எல்லாக் காய்கறிகளும் இறைவனை நோக்கி தவம் செய்ய ஆரம்பித்தன.

இவர்களது தவத்தை மெச்சிய இறைவன் காய்கறிகளுக்கு காட்சி தந்தார். ஒவ்வொரு காயும் தனது தேவைக்கேற்ப ஒவ்வொரு வரம் கேட்டது. இறைவனும் அவரவர் தகுதிக்கேற்ப கொடுக்க வேண்டிய வரங்களைக் கொடுத்தார்.



அப்போது பாகற்காய் வந்தது. ஆண்டவனைப் பார்த்து, ''இறைவா... காய்கறிகளிலேயே நான் முடிசூடா ராணியாக திகழ வேண்டும். எல்லாக் காய்கறிகளையும் விட நான் அழகாக இருக்க வேண்டும். கடைக்கு போனால் என்னையே அனைவரும் வாங்க வேண்டும்.

மற்றக் காய்கறிகள் எல்லாம் என்னைப் பார்த்து பொறாமைப்பட வேண்டும். மற்ற எல்லாவற்றையும் விட என் விலை அதிகமாக இருக்க வேண்டும். குழந்தைகள் கூட என்னை அதிகமாக விரும்பிச் சாப்பிட வேண்டும்.'', என்று நெஞ்சை நிமிர்த்தி தலைக் கனத்துடன் வரம் கேட்டது.

அப்படியா? என்று கேட்டுக் கொண்டார் இறைவன். அடுத்து வெங்காயம் தயங்கித் தயங்கி ஒரு மூலையில் நின்றது.

இறைவனை பார்த்து, ''சுவாமி எனக்கும் வரம் கேட்கும் பாக்கியம் உண்டா?'' என்று பணிவுடன் கேட்டது.

''ஏன் இல்லாமல்? அனைவருக்கும் அந்த உரிமை உண்டு. கேள்.'' என்று கூறினார் இறைவன்.

''சுவாமி என்னை சாப்பிடுபவர்களுக்கு நல்ல ஆரோக்கியம் கிடைக்க வேண்டும். என்னால் எந்த கெடுதலும் யாருக்கும் ஏற்படக் கூடாது. சைவ, அசைவ உணவுக்காரர்கள் அனைவருக்கும் நான் பயன்பட வேண்டும். அனைவரும் அதிக அளவு பயன்படுத்தும் அளவிற்கு என் விலை மக்களுக்கு மலிவாக இருக்க வேண்டும். சுவாமி இன்னொரு வேண்டுகோள் கேட்கலாமா?'' என்றது.

''தாராளமாக கேள்!'' என்றார் இறைவன்.

''உலகில் மனிதர்களாகப் பிறந்தவர்கள், ஏன் மிருகங்களாய் இருந்தால் கூட ஒருவர் இறந்தால் அவருடைய உற்றார், உறவினர்கள், குழந்தைகள் அனைவரும் அவருக்காக அழுகின்றனர்.

ஆனால், நாங்கள் இறந்தால் எங்களுக்காக வருத்தப்படவோ, அழவோ யாருமே இல்லையே சுவாமி... நாங்கள் என்ன பாவம் செய்தோம்! எங்களுக்கு ஏன் இந்த நிலை?'' என்று கண்ணில் நீர் மல்க ஆண்டவனிடம் மண்டியிட்டு கேட்டது.

ஆண்டவன் எழுந்தார். பாகற்காயை பார்த்து சொன்னார்.

''ஏ, பாகற்காயே! எந்த ஒரு பிறவியும் பிறர்க்கென வாழ வேண்டும் என்பதே இறை நியதி. அதை மறந்து முழுவதும் உன் சுய நிலத்தை மட்டுமே எண்ணி அழகை மட்டுமே பிரதான வரமாக கேட்டாய். தருகிறேன்'' என்றார்.

''என் அருமை வெங்காயமே... உன்னை பார்த்து நான் பெருமைப் படுகிறேன். மக்களுக்கு நல்லது நடக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தினால் உன்னை எல்லோருமே பயன்படுத்துவர். அநேகமாக நீ இல்லாத சமையலே இல்லை. மேலும் உன் கோரிக்கையை ஏற்று நீ வெட்டுப்படும் போது வெட்டுபவர் உனக்காக அழும்படி அருள் செய்கிறேன்'' என்றார்.

# சிறார்களின் கைவண்ணம்



## சொற்சிலம்பம் போட்டி இல.104

சொற்சிலம்பம் 103 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 25ஆம் திகதி ஆகும். விடைகள் மே 3ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே10ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.102க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.102

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | 2 மு | 3 த் | ம் | ■ | 4 தா | 5 ம | 6 தி |
| 7 ம | னை | வி | ■ | 8 அ | க | ண் | ட |
| ர் | ■ | 9 சா | 10 த | க | ம் | ■ | ல் |
| ■ | 11 சா | ள | ர | ம் | ■ | 12 ச | ■ |
| 13 ப | த | ர் | ■ | 14 பா | 15 தி | ம | 16 தி |
| 17 தி | னை | ■ | 18 க | வ | ண் | ■ | ரு |
| ப் | ■ | 19 ச | ட | ம் | ■ | 20 ச | மா |
| 21 பு | தை | ய | ல் | ■ | 22 ப | தி | ல் |

## சொற்சிலம்பம்-101 பரிசு பெறுவோர்.

1. வே.குமாரசுவாமி, பரமானந்தர் வளவு, கரவெட்டி கிழக்கு.
2. பொ.பாலசுப்பிரமணியம், 10 சி கிறஹரி வீதி, தெகிவளை.
3. திருமதி.சு.ஜெயரட்ணம், மாரியம்மன் கோவில் வீதி, ஆரையம்பதி – 02.

### பாராட்டுப் பெறுவோர்

1. லோ.அனுஷலா, கரணவாய், கரவெட்டி.
2. சா.கமலராணி, 167, மத்திய வீதி, திருகோணமலை.
3. திருமதி. ஜெயா ராஜரத்தினம், கோவில் வீதி, அட்டன்.
4. திருமதி. இ.பொன்னுத்துரை, உருத்திரா மாவத்தை கொழும்பு–06.
5. ஜெ.சண்முகராஜா, 250/6 அளுத்மாவத்தை வீதி, கொழும்பு–15.
6. திரு.எஸ்.கே. அன்ரனிதாஸ், கூழாவி ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
7. க.நடராஜா, "ஸ்ரீ அகம்", ஆரையம்பதி–02.
8. ஆ.அதிரூபசிங்கம், 51 ஏ மேபீல்ட் லேன், கொழும்பு–13.
9. நா.மனோகரன், இல.69, கல்முனை.
10. சி.அரச இரத்தினம், சங்குவேலி, மானிப்பாய்.

## சொற்சிலம்பம் போட்டி இல.104

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| | ■ | 20 | | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.104

### இடமிருந்து வலம்

1. ஆந்திராவிலுள்ளபிரபலஇந்துத் தலம்.இங்குசெல்லும்பக்தர்கள் தமதுதலைமுடியைகாணிக்கை யாக்குவதுவழக்கம்.
5. சாதுவான வீட்டு மிருகம்.
7. ஒருவரை சிறை வைப்பதற்காகப் பிடிப்பது.
8. இலட்சுமியின் ஒரு பெயர்.
9. மெல்லிய உலோகத்தட்டு.
10. கிணற்றில் நீர் அள்ள இது தேவை.
11. புதிதாக வரும் செய்தி/ தகவல்.
13. அழகிய காட்டு மிருகம்.
14. விவாதம்.
15. தாண்டு.
17. மண்ணுக்கு முந்தியது/ படி.
18. அரற்றுதல்.
20. சொந்தம்/ தன்னது.
21. ஒன்றோடு ஒன்றைச் சேர்.
22. சட்டம்.
23. வல்லவன்/வீரம்செறிந்தவன்.

### மேலிருந்து கீழ்

1. அதிர்ச்சியால்வருவது/ திருக்கூட்டம்.
2. பூப்பு(பருவம்).
3. பத்துச்செய்யுள் கொண்ட பிரபந்தம்.
4. களவெடு.
5. கடவுள்/ சூரியன்.
6. சிறு விறகு.
9. தன்னுடையது.
12. கடன் முற்றி, கடப்பாட்டை நிறைவேற்ற முடியாத நிலைமை.
13. உப்பரிகை.
15. உடலின் மிகச்சிறிய பகுதி/ கடலில் மிதப்பதும் கூட.
16. கதைக்கு கதாநாயகனும் தேவை. இவனும் தேவை.
17. பாக்குத்தரும் மரம்.
18. சூறாவளி.
19. கூற.
20. நல்ல/ சிறந்த.

# இரவுகள் விடிவதற்கே

"அப்பா"

"என்னம்மா" ஆதரவாய் மகளின் தலையை தடவிவிட்டான் பாலா.

"ரொம்ப பசிக்குதுப்பா" சூட்டுக்கோலால் யாரேனும் இதயத்தில் இழுத்து விட்டார்களா? வலியால் சுருங்கிப் போனது இதயம்.

"ரொம்ப பசிக்குதப்பா கொஞ்சமாவது சாப்பாடு தாப்பா இனி கேட்கமாட்டேனப்பா" அவன் உணவை வைத்துக்கொண்டே தனக்கு தரமறுப்பது போன்ற அந்த மழலையின் கெஞ்சல்.

"கடவுளே" என மகளை மார்போடு இறுக அணைத்துக்கொண்டான்.

இதென்ன கொடுமை கண்களை மூடி நிகழ்காலத்தை மறக்க எத்தனித்தான். வேறென்ன முடியும் அவனால். இறுக மூடிய கண்களைத் தாண்டி கன்னத்தைச் சுட்டது கண்ணீர்த்துளி.

பிரியா! அந்தப் பெயரே அவன் மனதில் உணர்ச்சிகளை ஊற்றெடுக்கச் செய்யும். அவன் வாழ்வில் ஒரு வருட வாடகை வசந்தமாக வந்து போனவள் அவள். ஒரு நடுத்தர குடும்பத்தில் மூன்றாவதாக பிறந்தவன் பாலா. அவனுக்கு கீழேயும் மூன்று பேர். கடவுளாலேயே சபிக்கப்பட்டு அனுப்பப்பட்டவனோ என்னவோ அவனை அவனின் பெற்றோருக்கு கூடப்பிடிக்காமல் போனது.

உண்மையான அன்பு எப்படி இருக்கும் என்று இவன் உணர்ந்ததே பிரியாவைக் கைப்பிடித்த பின்தான். பாலைவனமான அவன் மனதில் மழைச்சாரலாக வந்தவள். ஒரு அன்னையாக, தோழியாக, மனைவியாக, ஆசிரியையாக, ஆலோசகராக என ஒரு பெண்மையின் அத்தனை பரிமாணங்களையும் இவனுக்கு இனங்காட்டினாள். திருமணம் முடிந்த ஒரு வருடத்திலேயே அவர்களின் உறவுக்கு பாலமாக வந்த குழந்தையை இவன் கையில் கொடுத்து விட்டு இந்த உலகத்திலிருந்தே விடைபெற்றுக் கொண்டாள்.

தன் வாழ்க்கையில் ஒருபுதிய அத்தியாயத்தை தொடங்கவந்ததால் குழந்தைக்கு உதயா எனப் பெயரிட்டான்.

உதயாவை தன் புதிய வாழ்க்கையின் உதயம் என இவன் கருதினான். ஆனால்,




உதயா பிறந்ததால் தம் வாழ்க்கையே அஸ்தமனமாகி விட்டது எனப் புலம்பின இவன் உதடுகள். உதயா பிறந்த மூன்று மாதத்திலேயே பிரியா இறந்தது, பாலாவின் அப்பா இறந்தது, அவனின் மூத்த அண்ணாவிற்கு வேலை போனது, இரண்டாவது தங்கைக்கு விபத்து நடந்தது, மூன்றாவது தங்கையின் மாமியார் சீதனத்தின் மீதியை வாங்கி வரச் சொல்லி அவளை பிறந்தகத்திற்குவிரட்டியது என நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக நிகழ்ந்து முடிந்துவிட்டன. அதனால் அவனோடு அவன் குழந்தையும் வேண்டாத பொருளாகியது.

அவன் வேலை செய்த கம்பனியில் திடீரென ஏற்பட்டபாரிய நஷ்டத்தால் கம்பனியையே இழுத்து மூடிவிட வேலை போனது இவனுக்கு.

"ஏண்டா அந்தச் சனியனை எங்கேயாவது கொண்டுபோய் தலைமுழுகிட்டு வாயேண்டா"

"நீ பொறந்தப்பவே பிடிச்ச சனியன் உன் வாரிசா தொடர்ந்து இந்தக் குடும்பத்தை ஆட்டி வைக்குது."

இவர்கள் மனிதர்கள் தானா? என்பதில் எப்போதும் போல இப்போதும் சந்தேகம் வந்தது அவனுக்கு.

வழக்கம் போல காலையிலேயே வேலைக்கான ஒரு இன்டர்வியூக்கு போய் விட்டு வீட்டிற்குவர மணி 3க்குமேலாகிவிட்டது. கட்டிலில் சுருண்டு படுத்திருந்தாள் உதயா. அவள் கண்விழித்து பசிக்குது எனவும் திடுக்கிட்டான். அதுவும் காலையிலிருந்தே அவள் சாப்பிடவில்லை எனப்புரியவும் மனசு வலித்தது.

வேகமாக அம்மாவை தேடிச் சென்றான். சமையலறையில் எதையோ கழுவிக் கொண்டிருந்தாள்.

"என்னடா இப்பதான் வந்தியா, வேலை கிடைச்சிருக்காதே! ஏன்னா உன் ராசி அப்பிடி. சரி வந்து சாப்பிட்டுப்போ எனப் புலம்பியபடி தட்டை எடுத்து வைக்க.

"எனக்கு பசிக்கல அம்மா உதயா காலையிலே இருந்து சாப்பிடலையாம். கொஞ்சம் கவனிச்சுக் கொடுக்கக் கூடாதா? சின்னக் குழந்தை தானேம்மா?" என ஆதங்கத்துடன் அவன் கேட்க,

"நான்தான் பட்டினி போட்டேன்" என்ற அலட்சியமான பதிலில் அனலில் இட்ட புழுவைப்போல துடித்தான்.

"ஏனம்மா அந்தக் குழந்தை என்னம்மா பண்ணிச்சு உனக்கு"

"என்னடா நடக்கலை இந்த வீட்ல அது குழந்தையா, இல்ல எமனா? பொறக்கும் போதே அவ அம்மாவ கொன்னுட்டு பொறந்தா அவவந்தபிறகு இந்த வீட்ட புடிச்சுது சனியன்" எனக் கரிச்சுக் கொட்டினாள்.

"என்னம்மா குழந்தையப் போய் இப்பிடி திட்டிட்டு இருக்கே, அத அப்புறமா பேசலாம் கொஞ்சம்சாப்பாடு குடு குழந்தை பசியால துடிக்குது."

"நல்லாத் துடிக்கட்டும், இங்க பாருடா, நீயே இங்க தண்டச்சோறு. இதில உன் குழந்தைக்கும் சேர்த்து அவிச்சுக் கொட்ட என்னால முடியாது.

"புரிஞ்சுது நல்லாப் புரிஞ்சுது நீ தாயில்லை பேய்ன்னு, நீ மட்டுமல்ல இந்த வீட்ல யாருமே மனிதர்கள் இல்லன்னு புரிஞ்சுது" என்றான் தெளிவாக.

"டேய்" தாயின் அதட்டலில் குடும்பத்தவர் அனைவரும் சமையலறையை மொய்த்தனர்.

"மனித உருவத்தில இருந்தா மட்டும் மனிதர் ஆகிட முடியாது. மனசு வேணும், கடவுள் உங்க எல்லோருக்கும் மனதை வைக்க மறந்துட்டானே. உங்க பலவீனத்தாலும், அறியாமையாலும் நடந்த தவறுகளுக்கு ஒரு பிஞ்சை குற்றம் சாட்டுறீங்களே, இங்க விட்டா என் குழந்தைய கொன்னே போட்டுவீங்க, இந்த நரகத்திலிருந்து என் குழந்தைய நான்தான் காப்பாத்தனும், இனி நாங்க உங்களுக்கு பாரமா இருக்க மாட்டோம்". எனக் கோபமாக பேசியவன் விடுவிடுவென தன்னறைக்குள் நுழைந்து மகளின் அருகமர்ந்தான்.

"கண்ணா கொஞ்ச நேரம் பொறுத்துக்கடா விடிஞ்சதும், அப்பா வெளிய கூட்டிட்டு போய் சாப்பாடு வாங்கித்தரேன்" எனக் கண்ணீரோடு அவன் கூற,

"சரிப்பா, நான் இனி பசிக்குதுன்னு கேட்க மாட்டேன். அதுககாக நீ அழாதேப்பா" என தன் கண்ணீரைத் துடைத்து விட்ட பிஞ்சு விரலை இறுகப் பற்றிக் கொண்டான்.

இருவரும் காத்திருக்க ஆரம்பித்தனர் ஒரு புதிய விடியலுக்காக.

– சசிகலா.ரா –

# கருணா விவகாரமும்.......

07ஆம் பக்கத் தொடர்ச்சி.....

பலமாக இருக்கலாம் என்றிருந்தாரா?... ஒரு துரோகியைத் 'துரோகி' என்று சொல்வதைத் தாங்கிக் கொள்ள முடியாத அவர் மனது, அந்தத் துரோகியைத் 'தியாகி' என்று ஏற்றுக் கொள்ளவே தயாராய் இருந்திருக்கின்றதா?... உட்புச்சப்பற்ற இவ்வாறான கதைகளை எழுதுவதன் மூலம் அவர் எதை அடைய முயற்சிக்கிறார் என்பது புரியவேயில்லை. 'சண்டேலீடர்' நிறுவனத்திடம் கட்டுரைக்காக வாங்கும் காசுக்காக ஓர் அடிப்படையே இல்லாமல் எழுதுவது அவர் செய்யும் தொழிலுக்கே துரோகமாக அமையாதா?....

மிக அண்மையில் அவர் Frontline (March 27 - April 09) சஞ்சிகைக்கு இதே கருணா விவகாரத்தை வைத்து ஒரு ஆய்வு எழுதியிருந்தார். கருணாவை 'ஓயாத அலைக'ளின் களநாயகன் என்றும், 'ஜெயசிக்குறுவை' முறியடித்த யுத்தபிதா என்றும், ஆனையிறவை வெற்றிகொண்ட அசகாயசூரன் என்றும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தாக்கம் மிகுந்த திருப்புமுனைகளை ஏற்படுத்திய இராணுவ வெற்றிகளின் சூத்திரதாரி என்றும் வர்ணித்தது மட்டுமல்ல, அவையெல்லாம் உண்மையென்று கருணாவையே நம்பவைத்தார். (இந்த 'அசகாய சூரன்' என்ன ஆனார் என்பது இப்போது தான் எல்லோருக்கும் தெரிந்துவிட்டதே!)

ஆனால், உண்மையில் - 'ஜெயசிக்குறு'வைத் திருப்பி அனுப்பி, ஆனையிறவையும் துடைத்தெடுத்த களநாயகர்களை வரிசைப் படுத்தினால், ஆகக் குறைந்தது பத்துப் பேராவது கருணாவுக்கு முன்னால் இருப்பார்கள். அது மட்டுமல்ல: வடக்குப் போர் முனையில் ஜெயந்தன் படையணி படைத்த வீரசாதனைகளையெல்லாம் கருணாவின் தனிப்பட்ட சாதனைகளாக ஜெயராஜ் உருமாற்றம் செய்கின்றார். அது, வரலாற்றுப் பதிவில் நிகழ்த்தப்படுகின்ற மாபெரும் திரிபு. அவர் எழுதும் இது போன்ற கட்டுரைகள் உண்மைக்கு முற்றிலும் புறம்பான - அதீத கற்பனையான - அவரே உருவாக்கிய, அல்லது எப்படியோ கிடைத்த ஒரு சிறு கடுகை மலையாக்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை என்பது அவருக்கே தெரியும். வாசகர்களும், 'வேறு சில ஆட்களும்' - 'புலிகளின் உட்கதை தெரிந்த ஆள்' என்று தன்னைக் கொண்டாட வேண்டும என்பதற்காக, இவ்வாறு அவரே பொய்யான தகவல்களை உருவாக்கி தனது கற்பனை ஆய்வுகளை விரித்துச் செல்வது அவரது வழமையாகிவிட்டது

## பிழைத்துப் போன ஊகங்களும் எதிர்வு கூறல்களும்

பொதுவாகவே, கடந்த கால நிகழ்வுகளை மீள் நோக்கினால் - புலிகள் இயக்கம் தொடர்பான அனேக ஊகங்களும், எதிர்வுகூறல்களும் பொய்த்துப்போய்விட்டன. உலகத்தின் புகழ் பூத்த போரறிவியல் மற்றும் அரசறிவியல் ஆய்வு வித்தகர்கள் கூட அந்த விடயத்தில் தோற்றுப் போய்விட்டார்கள்.

சற்றே பின்னோக்கிப் பாருங்கள்: "ஒரு சுங்கானைப் புகைத்து முடிப்பதற்கிடையில் புலிகளின் கதை முடியும்" என்று சொன்ன டிக்சிற் ஒரே சுங்கானை இருபது வருடங்களாகப் புகைத்துக் கொண்டிருக்கின்றார். "எனது படைகளைக் கண்டவுடன் புலிப் பொடியங்கள் காற்சட்டையோடு மூத்திரம் விடுவார்கள்" என்று சொன்ன ரஞ்சன் விஜயரட்ணா, இப்போது ஆளே இல்லை. "97 வீதமான கதை முடிந்து விட்டது, 3 வீதம் தான் பாக்கி" என்று சொல்லித்திரிந்த ரத்வததையின் காலத்திலேயே புலிகள் சிங்களப் படைக்கு மிகக்கேவலமான தோல்விகளைக் கொடுத்தனர். சொல்லப்பட்ட எதிர்வு கூறல்கள் எல்லாமே தலைகீழ் ஆகி விட்டன.

திரும்பத் திரும்ப தங்கள் ஊகங்கள் எல்லாம் உண்மைக்கு முன்னால் தோற்றுப் போய் விடுவதைக் கண்கூடாகக் கண்டும், சில ஆய்வாளர்கள் திருந்துகின்றார்களே இல்லை. காரணம் என்னவெனில், எல்லாவற்றுக்கும் மேலான ஒரு யதார்த்த உண்மையை இந்த வித்தகர்களெல்லாம் கிரகித்துக்கொள்ளாமல் விட்டுக் கொண்டேயிருப்பது தான் அது. அது என்னவெனில், பிரபாகரன் என்பவர் ஊகங்களுக்கும் எதிர்வுகூறல்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு விசித்திரமான மனிதர் என்பது தான். பிரபா கரன் ஒரு புதிரான மனிதர். கூட இருப்பவர்க ளாலேயே புரிந்துகொளவதற்குக் கடினமான ஒரு தனித்துவமான மனிதர். அதிலும் குறிப்பாக - இராணுவ ரீதியாகத் தன்னைச் சுற்றிக் காலத்திற்குக் காலம் போடப்பட்டுவந்த நுட்பமான முடிச்சுக்களையெல்லாம் அவர் எவ்வளவு சாதுரியமாக அவிழ்த்து வருகின்றார் என்பது இன்று வரையும் கண்டறியப்பட முடியாதிருக்கும் அவரது வியக்கத்தகு ஆற்றல். தமிழீழப் போர் முனைகளின் முழுமுதற் தளகர்த்தர் திருவாளர் வேலுப்பிள்ளை பிரபாகரனேயன்றி வேறு எவருமே இல்லை.

## பிரபாவின் யுத்த முறை

பிரபாகரனின் யுத்த முறை பற்றிய ஒரு மிக அடிப்படையான உண்மையை இந்த ஆய்வாளர்கள எவருமே சரியாகப் புரிந்துகொள்கின்றார்களில்லை என்று தான் நான் கருதுகின்றேன். அது என்னவெனில், பிரபாகரன் வகுக்கும் போர் வியூகங்கள் ஆட் தொகையின் வலுவையோ, அல்லது படைக்கலக் களஞ்சியத்தின் அளவையோ நிச்சயமாக அடிப்படையாகக் கொண்டவையல்ல என்பது தான்.

13 ஆண்டுகளுக்கு முன்னால், ஆனையிறவு மீது மேற்கொள்ளப்பட்ட - ஒரு மாத காலம் நீண்ட - வெற்றி பெற முடியாமற் போன சமரின் பின், "இலங்கையில் இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன் என்றவிதமான ஒரு கருத்தை பி.பி.சி சொல்ல, அந்தக் கருத்துத் தொடர்பாகக் கருத்துச் சொன்ன பொட்டம்மான் சொன்னார், "இரு இராணுவங்கள் என்பதின் அளவுகோல் 'போர்வலு' எனின், அது சரியானதே". அதாவது, பிரபாகரனின் போர்வலு என்பது என்னவெனில் - தேர்ந்தெடுக்கப்பட்ட மூலோபாயம், நுண்ணறிவு கொண்ட வேவு, போர்நுட்பம் மிக்க திட்டமிடல், தேவைக்குச் சற்றும் அதிகமில்லாத ஆள் வலு, பொருத்தமான போருபகரண வழங்கல், மதிநுட்பம் வாய்ந்த படைநகர்த்தல், அர்ப்பணிப்பும் துணிவுடனுமான மனநிலை போன்ற இன்னோரன்ன காரணிகளின் மிகத் துல்லியமான அளவுகளிலான - உச்சப் பெறுபேற்றைத் தரக்கூடிய - கலவை ஆகும்.

இந்த இடத்தில், இந்த 'ஜெயந்தன் படையணி' பற்றிய ஒரு உண்மையையும் சொல்லுவது பொருத்தமாக இருக்கும்: அது என்னவோ கருணா புலிகளில் இருந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டப் போராளிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது என்பது உண்மை தான். ஆனால், அதற்குத் தகுந்த பயிற்சிகளைக் கொடுத்து, உகந்த ஆயுதங்களை வழங்கி, பொருத்தமான சண்டைக்களங்களில் தொடர்ச்சியாக இறக்கி, தேர்ந்த அனுபவப் பாடங்களைப் புகட்டி, புலிக ளின் முதன்மைப் போரளிகளுள் ஒன்றாகத் திகழந்தெழச் செய்த பெருமை - தலைவர் பிரபாகரனை மட்டுமே சாரும். "வன்னியில் ஜெயந்தன் படையணிப் போராளிகள் ஆயுதங்கள் களையப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்" என்று பி.பி.ஸி 'தமிழோசை'க்கு கருணா சொன்ன கதைக்கு இன்னும் மெருகேற்றி, "பொட்டம்மானின் ஆட்கள் அவர்களை ஒவ்வொருவராகப் பரிசோதித்துக்கொண்டு இருக் கின்றார்கள்" என்றும் எழுதியிருந்தார் ஜெய ராஜ். ஜெயந்தன் படையணி மட்டக்களப்புக் களத்தைத் திறந்த போது, தான் எழுதியது எப்படிப்பட்ட பொய் என்பது அவருக்குப் புரிந்தி ருக்கும்.

தமிழ்ச்செல்வன் திரும்பத் திரும்ப "கருணா ஒரு தனி ஆள்" என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். ஆனால், ஜெயராஜ் - 'கருணாவிடம் ஆறாயிரம் பேர் இருக்கின்றார்கள், ஆட்டிலறிப் பீரங்கிகள் இருக் கின்றன, பெரும் ஆயுதக் கிடங்கே இருக்கின்றது. கருணா மீது புலிகள் பாயும் போது, கருணாவும் அவர்களைச் சும்மா விட்டுவிடப் போவதில்லை சிங்களப் படை வேறு சண்டைக்குள் இழுக் கப்படப்போகின்றது. மட்டக்களப்பு வாவிகளில் இரத்த ஆறு ஓடப் போகின்றது' என்றவிதமாகப் பயமுறுத்திக்கொண்டே இருந்தார்.

அதை நம்பியவர்களும், 'என்ன ஆகுமோ?... ஏது ஆகுமோ?...' என்று தலையில் கை வைத்துக்கொண்டிருக்க, பிரபாகரனோ, மூன்றே நாளில் விடயத்தை முடித்து, எல்லோரையும் மூக்கில் விரல்வைக்க வைத்துவிட்டார். உண்மை என்ன என்பது இப்போது ஐயம் திரிபுறத் தெளிவாகிவிட்டது.

இந்த 'ஆள் வலு' தொடர்பாக, அனேகமானவர்கள் புரிந்துகொள்ளத் தவறுகின்ற இன்னொரு பரிமாணமும் உண்டு. அது போரியல் பரிமாணம் அல்ல; உளவியல் பரிமாணம். சாதாரண மனிதர்கள் போராளிக ளாகும் போது, அவர்களை - சுயத்தின் வரம்புகளைக் கடந்து, ஒரு பொது அபிலாசைக்காகத் துறவறம் பூணவைக்கும் தெய்வீக ஆளுமை, பிரபாகர னிடம் மட்டுமே தான் உண்டு. பொது மக்களாக சாதாரண வாழ்வில் இருந்து விட்டுப் பின்பு போராளிகளாக இருப்பவர்களாகவும், போராளிகளாக இருந்துவிட்டுப் பின்பு சாதாரண வாழ்வுக்கு வந்தவர்களாகவும் பலருடன் எனக்குப் பரிச்சயம் உண்டு. அவர்கள் பிரபாகரனின் போராளிகளாக இருந்த போது முற்றிலும் மாறு பட்ட மனிதர்களாக இருந்தார்கள்; இருக்கின் றார்கள்.

## தராகியின் ஆய்வுக் கட்டுரை

தேர்தலுக்குப் பின்பு, கருணா விவகாரத்தைப் புலிகள் என்னவிதமாகக் கையாளலாம்?... என்று ஆராய்ந்திருந்தார் தராகி. Daily Mirror (March 25, 2004) பத்திரி கையில் எழுதிய நீண்ட ஆய்வின் முடிவில் அவர் இவ்வாறு சொல்லியிருந்தார்: "புலிகளுக்கு இருக்கும் முதல் வழி கருணாவை மட்டக்களப்பு - அம்பாறைக்குள் 'பூட்டிச்சிறைப்படுத்தி', அவர் சிங்களத்தரப்புடன் தொடர்புகளை உருவாக்குவதைத் தடுக்க வேண்டும்"

இது உள் ஒன்று வைத்து வெளியில் வேறொன்று சொன்னது போல இருந்தது. அவ்வாறாக கருணாவை மட்டக்களப்பு அம்பாறைக்குள் முடக்கி விட்டிருந்தால், அது கருணாவே கேட்ட அந்த 'மட்டக்களப்பு அம்பாறைக்கு தனியான சுய நிர்வாக அலகு' ஒன்றை உத்தியோகப் பற்றற்ற முறையில் புலிகளே கொடுத்த மாதிரியல்லவா ஆகிவிட்டிருந் திருக்கும்?... ஆக, கருணா செய்த துரோகத் தனத்தை மறந்து - அவரை மட்டக்களப்புக்குள் முடக்கி - அவரை அப்படியே விட்டுவைப்பதன் மூலம், கருணா கேட்டதையே அவருக்குக் கொடுத்து விடச் சொல்லியிருந்தாரா இந்த ஆய்வாளர்?

கருணா தான் முன்பு சார்திருந்த இராணுவ அமைப்பின் விதிமுறைகளை மீறியவர் என்ற வகையில் அவர் அந்த அமைப்பின் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப் படவேண்டியவர். அல்லது, அதன் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர். அவர் சிங்களப் படையுடன் சோந்துவிடுவார் ஏன்பதற்காக அவர் மீதான ஒழுங்கு நட வடிக்கையைப் புலிகள் கைவிட்டிருக்க முடியாது. ஒரு இராணுவக் கட்டமைப்பின் நியதி எவ்வாறு இருக்கும் என்பது பிரபல்யமான இந்தப் போரியல் ஆய்வாளருக்குப் புரியவில்லை என்பது ஆச்சரியமானது.

இந்த ஆய்வாளர்கள் எல்லோருமே - புலிகளின் பாரம்பரியப் பின்னணியைச் சரியாகக் கிரகித்துக் கொள்ளாமல், அல்லது கிரகித்துக் கொள்ளாதது போலக் காட்டிக்கொண்டு கருத்துரைத்து வந்தார்கள் என்று தான் நினைக்கின்றேன்.

துரோகிகளைக் கையாள புலிகளுக்கு இருக்கின்ற முதலும், இடையும், கடைசியுமான ஒரே வழி, அந்த ஒரே வழி தான். அது புலிகள் வழமையாகத் துரோகிகளை எவ்வாறு கையாளுகின்றார்களோ அதே வழிதான்.

புலிகள் எப்போதும் புலிகளாகவே இருக்க வேண்டும். அப்படி இருக்கும் வரைதான் தமிழனுக்கு மரியாதை.

—குழைக்காடான்—

# தமிழ்க் கலைஞர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

தமிழ்க் கலைகள் என்றால் அவை இயல், இசை, நாடகம் என்பது யாவரும் அறிந்த ஒன்று. இவற்றை வளர்வுபடுத்தும் நோக்கில் கலாசார அமைச்சின் கீழ் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடகக்குழு, தமிழ் நடனக்குழு, தமிழ் சங்கீதக்குழு என மூன்று குழுக்கள் கலாசார அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றன.

இத்துறைகளோடு கூடிய, அனுபவம் கொண்ட முக்கியஸ்தர்கள் இக்குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர். வருடாந்தம் தேசிய ரீதியில் சிங்களமொழி மூலமாக மேற்கொள்ளப்படும் கலாசார நிகழ்வுகளுக்கு ஏற்றால் போல் அவற்றை தமிழ் மொழியிலும் நடத்த இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய நாடக விழா, தேசிய நடன விழா, தேசிய சங்கீத விழா என்ற ரீதியில் சிங்கள மொழி மூலம் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் போன்று இக்குழுக்களும் இத்தகைய நிகழ்ச்சிகளை தமிழ் மொழியிலும் நடத்தி வருகின்றன.

சிங்களமொழி மூலமாக நடத்தப்படும் இத்தகைய நிகழ்வுகளுக்கு பரந்த அளவில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு நாடளாவிய ரீதியில் அவ்வ நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்காக கலாசார அமைச்சு விளக்கும் காரணங்கள் பல உள்ளன. அவற்றில் மிகப் பிரதானமானவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

பெரும்பான்மையினர் என்ற ரீதியில் அவர்களது நடைமுறைகள் முழு நாட்டையும் உள்ளடக்க வேண்டியதாகிறது. தமிழ் மொழி மூலமான நடைமுறைகள் ஒருசில குறிப்பிட்ட மாவட்டங்களிலும், மாகாணங்களுக்குமே அடங்கியிருக்கின்றன.

இதன் காரணமாக நிதி ஒதுக்கீடுகள் தமிழ்க்கலைக்குழுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவது குறைவாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் வெறுமனே நிகழ்ச்சிகளை மட்டும் நடத்துவதற்காக– மட்டுப்படுத்தப்பட்ட நிதி உதவிகளை கலாசார அமைச்சு வழங்குகின்றது. எமது மேலதிக அபிவிருத்தி ரீதியிலான, எதிர்காலத்திட்டங்களுக்கு இவர்கள் வழங்கும் நிதி போதுமானதாகவில்லை. தனித்துவம் தேவை என கலைஞர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இதேவேளை தமிழ் கலாசாரத்துக்கான செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இந்து சமய அலுவல்கள் அமைச்சு இருப்பதாகவே பலரும் கருதுகின்றனர்.

ஆரம்பகாலத்தில் இந்த அமைச்சு தோற்றம் பெற்ற போது இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற பதப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன் கலாசார அபிவிருத்தி தொடர்பான பணிகளும் உள்வாங்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் காரணமாக சகல கலாசார அபிவிருத்திகளும், கலாசார அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டு பொதுவான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கை காரணமாகவே இன்று தமிழ் மொழி மூலமாக கலாசார அபிவிருத்தியில் அரசு பாராமுகம் காட்டுவதாக கலைஞர்கள் வருந்துகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்க்கலாசார மேம்பாட்டினை முன்னெடுப்பதற்காக தனித்துவமான கலாசார அமைச்சின் தோற்றம் அவசியம் என்பதை தமிழ் கலைஞர்கள் வலியுறுத்த முன் வந்துளளார்கள்.

இதற்கான வேண்டுகோள் ஒன்றை தமிழ் கலைஞர் அபிவிருத்தி நிலையம் ஜனாதிபதியின் கவனத்துக்கு முன்வைத்துள்ளது.

இவர்கள் முன்வைத்துள்ள கருத்துகளில மிக முக்கியமாக தனித்துவமானது கலை கலாசார விடயங்களை மேற்கொள்ள தமிழ் அமைச்சர் ஒருவரிடம் பொறுப்புகள் முழுமையாக ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே.

புதிய அரசு இது தொடர்பில் கவனம் செலுத்துமா? தமிழ் கலைஞர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

- நாச்சியூரான் -


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Ct | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract AD/V | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

# உடற்பருமனைக் குறைப்பதற்கு உகந்த வழி என்ன?

கே:— வயது 30.பெண். திருமணம் ஆகவில்லை. எனது நிறை 90 கிலோ. உடல் சரியாகப் பெருத்துள்ளது. நடந்தால் களைக்கின்றது. நீரிழிவுநோய், இரத்த அழுத்தம் அந்த மாதிரி நோய்கள் எதுவும் இல்லை. தேகப் பயிற்சி செய்தால் மெலிந்து விடலாம் என்று எண்ணி GYMNASIUM ஒன்றில் சேர்ந்தும் பலனில்லை.

ஆகாரவகைகளைக் குறைத்தால்மெலிந்து விடலாம் என்று DIETING செய்தேன். கொஞ்சம் மெலிந்தேன். ஆனால் திரும்பவும் நிறைபோட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. பருமனை குறைக்க வழி சொல்லவும்.

ப:— உடல் பெருப்பதும், ஒருவகை நோய். அதுபோல் உடல் பெருத்தவர்களுக்கு நீரிழிவு, இருதய நோய், அதிஉயர் இரத்த அழுத்தம் போன்று வேறு நோய்கள் வரும் சாத்தியமும் அதிகம். எனவே, உடற்பருமனைக் குறைப்பது அவசியம்.

அதிகமாக உண்பது, அடிக்கடி உண்பது, இனிப்பு, கொழுப்பு பதார்த்தங்களை அதிகளவில் உணவில் சேர்ப்பது, உடற்பயிற்சி இல்லாமை, சோம்பேறிக் குணம், கவலை, துக்கம் என்பவை உடற் பருமனை அதிகரிக்கும் முதல்நிலைக் காரணிகளாகும்.

நீரிழிவு, தைரொய்ட் என்ற கபச்சுரப்பி குறைபாடு, சூலக நோய்கள், ஹார்மோன் குறைபாடுகள், ஹார்மோன் மருந்துகளை உண்பது என்பவை உடற்பருமனை அதிகரிக்கும் மற்றைய காரணிகள்.

உடற்பருமன் நிமித்தம் நோய்கள் ஏற்பட வாய்பிருப்பதால், உடற்பருமன் என்பது ஒரு நோயாகக் கருதப்பட்டு OBESITY என்று அழைக்கப்படுகிறது.

சிறுவயதிலிருந்தே சரியான உணவு முறைகளைக் குழந்தைகளுக்குப் பழக்கி வந்தால், பிற்காலத்தில் அவர்களது உடல் பருமனாகாமல் அளவாக இருக்கும். ஆனால், இன்றைய பெற்றோர் சிறுவயதில் குழந்தைகள் நன்றாக வளரவேண்டும் என்று தேவைக்கதிகமாகவே உணவு ஊட்டுவர். இதன் காரணமாக இந்த உணவுப் பழக்கம் தொட்டிலில் ஆரம்பித்து சுடுகாட்டில் எம்மைக் கொண்டுபோய் விடுகிறது.

ஒருவருக்கு எவ்வளவு எடை இருக்க வேண்டும் என்பது அவரது உயரம், உடல் வாகு என்பவற்றைப் பொறுத்திருக்கிறது. இது ஒரு அட்டவணை வடிவில் மருத்துவர்களிடம் இருக்கின்றது. அதில் உள்ள சராசரி அளவை விட அதிகமாக நிறை இருந்தால் அது OBESITY நோய் என்று அர்த்தம்.

தேகப்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு மூலம் உடற் பருமனைக் குறைக்கலாம். தேகப்பயிற்சி தினமும் ஒழுங்காகச் செய்வது அவசியம். நிறை குறைந்த பின்னரும் கூட தேகப் பயிற்சி தொடர்ந்து செய்யப்பட வேண்டும். தினமும் இரண்டு கிலோமீற்றர் தூரம் விரைவாக நடப்பது, யோகாசனம், நீச்சல், சைக்கிளோட்டம் என்பவை உடற் பருமனைக் குறைக்க நல்ல பயிற்சிகளாகும்.



உணவுக் கட்டுப்பாடு என்பது மிகவும் பொறுப்பாகவும்; மனக்கட்டுப்பாட்டுடனும் மனதிற்கு உண்மையாகவும் கைக்கொண்டால் ஒழிய பலனளிக்காது. இனிப்பு வகைகள், கொழுப்பு வகைகள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு மருத்துவருடன் கலந்தாலோசித்து உங்கள் நிறை, உயரம் என்பவற்றிற்கும் உங்கள் தொழிலுக்கும் ஏற்ற உணவு அட்டவணையைப் பெற்று அதற்கேற்றபடி ஒழுங்காகப் பின்பற்றவேண்டும். அநேகர் ஒழுங்காக உணவுக் கட்டுப்பாட்டைப் பின்பற்றாமல் இடையில் விட்டுவிட்டு உணவுக் கட்டுப்பாட்டால் பிரயோசனமில்லை என்று தமது வசதிக்கு ஏற்ப முடிவு எடுத்து விடுவார்கள்.

இப்படி சரியாகச் செய்தும் பலனில்லை என்றால் சில மருந்துகளை மருத்துவர்களின் ஆலோசனையுடன் உபயோகிக்கலாம். உடற்பருமனைக் குறைக்கும் மருந்துகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழியில் செயலாற்றும். பசி உணர்வைக் குறைக்கும் மருந்துகள், உணவில்உள்ளகொழுப்புச் சத்தை உடல் உறிஞ்சாமல் வெளியேற்றும் மருந்துகள், உண்ட உணவை விரைவில் எரித்து விடும் மருந்துகள், உடலில்உள்ளகொழுப்பு சேமிப்புகளை அகற்றும் மருந்துகள் என்று பலவகை மருந்துகள் உண்டு.

உங்களுக்கு ஏற்றதை உங்கள் மருத்துவர் உங்களைப் பரிசோதித்து எழுதித் தருவார். SIBUTRIM மாத்திரைகள் உடல் கொழுப்புகளை அகற்றி பருமனைக் குறைக்கும் தன்மை கொண்டவை.

இது தவிர சிலருக்கு தேகத்தில் சிலபகுதிகளில்தேவையற்றகொழுப்பு சேமிக்கப்பட்டு ஊளைச்சதையாகத் தோற்றமளிக்கும். உதாரணமாக வயிறு, இடை, தொடை, தோள்ப் பட்டை போன்ற இடங்களில் உள்ள இந்த ஊளைச்சதைகளை LIPOSUCTION என்ற விசேட சத்திர சிகிச்சை மூலம் உறிஞ்சி எடுக்கச் செய்து அகற்றமுடியும்.

**கே:— வயது 50. ஆண். சமீபத்தில் இரதத அழுத்தம் அதிகமாயிருக்கிறது என்று வைத்திய சோதனையில் அறிந்தேன். எனது டாக்டர் பல பரிசோதனைகள் எழுதித் தந்தார். அதில் ஒன்று 2D ECHO என்ற ஒரு பரிசோதனை. இது எதற்காகச் செய்யப்படுகிறது.**

ப: உங்கள் வைத்தியர் உங்களுக்கு அதி உயர் இரத்த அழுத்தம் இருந்ததால் உங்களுக்கு இரத்தத்தை 'பம்ப்' செய்யும் இருதயத்தில் ஏதாவது தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிவதற்காக 2D ECHO CARDIOGRAM என்ற ஸ்கேன் வகை பரிசோதனையை செய்யச் சொல்லியுள்ளார்.

2D ECHO CARDIOGRAM என்பதன் மூலம் புற ஒலி அலைகளை (ULTRA SOUND WAVES) உபயோகித்து இருதயத்தின் தொழிற்பாட்டை அறியமுடியும். இருதயம் தொழிற்படும் போதும், ஓய்வாக இருக்கும்போதும் உள்ள் தொழிற்பாடுகளின் அளவை ஒப்பிடுவதன்மூலம் இதயத்தின் அறைகள் சரியாகத் தொழிற்படுவதை அறிய முடியும்.

இருதயம் பெருத்திருப்பதையும் இருதயத்தின் அறைகளில் குருதி உறைந்த கட்டிகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றியும், இருதய வால்வுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதைப் பற்றியும் வைத்தியரால் அறிந்துகொள்ள முடியும்.

இந்தப் பரிசோதனைக்கு வார்ட்டில் அனுமதிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு - 14

ஒருசில நிமிடங்களில் செய்துமுடிக்கக் கூடிய பரிசோதனை இது. பயப்படாமல் பரிசோதனையைச் செய்யுங்கள்.

**கேள்வி:— வயது 18. ஆண். எனது கால் விரல் இடுக்குகள் சதா அவிந்துகொண்டே இருக்கின்றன. பாதணிகள் அணிந்தால் கால் துர்நாற்றம் வீசுகிறது. சிகிச்சை சொல்லவும்.**

பதில்:—உங்கள் நோய் ATHLETES FOOT எனப்படும். ஒரு பூசண (FUNGUS) த்தினால் ஏற்படுகிறது. பொதுவான குளியலறை —கழிப்பிடங்களை உபயோகிப்பதனால் தொற்றக்கூடியது. பாதங்கள் அடிக்கடி வியர்க்கும் உடல்வாகுள்ளவர்களுக்கு இலகுவில் ஏற்படக்கூடியது.

பாதங்களை அடிக்கடி கழுவி துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும் CLOTRIMAZOLE கிறீமைபாதிக்கப்பட்ட இடங்களில் பூசி வரவும். மூடிய பாதணிகளை உபயோகிக்காமல், காற்றோட்டமுள்ள சான்ரில், செருப்புகளை உபயோகித்தல் நல்லது. சாதாரணமாக ஒரு வாரத்தில் குணமானாலும் திரும்பத் திரும்ப வரக்கூடிய வாய்ப்பு உண்டு. சப்பாத்து உபயோகிப்பதானால்—FUNGAL DUSTING POWDER உள்ளே தூவி உபயோகிக்கலாம்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | 7.05 அன்பு மடல்/ 7.30 பாடல்கள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | வணக்கம் தாயகம் | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்னசின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ்டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | பிளக் பூஸ்டர் மூவி |
| 2.00 | (ரொமேன்ஸ்) | (முதலாம் பகுதி) | (கொமடி) | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | (மங்கையர் நிகழ்ச்சி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | (விவரண சித்திரம்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | கில்லி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | தமிழ் கார்ட்டூன் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஓ போடு |
| 5.00 | கொண்டாட்டம் | மதிய இடைவேளை | ஸ்டார் ஸ்பெஷல் | மதிய இடைவேளை | என்றும் கலாட்டா | நகைச்சுவை நேரம் | வேலன் |
| 5.15—5.30 | இசைத் தென்றல் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | இசைத் தென்றல் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | இசைத்தென்றல் | 5.30 இப்படிக்கு நீங்கள்/ 5.45 அன்பு மடல் | வேலன் |
| 6.00 | களம் | (இரண்டாம் பகுதி) | ஓப்போடு | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | கோல்டன் மொமன்ஸ் ஒவ் கிரிகெட் | TO BE CONFIRMED | மினாால் |
| 6.30 | குங்குமம் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | குங்குமம் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | குங்குமம் | TO BE CONFIRMED | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | காவ்யாஞ்சலி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | காவ்யாஞ்சலி | அக்ஷன் சீரியல் | அக்ஷன் சீரியல் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | நதிஎங்கே போகிறது? | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | நீ நான் அவன் | (அலைலஸ்) | ('24) |
| 8.00 | சக்தி செய்திகள் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி செய்திகள் | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சித்தி | கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு | சித்தி | ருத்ர வீணை | இசைப் ஞானம் |

# தமிழீழத்தின் தேசிய மலர்



நாடுகள் தமக்கென்று தனித்த தேசிய அடையாளங்களைக் கொண்டவை. தேசிய கீதம், தேசிக் கொடி, தேசிய பறவை, தேசிய மலர் என்று அவை விரிந்து செல்லக்கூடியவை.

நாடுகளின் வளர்ச்சிக் கட்டங்களில் இவை அறிமுகப்படுத்தப்படுவதுண்டு. தமிழீழம் தனது தேசிய மலராக கார்த்திகைப் பூவை பிரகடனப்படுத்தி இருக்கிறது.



கார்த்திகைப் பூ (Gloriosa Lily) தமிழீழத் தேசியக் கொடியின் சிவப்பு, மஞ்சள் நிறத்தை உடையது. மாவீரர்களை நினைவு கூரும் நவம்பர் (கார்த்திகை) மாதத்தில் இது வடக்கு – கிழக்குப் பிரதேசம் முழுவதும் பூத்துக் குலுங்கும். அதற்கே உரிய சுகந்தமும் இதற்கு உண்டு.

தேசிய மலராகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள கார்த்திகைப் பூவினைத் தேசியக் கொண்டாட்டங்களில், விழாக்களில் அணிந்து கொள்ளுமாறும், அதனை வீட்டிலும், பொது இடங்களிலும், தொழில் புரியும் தளங்களிலும், கல்வி வளாகங்களிலும் ஏனைய வடக்கு – கிழக்குப்புலத்திலும் வளர்க்குமாறும், பராமரிக்குமாறும் வன்னியில் உள்ள நிர்வாகப் பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.



தேசங்களின் வளர்ச்சியில் இத்தகைய அடையாளங்களும் அறிமுகங்களும் தேவையானவை. வளர்ச்சி கண்ட நாடுகளிலும் இந்த மரபு உண்டு. அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்திலும் வித்தியாசமான மலர்கள் தேசிய அடையாளத்தைப் பிரதிபலித்து நிற்கின்றன.

தேசிய மலர்த் தெரிவின் பின்னே பல்வேறு அம்சங்கள் பொதிந்துள்ளன. குறித்த தேசத்தின் வரலாறு, பாரம்பரியம், தேசிய விடுதலை, சுய மரியாதை, சுய கௌரவம் என்பனவும் மலர்த் தெரிவின் போது கருத்தில் கொள்ளப்படுவதுண்டு. ஈழத்தின் தேசிய மலர்த்தெரிவிலும் இவற்றைக் காணமுடியும்.

கார்த்திகைப் பூ தனது நிறத்தைப் பல்வேறாக மாற்றக்கூடியது. இதனால் வெண்கரந்தல், செங்கரந்தல் என்றும் வழங்கப்படுகிறது. முழுவிருத்தியடைந்த மலர் பூத்து ஏழு நாட்கள் பசுமையாகக் காணப்படும். இதனை நீடித்த ஆயுளுக்கான குறியீடாகவும் கொள்ளலாம்.



இந்த மலர் ஆரம்பத்தில் பசிய நிறத்திலும், பின்னர் மெல்ல மெல்ல வெண்மஞ்சள், மஞ்சள், செம்மஞ்சள், கடுஞ்சிவப்பு என வண்ணம் மாறிப் பின்னர் சிவப்பு நிறம் வெளுத்து உதிரும். இதில் கூட நிறம் சேர்த்து அழகூட்டல், பரிணாமத்தோற்றம் என்பவற்றைத் தரக் கூடியதான உணர்வினை ஏற்படுத்துகிறது.

உளவியல் ரீதியிலும் மலர்கள் பிரதானமானவையாகக் கொள்ளப்படுவதுண்டு. அவற்றின் நிறம், நறுமணம் என்பன சந்தோஷத்தினையும், தெம்பினையும் வழங்கக்கூடியன.

தமிழர் பண்பாட்டிலும், வரலாற்றிலும் கார்த்திகைப் பூ நீடித்த இடம் பிடித்து வந்துள்ளது. இது தொடர்பாக தச்சின மூர்த்தி எழுதிய 'தமிழர் பண்பாடும் கலாசாரமும்' எனும் நூலில் கூறப்பட்டுள்ளமை அவதானத்துக்குரியவை.

போருக்காக மன்னர்கள் புறப்படும் வேளையில் பூக்களால் ஆன மாலைகள் அணிந்து வெளிக்கிளம்புவர். அதன் போது காந்தல் எனும் மலரிலானான மாலை அணிந்து புறப்படுவதும் கூறப்பட்டுள்ளது. காந்தல் என்பது தமிழ்மரபில் கார்த்திகையைக் காட்டுவதாகும்.

கார்திகைப் பூ ஈழத்தின் வடக்கு – கிழக்கு உட்படவேறு பல நாடுகளிலும் காணப்படுகிறது. இந்தியா, சீனா, மலாயன் தீபகற்பம், ஆகியவற்றிலும் ஆபிரிக்காவின் சில பகுதிகளிலும் சுவாத்தியத்துக்கு ஏற்றவகையில் இது உண்டு. இதனால், சர்வதேசத் தன்மையும் கார்த்திகைப் பூவுக்கு உண்டு.

கார்த்திகைப் பூவுக்குப் பல நிறங்கள் உள்ளன அதே போலப் பலபெயர்களும் உண்டு. 'அக்னி சலம்', 'கலப்பை', 'இளங்கிளி', 'தலைசுருட்டி', 'பட்டி', 'தோன்றி' 'வெண் தோன்றி' என்பன அவற்றுள் பெரும்பாலானவை ஆகும். பெயர்கள் வேறாக இருந்தாலும் அதன் தன்மை குணம் என்பன ஒன்றேதான்.



நவீபா




# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

## தினந்தோறும் திக்கெட்டும் இடம்பெறும் நிகழ்வுகளைப் பக்கச்சார்பின்றி சுடச்சுட அறிந்து கொள்வதற்கு சுடர் ஒளி நாளிதழைக் கேட்டு வாங்குங்கள்!

யாழ். செய்திகள்

மலையகச் செய்திகள்

உலகச் செய்திகள்

விளையாட்டுச் செய்திகள்

நாளிதழ் ரூ 7/=

மேலும் பல்வேறுபட்ட சுவையான அம்சங்களுடன் தினந்தோறும் வெளிவருகிறான்

எதுமாதிரியும் இல்லாத புதுமாதிரியான உங்கள் பத்திரிகை சுடர் ஒளி

# ஸிம்பாப்வேயில் முரளி சாதனை படைப்பாரா?

ஸிம்பாப்வே – இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் இந்த மாதம் 20 ஆம் திகதி ஸிம்பாப்வேயில் ஆரம்பமாகிறது. ஸிம்பாப்வே கிரிக்கெட் வீரர்களுக்கும் – ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியனுக்கும் இடையிலான பிரச்சினைகள் தொடர்கின்ற நிலையில் அந்த பிரச்சினை இலங்கை அணியின் தொடரில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையின் உபதலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்தார். அதற்கமைய கடந்த வாரம் இலங்கை அணி ஸிம்பாப்வே பயணமானது.

அவுஸ்திரேலிய அணியுடன் இலங்கையில் நடைபெற்ற ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் தோல்வியுற்ற நிலையில் இலங்கை அணிக்கு இந்த தொடர் முக்கியம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது. அது போல் முரளிதரனுக்கு இந்த தொடர் மிக முக்கியம் வாய்ந்ததாக அமையும். காரணம் கொட்னி வோல்ஷின் 519 டெஸ்ட் விக்கெட்டுக்கள் என்ற சாதனையை முரளிதரன் பெரும்பாலும் இந்த தொடரில் முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



முரளிதரனின் "துஷ்ரா" பந்து வீச்சு முறை குறித்து அவுஸ்திரேலியாவின் கிழக்கு பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் முடிவுகள் வெளியிடப்படாத நிலையில் முரளிதரனும் இலங்கை அணியுடன் ஸிம்பாப்வேக்கு பயணமாகியுள்ளார். ஸிம்பாப்வே அணியுடன் இலங்கை அணி 5 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரிலும், 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும் ஆடவுள்ளது.



முரளி

எதிர்வரும் மே 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த தொடருக்கான கால அட்டவணை வருமாறு:–

**ஒருநாள் ஆட்டங்கள்**

| திகதி | இடம் |
|---|---|
| 1.ஏப்ரல் 20 | – புருளாவாயோ |
| 2.ஏப்ரல் 22 | – புருளாவாயோ |
| 3.ஏப்ரல் 25 | – ஹெராரே |
| 4.ஏப்ரல் 27 | – ஹெராரே |
| 5.ஏப்ரல் 29 | – ஹெராரே |

மே.03,

பயிற்சி ஆட்டம் ஸிம்பாப்வே "ஏ" அணியுடன் – ஹராரே.

**டெஸ்ட் ஆட்டங்கள்**

| திகதி | இடம் |
|---|---|
| 1.மே 6 – 10 | – ஹெராரே |
| 2.மே 14 – 18 | – புளோவாயோ |

# உச்சத்தில் லாரா!

நம்பிக்கைதான் வெற்றி. நம்பிக்கைதான் வாழ்க்கை – இவர் கடந்த வாரம் நிரூபித்து இருக்கின்றார். ஒரு கிரிக்கெட் வீரர்.

ஆரம்பகாலத்தில் கடற்கரை மணலில் தென்னை மட்டைகளால் பந்தை விரட்டியவர் இன்று முழு உலகையும் தன் நாட்டு பக்கமும், தனது கிராமப் பக்கமும் திரும்பிப் பார்க்க செய்திருக்கிறார். அவர் வேறு யாரும் அல்லர் மூன்று தடவைகள் இங்கிலாந்து அணியிடம் தோற்றபின்பு நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிரைன் லாரா தான்.



லாரா

90/91 ஆம் ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட்டினுள் நுழைந்த பிரையின் லாரா இதுவரை 106 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி இருக்கிறார். 9657 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 25 சதங்களும் 43 அரைச் சதங்களும் உள்ளடங்கும்.

லாரா டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கி இரண்டு வருடங்களுக்குள் அதுவரை ஓர் ஆட்டத்தில் உலக சாதனை ஓட்டங்களாக இருந்த 365 (கெரி சோபர்ஸ்) ஓட்டங்களை கடந்து 375 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை புரிந்தார். 1994 ஆம் ஆண்டு அண்டிகுவா சென் ஜோன்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் லாரா இந்த சாதனையைப் புரிந்தார். அன்று லாரா 24 வயதில் மிகப் பெரிய உலக சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார்.

லாராவின் சாதனையை 6 மாதங்களுக்கு முன் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்தியூஹெய்டன் ஸிம்பாப்வே க்கு எதிரான ஆட்டத்தில் 380 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதன் மூலம் முறியடித்தார். ஆனால், ஹெய்டனின் சாதனை நீண்டகாலம் நிலைக்கவில்லை –

இங்கிலாந்து அணியுடனான தொடர் ஆரம்பிக்க முன்னர் இந்த தொடரில் 400 ஓட்டங்களை பெற வேண்டும் என்ற ஆவல் தனக்கிருப்பதாக பிரைன் லாரா தெரிவித்திருந்தார். எனினும் இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற முதல் மூன்று ஆட்டங்களிலும் மேற்கிந்திய தீவுகள் அணி படுமோசமாக தோல்வியடைந்தது. இதனால் லாரா அணித் தலைமையில் இருந்து விலக வேண்டும், லாரா உள்ளிட்ட அணியினரையே மாற்ற வேண்டும் போன்ற கண்டன குரல்கள் எழுந்தன. இந்த கண்டன குரல்களுக்கு நான்காவது டெஸ்ட்டில் லாரா தனது துடுப்பின் மூலம் பதில் அளித்துள்ளார்.

ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்கள், கிரிக்கெட் வரலாற்றில் 400 ஓட்டங்களை கண்ட முதல் வீரர் பிரைன் லாரா. சரியாக 10 வருடங்கள் கழித்து மீண்டும் தனது 375 ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார் லாரா.– அதுவும் ஒரே மைதானத்தில், (அண்டி குவா சென்.ஜோன்ஸ்)

ஒரே அணிக்கெதிராக (இங்கிலாந்து) லாரா இந்த சாதனையைப் புரிந்துள்ளார். கிரிக்கெட் விளையாடப்படும் வரை 400 ஓட்டங்களைக் கண்ட முதல் வீரர் என்ற பெருமையும் லாராவின் பெயரும் என் றும் அழியாத ஒன்றாகவே இருக்கும்.

# சரித்திர சாதனை!

இந்திய--பகிஸ்தான் அணிகளுக்கிடையிலான வரலாற்று சிறப்புமிக்க கிரிக்கெட் தொடர் நிறைவடைந்துள்ளது. 14 வருடங்களுக்குப் பின் பாகிஸ்தான் சென்று விளையாடிய இந்திய அணி, ஒரு நாள் கிரிக்கெட் தொடரை மாத்திரமன்றி டெஸ்ட் கிரிக்கெட் தொடரையும் கைப்பற்றி வெற்றி வாகை சூடியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி இந்திய அணி பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டது.

இந்திய கிரிக்கெட் அணிக்கு பாகிஸ்தானில் வரலாறு காணாத பாதுகாப்பு வழங்கப்பட்டதோடு மகத்தான வரவேற்பும் அளிக்கப்பட்டது.

அத்தோடு இந்திய அணிக்கு பாகிஸ்தான் அதிபர் பர்வஷ் முஷாரப் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் விருந்தளித்து கௌரவித்தனர்.



ஒருநாள் தொடருக்கான வெற்றிக் கிண்ணத்துடன் சௌரவ் கங்குலி

இந்த ஒரு நாள் ஆட்டங்களைக்காண இந்தியாவில் இருந்து, ராகுல் காந்தி, பிரிங்கா போன்ற பிரபலங்களுடன் பல சினிமா பிரபலங்களும் பாகிஸ்தானுக்குப் படை எடுத்தனர். பாகிஸ்தான் அதிபர் பர்வஷ் முஷாரப்கூட இரண்டு ஆட்டங்களை நேரடியாக மைதானத்துக்கு சென்று பார்த்தார்.

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் முதலாவது ஒருநாள் ஆட்டம் மார்ச் 13 ஆம் திகதி கராச்சியில் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 5 ஓட்டங்களினால் – மயிரிழையில் – வெற்றி பெற்றது.

இரண்டாவது ஒருநாள் ஆட்டம் ராவல் பிண்டியில் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் அணி 12 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து பெஷாவாரில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் 2 – 1 என்ற ரீதியில் முன்னிலையைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து வாழ்வா, சாவா என்ற நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணி 5 விக்கெட்டினால் வெற்றி பெற்று தொடரை மிக விறுவிறுப்பாக்கியது.

இறுதியாக மார்ச் 24 ஆம் திகதி லாகூரில் நடைபெற்று இறுதி ஆட்டத்தில் இந்திய அணி 40 ஓட்டங்களினால் இலகு வெற்றி பெற்று ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.

இந்திய – பாக் அணிகளுக்கிடையில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் முல்தானில் நடைபெற்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானில் தனது முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இதில் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி காயம் காரணமாக விளையாடாததால் ராகுல் டிராவிட் தலைமையிலேயே இந்திய அணி ஆடியது. இதன் மூலம் பாக்.மண்ணில் இந்தியாவுக்கு முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பெற்றுக்கொடுத்த பெருமையை ராகுல் டிராவிட் சுவீகரித்துக் கொண்டார். அத்துடன் இந்த ஆட்டத்தில் வீரேந்தர் ஷெவாக் 309 ஓட்டங்களைப்பெற்றதன் மூலம் 300 ஓட்டங்களைக் கடந்த முதலாவது இந்தியர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றார். இந்த ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸாலும் 52 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றது.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம், ஏப்ரல் 5 ஆம் திகதி லாகூரில் ஆரம்பமானது. இதில் அபாரமாக ஆடிய பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று டெஸ்ட் தொடரை 1– 1 என்ற ரீதியில் சமபடுத்தியது.

இதன் மூலம் மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி டெஸ்ட் ஆட்டம் முக்கியத்துவம் பெற்றது.

மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஏப்ரல் 18 ஆம் திகதி லாகூரில் ஆரம்பமானது. மிகவும் விறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்பட்ட மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில்



ஒருநாள் தொடரின், தொடர் நாயகன் விருதுடன் இன்ஸமாம்

இந்திய அணி ஓர் இன்னிங்ஸ், 131 ஓட்டங்களினால் இலகு வெற்றி பெற்றது இதன் மூலம் மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரையும் இந்திய அணி 2 –1 என்ற ரீதியில் கைப்பற்றியது.

ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி வெற்றி பெற்றிருந்தாலும், தொடரை நேர்த்தியாக – எதுவித பிரச்சினையுமின்றி – நடத்தி முடித்திருப்பது பாகிஸ்தானுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

அத்தோடு இந்த நல்லெண்ண கிரிக்கெட் தொடரின் நோக்கமான – இரு நாடுகளின் உறவையும் பலப்படுத்தும் – திட்டம் இதன் மூலம் நிறை வேறியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

KELON RENT A CAR

Just Registered
Comfortable

Japanese Cars For
Long Lease/ Rent
For Corporate
Clients.



Contact No: 2372695
Contact Person: Madava

# புலிகளை ஆதரித்துப்பேசியது தவறல்ல
# பொடா மறு ஆய்வுக்குழு வரலாற்றுத் தீர்ப்பு

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வைகோ, 2002இல் மதுரை திருமங்கலம் அருகே கூட்டமொன்றில் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக அவரை பொடா சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியாது என பொடா மறு ஆய்வுக்குழு வரலாற்றுச்சிறப்பு மிக்க தீர்ப்பொன்றை வழங்கி இருக்கிறது.

ஜெயலலிதா அரசு அரசியல் எதிரிகள் மீது பழி தீர்க்க பொடா சட்டத்தைப்பிரயோகிப்பது இதன் மூலம் நிரூபணமாகியுள்ளதாக தி.மு.க கூட்டணி குற்றம் சாட்டியுள்ளது.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை இது பெரும் பின்னடைவாகும். ம.தி.மு.க மத்தியில் பி.ஜே.பி அரசில் பங்காளியாக இருந்தும் பொடா சட்டத்தின் கீழ் வைகோ சிறையிடப்பட்டபோது பி.ஜே.பி அரசு கடைசி வரை மௌனம் காத்தது. தி.மு.க.வின் தொடர்ச்சியான எதிர்பார்ப்பால் வேறு வழியின்றி பொடா சட்டத்தின் கீழான வழக்குகளின் நியாயத் தன்மையை ஆய்வு செய்ய மத்திய அரசு பொடா மறுஆய்வுக்குழுவை அமைத்தது. நாடாளுமன்றில் அக்குழுவுக்கு சிறப்பு அதிகாரம் வழங்கும்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது. வைகோ மீதான பிரதான வழக்கை ஆய்வு செய்ய வழக்கின் விவரங்களைத் தருமாறு குழு கோரியபோது ஜெயலலிதா அரசு வேண்டுமென்றே காலங்கடத்தி இழுத்தடித்தது. பின்புகுழுவின் வன்மையான கண்டனத்தை அடுத்து வழக்கு விபரங்களை தமிழக அரசு அனுப்பி வைத்தது.

இதற்கிடையில் வழக்கை மறு ஆய்வு செய்ய பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு அதிகாரம் போதாது என எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றில் தமிழக அரசு மனுச்செய்தது. நீதிமன்றம் அந்த எதிர்ப்பை நிராகரிக்கவே மறு ஆய்வுக்குழு துரித கதியில் தனது பரிசீலனையை ஆரம்பித்து இப்போது முடிவை வெளியிட்டுள்ளது. ''புலிகளை ஆதரித்து வெறுமனே பேசுவது தவறாகாது மேலும் ஈழத்தமிழரின் துயர் துடைப்புக்கு ஆதரவாக குரல் கொடுப்பது புலிகளை ஆதரிப்பதாக மாட்டாது'' என்றும் ஆய்வுக்குழு தீர்ப்புக்கூறியுள்ளது. வைகோ, நெடுமாறன் உள்ளிட்டவர்களுக்கும் தமிழகத்திலுள்ள ஈழ அனுதாபிகளுக்கும் இது பெருத்த நிம்மதியைத் தந்துள்ளது.

தவிர தி.மு.க கூட்டணி தீவிரவாத கூட்டணி என்ற ஜெயலலிதாவின் கூச்சலை எதிர்கொள்ள இது தெம்பை ஊட்டும். நீதித்துறையே வைகோவின் நிலைப்பாட்டை ஆதரிப்பதாக இருப்பது வைகோவுக்கு மேலதிக பலமாகும்.

தமிழகத்தில் கருணாநிதி, மற்றும் வைகோவின் கூட்டங்களுக்கு மக்கள் லட்சக்கணக்கில் திரண்டுவருகின்றனர். பி.ஜே.பியின் கோட்டையான கோயமுத்தூரில் கடந்த வாரம் கருணாநிதியின் கூட்டத்தில் திரண்ட மக்கள் கூட்டம், அ.தி.மு.க—பி.ஜே.பி கூட்டணிக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. சோனியாவை பிரதமராக்குவோம் என கருணாநிதி திடமாக கூறுவது தமிழக வாக்காளரை அத்தகைய நிலைப்பாட்டின் பக்கம் படிப்படியாக ஈர்த்து வருகிறது.

சோனியா பிரதமரானால் 356ஆவது சட்டத்தை கடைசியாக ஒருமுறை பயன்படுத்தி ஜெயலலிதா அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என ராமதாஸ் கூறியுள்ளார். 356ஆவது சட்டம் பயன்படுத்தப்பட தி.மு.க கடந்த காலங்களில் எதிர்ப்புத் தெரிவித்தாலும் கருணாநிதிக்கு வயதாகிவிடும் நிலையில் சோனியாவின் அரசு மூலம் ஜெயலலிதாவை வீட்டுக்கு அனுப்பி கருணாநிதியை முதல்வராக்கும் சந்தர்ப்பத்தை தி.மு.க தவறவிட விரும்பாது. காங்கிரஸ் அரசுகளே 356 ஆவது சட்டத்தை பயன்படத்தி தி.மு.க அரசுகளை இருமுறை கலைத்ததினால் அச்சட்டம் மீதான தி.மு.கவின் வெறுப்பு நியாயமே என்பது வேறு கதை.

இதற்கிடையில் போபர்ஸ் பீரங்கிப்பேர ஊழலில் ராஜீவ் குடும்பத்துக்கு தொடர்பு உள்ளதாக பத்திரிகை ஒன்றில் வெளியான புதிய கதை தேர்தல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை தூண்டியுள்ளது.

## பக்கத்து வீடு

இதற்கு சோனியா பதிலளிக்க வேண்டுமென்றும் சி.பி.ஐ (மத்திய புலனாய்வுத் துறை) இதை விசாரிக்கும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

15 ஆண்டுகள் கடந்த விசாரணையின் பின்பு சமீபத்தில் தான் ஊழலில் ரஜீவுக்கு தொடர்பில்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும்போது வெறும் ஒரு பத்திரிகை அறிக்கையை வைத்து வாஜ்பாய் கருத்துக் கூறியதை அடுத்து சர்ச்சை கிளம்பியுள்ளது.

15 ஆண்டுகள் அதுவும் அதில் கடைசி 6 ஆண்டுகள் பி.ஜே.பி ஆட்சியின் கீழ் சி.பி.ஐ என்ன செய்தது என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

இதனையடுத்து பி.ஜே.பி பின்வாங்கி விட்டது. குற்றச்சாட்டுக்கும் தமக்கும் தொடர்பில்லை என அத்வானி கூறியுள்ளார்.

இதே போல சோனியா குமாஸ்தாவாக இருக்கக் கூட தகுதி அற்றவர். ராகுல் டிரைவராக இருக்கக் கூட தகுதி இல்லாதவர் என குஜராத் முதல்வர் மோடி கூற அதை அத்வானியே தரக்குறைவான பேச்சு எனக்கண்டிக்க மோடி மன்னிப்புக்கோர என பி.ஜே.பி தலைவர்களின் கண்மண் தெரியாத பேச்சுக்கள் தொடர்கின்றன.

இதனால் பி.ஜே.பி மீதான மதிப்பு கற்ற வாக்காளர்களுக்கு குறைந்து வருகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டபோது பி.ஜே.பி வெல்லும் என்று இருந்த நிலை தற்போது சற்றே மாற்றம் பெறுவதாக தெரிகிறது. லக்னோவில் பிரதமர் தொகுதியில் இலவச சேலை வழங்கப்புறப்பட்டு கூட்ட நெரிசலில் 25 பெண்கள் உயிரிழந்தது பி.ஜே.பிக்கு பெரும் நெருக்கடியாகியுள்ளது.

தேர்தல் விதிகளை மீறி சலுகை வழங்கிய குற்றச்சாட்டு வேறு எழுந்துள்ளது. இது தவிர மத்திய மந்திரியும் முன்னாள் டில்லி முதல்வருமான ஷாஹிப் சிங் வர்மா மீதான நிலக்கரி ஊழல் குற்றச்சாட்டு பி.ஜே.பிக்கு புதிய தலையிடியாகி உள்ளது. பி.ஜே.பியின் கோட்டையான டில்லியில் அண்மையில் நடந்த தேர்தலில் பி.ஜே.பியால் காங்கிரஸ் ஆட்சியை அகற்ற முடியாது போனது. இதனால் டில்லி பி.ஜே.பி தலைவர் மதன்லால் குரானர ராஜஸ்தானுக்கு ஆளுனராக அனுப்பி வைக்கப்பட்டுவிட்டார். இந்நிலையில் மூத்த தலைவரான வர்மா ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானதால் டில்லியில் பி.ஜே.பி பிரசாரம் பெரிதும்பாதிக்கப்படலாம்.

எஸ்.சுரேந்திரஜித்

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்'**
**19—04—2004 முதல் 25—04—2004 வரை**

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் ராகு | சுக்கிரன் | செவ்வாய் சனி |
| | செவ்வாய் மிருகசீரிடம்<br>சுக்கிரன் மிருகசீரிடம்<br>புதன் ரேவதி<br>சூரியன் அச்ச+பரணி<br>குரு பூரம்<br>சனி திருவாதிரை | | |
| | | | குரு |
| | | கேது | |

சித்திரை 14முதல் சித்திரை 20 வரை

சந்திரன் மீனம் முதல் இடபம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1**

ராசி அதிபன் செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. ஆனால், சனியுடன் சேர்ந்து இருப்பது நல்லதல்ல. இருப்பினும் செய்வாய் தன் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்ல உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2, 7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7 இல் கேது இருப்பது குடும்ப அமைதியைப் பாதிக்கலாம். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும் (10, 11) உரிய சனி மூன்றில் இருப்பது தொழில் துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். ராசியில் ராகு இருப்பது நல்லதல்ல ஆனால் குருவின் இருப்பும் குருவின் பார்வையும் ராசிக்கு கிடைப்பது நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிநாதன் சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பது நல்லது. மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது மத்திம பலனே செய்யும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 5) உரிய புதன் 11 இல் நீசமாக இருப்பதாலும் இரண்டாம் வீட்டில் சனி செவ்வாய் இருப்பதாலும் கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது. நாலுக்குரிய சூரியன் 12 இல் இருந்தாலும் உச்சமாக இருப்பது நல்லது. ஆனால், ராகு அங்கு இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7, 12) உரிய செவ்வாய் இரண்டில் சனியோடு இருப்பது பிரச்சினையே. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய சனி இரண்டில் செவ்வாயோடு இருப்பது தொழில்துறை பாதிக்கலாம்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1, 4) உரியபுதன் பத்தில் நீசமாக இருப்பது மத்திமபலன் தான். ஆனால், தன் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்ல பலனை செய்யலாம். ஆனால், ராசியில் சனி செவ்வாய் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பது கையில் பணம் இருக்கும். நாலாம் வீட்டை செவ்வாயும் 4 ஆம் அதிபனை சனியும் பார்ப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7, 10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எனினும் 7 ஆம் வீட்டை சனி, செவ்வாய் நோக்குவதால் குடும்பத்தில் அமைதி இருக்காது.

**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் ராசி உட்பட இரண்டாம் மூன்றாம் இராசிகளில் சஞ்சாரம் செய்வது நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டுக்குரியவர் பத்தில் இருப்பினும் இரண்டில் குரு இருப்பதால் கையில் பணம்இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்கள் உதவுவர். மூத்த சகோதரம் உதவக் கூடிய நிலையில் இருப்பர். பிரயாண வாய்ப்பு உருவாகும். 7 இற்குரிய சனி 12 இல் செவ்வாயோடு இருப்பது திருமண வாய்ப்பை பாதிக்கவே செய்யும். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய செவ்வாய் 12 இல் உச்சமாகஇருந்தாலும், சூரியன் 10 இல் இருப்பதாலும் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் ஒன்பதில் உச்சமாக இருப்பது நல்லது. ஆரம்பத்தில் கேதுவின் நட்சத்திர சாரத்தில் இருந்தாலும் பின்பு சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் சஞ்சாரம் செய்வது நல்ல பலனைசெய்யலாம்.ஆனால், குரு ராசியில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம்பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டு பதினொன்றுக்குரிய புதன் 8 இல் இருப்பது கையில் பணம் இருக்காது. நண்பர்களால் செலவு ஏற்பட இடம் உண்டு. (4, 9) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். ஆனால், செவ்வாய் சனி சேர்க்கை நல்லதல்ல. 7க்குரிய சனி 11 இல் இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10 இல் சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1, 10) உரிய புதன் 7 இல் இருப்பது நல்லது. ஆனால், புதன் நீசமாக இருப்பதாலும் சனியின் பார்வை பெறுவதாலும் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். ஆனால், புதன் தன் நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. (2, 9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதா நலம். அதிஸ்டம் இருக்கும். (4, 7) உரிய குரு 12 இல் மறைவது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 10 இல் செவ்வாய், சனி இருப்பது தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்கும். வர்த்தகத்துறையாயின் அனுகூலம் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

(1, 8) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பது நல்லது. மேலும் செவ்வாயின் சாரம் பெற்று இருப்பது மத்திம பலனைச் செய்யும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 7) உரிய செவ்வாய் 9 இல் இருப்பதால் நல்லது என்றாலும் சனியும் அங்கு இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இருப்பினும் குரு நல்ல நிலையில் இருப்பதால் பலனில் மாறுதல் தென்படலாம். (4, 5) உரிய சனி 9 இல் செவ்வாயோடு சேர்ந்து இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தொழில் ஸ்தாபனம் தீய கிரகங்களால் தாக்கமுறாமல் இருப்பது தொழில்துறை முன்னேறும்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 8 இல் சனியோடு இருப்பது நல்லதல்ல. ஆனால், தன் சொந்த நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2, 5) உரிய குரு 10 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3, 4) உரிய சனி 8 இல் இருப்பது நல்லதல்ல. அங்கு செவ்வாய் இருப்பதும் நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7, 12) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில்அமைதி நிலவும். 10 இற்குரிய சூரியன் உச்சமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். அரச உதவி கிடைக்கும்.

**தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1, 4) உரிய குரு 9 இல் இருப்பது நல்லது. மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். தாய் நலம். (2, 3) உரிய சனி 7 இல் செவ்வாயோடு இருப்பதால் கையில் பணம் இருக்காது. (7, 10) உரிய புதன் 4 இல் இருப்பது நல்லது. ஆனால், நீசமாக இருப்பது நல்லபலனைக் குறைக்கலாம். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால், சனி, செவ்வாய் 7 இல் இருப்பது குடும்ப அமைதியைக் குலைக்கலாம். ஆனால், குரு 9 இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். ராசியை சனி, செவ்வாய் பார்ப்பது நல்லதல்ல.

**மகரம்:உத்தரடாம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,**

(1, 2) உரிய சனி 6 இல் இருப்பது நல்லது, ஆனால் ராகுவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது கூடாது. 6 இல் செவ்வாய் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ஆனால், கையில் பணம் இருக்காது. (4, 11) உரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் செலவு ஏற்பட இடமுண்டு. 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. ஆனால், குரு 8 இல் மறைவது நல்லதல்ல. திருமண வாய்ப்பை பாதிக்கலாம். தொழில் துறைக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குருமறைவது ஒரு குறைதான்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1, 12) உரிய சனி 5 இல் இருப்பது நல்லதல்ல. ஆனால், ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 11) உரிய குரு, 7 இல் இருப்பது கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. நண்பர்களால் உதவி இருக்கும். (4, 9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பது பெற்றோருக்கு நல்லது அதிஸ்டம் இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். 7 க்குரிய சூரியன் உச்சமாக இருப்பது 7 இல் குரு இருப்பதும் திருமண வாய்ப்பு உண்டு. 10 க்குரிய செவ்வாய் 5 இல் இருப்பதால் தொழில்துறை பாதிக்கலாம். சனியும் அங்கிருப்பது நல்லதல்ல. குரு ராசியைப் பார்ப்பது நல்ல பலனைக் கொடுக்கும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. ஆனால், சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2, 9) உரிய செவ்வாய் 4 இல் சனியோடு இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. (4, 7) உரிய புதன் ராசியில் இருப்பது நல்லது ஆனால் நீசமாக இருப்பது நல்ல பலனைக் குறைக்கலாம். வீடு வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு மறைவது நல்ல பலனைப் பாதிக்கலாம். 10 ஆம் வீட்டை செவ்வாய் சனி பார்ப்பது தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. ராசியைச் சனி பார்ப்பது நல்லதல்ல.

# குதிரைகள் ஓடிய பின்பு லாயத்தை மூடும் மூளைசாலிகள்

குதிரைகள் ஓடிய பின்பு ஒருவன் லாயத்தை மூடவில்லையே என்று கவலைப் பட்டானாம். கவலைப்பட்டதோடு நின்றுவிட வில்லை. ஓட்டமாக ஓடிப்போய் பெரிய பூட்டாகவும் போட்டு லாயத்தை பூட்டியும் விட்டானாம். எப்படி இருக்கு இந்த மூளைசாலியின் போக்கு.

இதே மாதிரித்தான் இருக்கின்றது மலையக அரசியல்வாதிகளின் போக்கும்.

எந்த ஒரு தேர்தல் வந்தாலும் சரி அப்போது இந்த அரசியல்வாதிகள் பாடும் ஒப்பாரி ஒன்று இருக்கின்றது. அதாவது, 'தோட்டத் தொழிலாளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதியப்படவில்லை, பல ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.' என்பதே அது.

''தோட்டத் தொழிலாளர்களுக்கு வந்த வாக்காளர் அட்டைகள் ஆயிரக்கணக்கில் தபால்கந்தோர்களில் தேங்கிக்கிடக்கின்றன.''

''தோட்டக்காரியாலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட வில்லை.''

இப்படியான குற்றச்சாட்டுகளைக் கேட்டுக் கேட்டு காதுகளும் வலிக்கின்றன. ஆனால், இந்த மலையக அரசியல் வாதிகளுக்கு மட்டும் வாய் வலிக்கின்றதோ என்னவோ தெரிய வில்லை.

இவர்களைக் குற்றம் சுமத்துவதிலும் அர்த்தம் இல்லைதான். ஏன் தெரியுமா? இவர்கள் முன்பு சொன்னதைப் பின்பு மறந்து விடுவார்களே!

சென்ற முறை தேர்தலின் போது இதே குற்றச்சாட்டுகளையும், பழைய பல்லவியையும் தானே பாடினோம் என்பதை மறந்து விட்டு ஏதோ இப்போது தான் புதிதாகக் கண்டதுபோல் அலட்டிக் கொள்கின்றனர் இவர்கள்.

தமிழர்களின் பெயர்களை வெட்டவும், அவர்களை வாக்களிக்க விடாமல் தடுக்கவும் பலயுக்திகள் கையாளப்படுவது வழமை. இது காலம் காலமாக நடந்து வரும்ஒரு சதிச்செயல்.

இதைத் தடுக்க என்ன செய்வது ? இதற்குப் பரிகாரம் என்ன ? மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன? என்பவற்றை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை விட்டு விட்டு சும்மா சத்தம் போடுவதாலும், பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதாலும் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

இவற்றைத் தடுப்பதற்குத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு வருடத்திலும் ஜூன் மாதம் வாக்காளர் இடாப்புகள் புதுப்பிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு குடும்பத் தலைவரிடமும் அதற்கான விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. தலைவன், தலைவி உட்பட 18வயதை அடைந்த அனைவரின் பெயர்களையும் பதிந்து தமது விண்ணப்பப்படிவங்களை கிராமசேவகரிடம் தவறாமல் ஒப்படைக்க வேண்டும் .இது தான் சட்டமும் , வழமையும் கூட.

ஆனால், தோட்டப்புறங்களில் நடைபெறுவது என்ன? கிராம சேவகரும் , சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இந்த விண்ணப்பப்படிவங்களுடன் தோட்டங்களுக்கு வருகின்றனர். வசதியானதும் அடிக்கடி தேநீரும், வெற்றிலை சிகரெட்டும் பெறக்கூடியதுமான ஒரு வீட்டைப்பார்த்து அமர்ந்து கொள்கின்றனர்.

இத் தகவல் கிடைத்தவர்கள் தமது அடையாள அட்டைகளுடனும், பிரஜா உரிமை சான்றிதழ்களுடனும், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்களுடனும் சென்று வாக்காளர் இடாப்புகளில் பதிந்து கொள்கின்றனர்.

தாய்தந்தையரின் பெயர் இடாப்பில் இருந்தும், பிள்ளைகளின் பெயர்கள் வரவில்லை என்றால் அப்பிள்ளைகளின் பெயர்கள் பதியப்படுவதில்லை. பிறப்புச் சான்றிதழ் இருந்தும் தேசிய அடையாள அட்டை இல்லை எனப் பெயர் பதிய மறுக்கப்படுகின்றது.

தொழில் நிமித்தம் தோட்டங்களை விட்டு வெளியே சென்றிருப்பவர்களின் பெயர்கள் பதியப்படுவதில்லை.

கிராம சேவகர் தோட்டங்களுக்கு வந்த போது தோட்டத்தில் ஆட்கள் இல்லை எனக் காரணம் காட்டித் தமிழர்களின் பெயர்கள் வெட்டப்படுகின்றன. இதை தட்டிக் கேட்க ஆள் இல்லை.

வாக்குகள் குறைந்து விட்ட போது மட்டும் வரிந்துகட்டிக் கெண்டு வருகிறார்கள் இந்தத் தலைவர்கள் .கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் இந்த வாக்காளர் பதிவு விண்ணப்பங்கள் ஒவ்வொரு வீட்டுத் தலைவரிடமும் ஒப்படைக்கப்படுவது வழக்கம். இதேபோன்று, ஏன் தோட்டத் தொழிலாளர்களிடமும் ஒப்படைக்கக் கூடாது?

இந்த அரசியல்வாதிகளும், தொழிற்சங்க வாதிகளும் முன்நின்று இப் படிவங்களை வாங்கி வீடு வீடாகச் சென்று எல்லோருடைய பெயர்களையும் பதிந்து கொடுக்க முடியாதா என்ன?

வீடுவீடாக வாக்குப்பிச்சை கேட்டுச் செல்பவர்கள். அந்த வாக்காளர் களின் பெயர்களைப்பதிய வீடுவீடாகச் சென்றால் அவர்களுடைய கௌரவம் கெட்டுவிடுமா என்ன? வாக்குகளின் மீதுள்ள அக்கறை இந்த வாக்காளர்கள் மீது இல்லை . இத்தலைவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அனைவரது பெயர் களையும் வாக்காளர்இடாப்பில் பதிந்து கொள்வதைஉறுதி செய்ய வேண்டும் .இதைச் செய்யமாட்டார்களே இந்தத் தலைவர்கள் . அதைச் செய்யும் யோக்கியதையும் இவர்களுக்கு இல்லை.

வாக்காளர் அட்டைகள் தபால் கந்தோர்களிலும்,தோட்டக் காரியாலயங்களிலும் தேங்கிக்கிடப்பதாகப் புகார் செய்கின்றீர்களே! அதற்கு மாற்று நடவடிக்கை இல்லையா?

நிச்சயமாக உண்டு. நீங்கள் அங்கீகரிக்கப் பட்ட தலைவர்கள். ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளர்கள். நேரடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குப் போய்உயர் அதிகாரிகளைக் கண்டு பேசி வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கலாம். இவ் விடயத்தில் அவர்களுக்கு உதவலாம். இது அதிகாரிகளுக்கு உதவியாக அமையும். உங்களுக்கும் வாக்குகள் கிடைக்கும்.

இதைச் செய்யாமல் ஒப்பாரி வைப்பதில் பயன் ஏற்படப்போவதில்லை. இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. உள்ளூராட்சிச் சபைகளுக்கும், மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. அப்போது வாக்காளப்பெரு மக்களின் உதவி உங்களுக்குத் தேவை.

இப்போதே தயாராகுங்கள். உழைக்கும் தொழிலாளர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிய உரிய நடவடிக்கையில் இறங்குங்கள். அறிக்கை விடுவதை விட்டு செயலில் இறங்குங்கள். அதுதான் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லது.

•••






## டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் அந்தக் கல்லூரியின் அலுவலகத்துக்கு திடீரென சென்றார். ஏதோ வேலையாக இருந்த கல்லூரி அதிபருக்கு சற்று அதிர்ச்சிதான்.

''வணக்கம் மேடம்'' என்று கூறிக் கொண்டே அலுவலகத்துக்குள் நுழைந்தார். தணிகாசலம் அண்ணன்.

'' வணக்கம் மிஸ்டர் தணிகாசலம் எப்படி சுகமாக இருக்கின்றீர்களா? எங்கே இந்தப் பக்கம் ஆளையே காணமே, இப்படி அமருங்கள் '' என்று குசலம் விசாரித்தார் அதிபர்.

'' ஆமாம் மேடம் ஒரு வேலையா, இரண்டு வேலையா எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டுமே!'' என்றார் தணி அண்ணன்.

'' ஆமாம் ஒரு பக்கம் அரசியல், மறுபக்கம் சமூக சேவை. அத்தோடு கடமையும் பார்க்க வேண்டும். உங்களைத் தவிர வேறு யாராலும் இப்படி செயற்பட முடியாது'' என ஐஸ் வைத்தார். அதிபர்.

'' என்னாங்க மெடம் செய்ய? எல்லாரும் உரிமை யோடவாராங்க அதை எப்படித் தட்டிக் கழிக்க முடியும்? அத்தோட ஊர்வேலை பார்க்கா விட்டால் நமக்கும் தூக்கம் வராது '' என்றார். தணி அண்ணன்.

'' அது சரி நீங்க ஏதும் காரணம் இல்லாமல் வர மாட்டீர்களே ஏதாவது விசேஷமா, அல்லது அவசரமா? என்றார் அதிபர் மெதுவாக.

'' அப்படி ஒன்றும் அவசரம் இல்லை மேடம். ஸ்கூல் பக்கம் வந்தும் பல மாதங்கள் ஆகி விட்டன. அது தான் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். '' என்றார் தணி அண்ணன்.

இப்போது அதிபரின் முகத்தில் ஒரு திருப்தி விபரீதமாக எதையும் கேட்டு விடப் போகின்றாரோ என்ற பயம்சற்றுத்தெளிந்தது. உடனே ஆபீஸ்பையனை அழைத்து 'கூல்ரிங்' கொண்டு வரும்படி ஓடர் போட்டார்.

''இது எல்லாம் எதுக்கு மேடம், இப்பதான் வீட்டில் இருந்து வாறன், ஒன்றும் வேண்டாம்'' என்றார் தணி அண்ணன்.

ஆபீஸ் பையன் லேசுப் பட்டவனா என்ன? குளிர் பானப் போத்தல்களைக் கொண்டுவந்து விட்டான்.

'' இந்தாங்க , வெயில் நேரம் தானே பருகுங்கள்'' என்று ஒரு போத்தலை தணி அண்ணனிடம் கொடுத்து விட்டு தானும் ஒன்றை எடுத்துக் கொண்டார் அதிபர்.



'' நன்றி மேடம்'' எனக் கூறிய தணி அண்ணன், ''மேடம் இந்த வருடம் நம்ம பிள்ளைகளோட பரீட்சை ரிசல்ட்டை கொஞ்சம் பார்க்கலாமா?'' என்றார்.

இப்போது குடித்த குளிர்பானம் சுடுதண்ணீர் போல் சுட ஆரம்பித்தது மேடத்துக்கு. என்னடா, எதைப்பற்றிப் பேசக்கூடாது என்று நினைத்தோமோ அதைப்பற்றியே கேட்டு விட்டாரே என்று அதிர்ச்சி அடைந்தார் அதிபர்.

'' அண்ணன் நீங்கள் பார்க்காம வேறு யார் பார்ப்பது? தம்பி எங்க வைஸ் பிரின்சிப்பல், அவரைக் கூப்பிடு '' என்றார் அதிபர்.

ஆபீஸ் பையனும் எட்டிப் பார்த்துவிட்டு ''மேடம் வைஸ் பிரின்சிபல் பள்ளிக்குப் போயிட்டார் மேடம்'' என்று டபிள் மேடம் போட்டான்.

''அப்படியா பரவாயில்லை, அண்ணே ரிசல்ட் எல்லாம் உப அதிபரிடம்'' என்று இழுத்தார் அதிபர்.

''பரவாயில்லை மேடம், வழமையான நோட்டீஸ் போட்டில் போடுவீங்க தானே அதைப்பார்த்துக் கொள்கிறேன்'' என எழுந்தார் தணிஅண்ணன்.

அப்போது அதிபரின் வயிற்றில் புளி கரைந்தது. இந்த முறை நோட்டீஸ் போர்ட்டிலும் ரிசல்ட் போடவில்லை.

'' என்னாங்க மேடம் நோட்டீஸ்போர்ட்டிலும் காணோம். அப்படீன்னா பிள்ளைகள் சொன்னதும் சரிதான் போல '' என ஆத்திரப் பட்டார்.

'' அமைதியா இருங்க தணி அண்ணன் இதில ஆத்திரப்பட ஒன்றும் இல்லை. எல்லாரும் நல்லாத்தான் பரீட்சை எழுதினாங்க '' என்றார் அதிபர்.

'' பரீட்சை நல்லாத் தான் எழுதினாங்க. ஆனால் அடித்தது எல்லாமே குண்டு, அப்படித்தானே '' என்றார் தணி அண்ணன்.

'' அண்ணன் கோபப்படக்கூடாது. இந்த ஏரியாவிலே முதல் ரிசல்ட் எடுத்தது நம்ப ஸ்கூல் தானே '' என்றார் அதிபர்.

'' என்னா மேடம் கதை உடுரீங்க. முதல் தர ரிசல்ட் எடுத்தது அப்ப . இப்ப என்னடான்னா மாட்டு வால் மாதிரி இல்லவளருது. வரவர மாமி கழுதையான கதையா இல்ல இருக்கு'' என சத்தம் போட்டார் தணி அண்ணன்.

''அண்ணன் நாங்களும் கஷ்டப்பட்டுத் தான் படிப்பிக்கிறோம். என்ன செய்வது? டியூசன் போற பிள்ளைகள் பாஸ் பண்ணி இருக்காங்க'' என வாய் தவறிக் கூறி விட்டார் மேடம்.


'' உண்மைதான் மேடம். இப்ப படிப்பை எல்லாரும் பணம் பண்ணுறதுல தானே இருக்காங்க. இந்தப் பள்ளிக்கூடமானமே போகுது. அதுனால தான் பரீட்சை ரிசல்ட்டைக் கூட பைல் உள்ளுக்கு மறைச்சி வைச்சி சேர் மார் மட்டும் பார்க்கும் நிலையில இருக்கு '' என்றார் சூடாக தணி அண்ணன்.

'' என்ன செய்வது மேடம், எல்லாம் இந்த வெட்கம் கெட்ட பாடசாலை அபிவிருத்தி சபையால் வந்தது . பட்டம் பதவிக்கு மட்டும் சண்டை போட்டுக்கிறாங்க. அடிச்சு மண்டையை உடைக்கிறாங்க . ஆனால், இப்ப பாடசாலை நாசமாப் போறதைப்பற்றி கவலைப்பட நாதி இல்லை'' என்று கூறிக் கொண்டே எழுந்து சென்றார் தணி அண்ணன்.


யாரைச் சொல்லி என்ன பயன்?

எல்லாருமே சேர்ந்து ஸ்கூல ஒன்றும இல்லாம ஆக்கிப்புட்டாங்க . பாவம் இந்த பாடசாலையை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

# இலவச சேலைக்காக உயிரை விட்டவர்கள்



"பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்" என்பது முதுமொழி இலவசம் என்று வழங்கினால் எதையும் பெற மக்கள் தயார்.





இலவசமாக எங்கே என்ன கொடுக்கிறார்கள் என்றே காத்துக் கிடக்கத் தொடங்கி விட்டார்கள் மக்கள். இலவசமாக எதை வழங்கினாலும் வாங்க கியூவில் நிற்பார்கள். இலவசமாக வழங்குவதை வாங்கினால் பரவாயில்லை. அதன் பொருட்டு உயிரையுமல்லவா விடுகிறார்கள்.

கடந்த 12 ஆம் திகதி இந்தியாவின் லக்னோவில் இலவச சேலை வழங்கும் விழாவில் சிக்கி 25 பெண்கள் பரிதாபமாக பலியாகினர்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உத்தரப்பிரதேச மாநில தலைநகர் லக்னோ தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்குப் போட்டியிடுகிறார். உத்தரப்பிரதேச மாநில பாரதீய ஜனதா தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான வால்ஜி தாண்டன், வாஜ்பாயின் தேர்தல் முகவராக பணிபுரிந்து வருகிறார்.

டொல்ஜி தாண்டன் கடந்த 12 ஆம் திகதி தனது 70 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இந்த விழாவை முன்னிட்ட ஏழைப் பெண்களுக்கு இலவச சேலை வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழா மாநகர் பகுதியில் இருக்கும் சந்திரசேர் ஆசாத்பூங்கா மைதானத்தில் இடம் பெற்றது.

இவ்விழா பற்றிய தகவல் பரவியதும் ஏராளமான பெண்கள் கைக் குழந்தைகள் சகிதம் அந்த மைதானத்தில் குவிந்தனர். நேரம் செல்லச் செல்ல கூட்டம் அலைமோதியது.

ஏறத்தாள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டதால் நெரிசல் ஏற்பட்டது. விழாவில் கலந்து கொண்ட வால்ஜிதாண்டன் மற்றும் முக்கிய தலைவர்கள் பிற்பகல் 2.30 மணியளவில் காரில் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

வெளிவாயில் அருகே சென்று சேலைகளை வாங்கிச் செல்லலாம் என்று அப்போது அறிவிக்கப்பட்டதால் கூட்டத்தின் ஒரு பகுதியினர் சேலைகளை பெறுவதற்காக முண்டியடித்த முன்னேறிச் சென்றனர்.

இதனால் நெரிசலில் சிக்கி பலர் கீழே விழுந்தனர். பின்னால் வந்தவர்கள் அவர்களை மிதித்துக் கொண்டே சிதறி ஓடினார்கள். பாதுகாப்புப் பலப்படுத்தப் படாததால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் குழந்தைகள் உட்படப் பல பெண்கள் நெரிசலில் சிக்கி மூச்சுத் திணறியும், கீழே விழுந்து மிதிபட்டும் உயிரி இழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

25 பெண்கள் இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தனர். 20 க்கும் அதிகமானோர் காயமடைந்து அருகில் உள்ள மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

விழா நடைபெற்ற பூங்காவுக்கு ஒரே ஒரு குறுகலான நுளைவாயில்தான் இருந்தமையால் நெரிசல் அதிகமாகியது. மக்கள் உடனடியாக அந்த நுழைவாயில் வழியாக வெளியேற முடியவில்லை. மேலும் மைதானம் குண்டும் குழியுமாக இருந்தமையால் பலர் தடுக்கி விழுந்து மிதிபட்டனர். இதுவே பலர் இறந்ததற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

-ஆஷா-


## இப்பொழுது வெள்ளவத்தையில்

சுடர் ஒளி THE SUDAR OLI · உதயன் கருமபீடம்

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C, 6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் நிலையத்துக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பரக் கருமபீடத்திலும் கையளிக்கலாம்.


மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை,
கொழும்பு – 14.
011 4734401 – 3, 011 2399666 – 70

வெள்ளவத்தையில்
தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம்
011 4734401 – 3, 011 2399666 – 70








அக்ஷய திருதியைக்கு

அக்ஷய திருதியை - இந்த வருடத்தின் மிக மங்களகரமான நாள் வரும் ஏப்ரல் 22 வருகிறது. அக்ஷயா என்றால் என்றும் குறையாதது என்று பொருள் என்பதால் உங்கள் செல்வத்தை கொழிக்கச் செய்யும் வாய்ப்பு இது!

Wellawatta Nithyakalyani Jewellery

230, Galle Road, Colombo 06.Tel: 2363392 / 2362427.
Fax : 2504933.Email : nithkal@slt.lk



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஏப்ரல் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.